සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி
இதழ்-120
ஏப்ரல் 24 - மே 08, 1997
விலை ரூபா.10.00

தீர்வு!
வாற பஜட்டோடு வருகிறது தீர்வென்று
பீரீசே சொல்லிவிட்டார் பிறகென்ன? –பாறையிலே
பூ மலரும், பகல்வெள்ளி புன்னகைக்கும், போதையுற்று
தேமதுரம் சொட்டாதோ தேள்?
–ஈழமோகம்




# திலகர் வன்னியில்?

# மன்னாரிலிருந்து படை நகர்வு?



## நாம் வன்முறையாளர்கள் அல்ல!

–பெண் போராளி



சரிநிகர்

இரு வாரங்களுக்கொருமுறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை-ரூபா.300
வெளிநாடு-U.S.S.50
(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு-05

தொலைபேசி-593615, 584380
தொலைமடல்-594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

## இ.தொ.கா.வின் முகம்!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஊழியரான ஆர்.பீ.இரட்ணம் எனப்படுபவரைச் சமூக நலன்புரிச் சங்கம் ஆரம்பிக்க முயன்றதாகக் காரணங் காட்டி மூன்று மாத கால சம்பளமற்ற விடுமுறையில் 13-07-1997 முதல்இ.தொ.கா. வெளியேற்றியிருந்தது. அது பற்றி இரட்ணம் தொழில் நீதிமன்றத் திடம் முறைப்பாடு செய்திருந்தார்.

அவருக்குச் சார்பாகத் தொழில் நீதிமன்றம் வேலையை இடைநிறுத்திய காலத்திற்கான சம்பளப் பணத்தையும், அதே வேலையையும் மீள வழங்குமாறு தீர்ப்பளித்துள்ளது.

இ.தொ.கா. இத் தீர்ப்புக்கு மேன் முறையீடு செய்தபோதும் அது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

### ஒரு திருத்தம்

இதழ் 118இல் வெளியான 'மட்டக்களப்பு மர்மக் கொலைகள்' என்ற கட்டுரையில் குறிப்பிடப்படும் குயில் என்பவர் தற்போது புளொட் இயக்கத்தில் இல்லை என்றும், புளொட் இயக்கத்திலிருந்து விலகிய மோகன் குழுவுடனும் இராணுவத்துடனும் அவருக்குத் தொடர்பு உண்டென்றும் நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

ஆ-ர்.

## தமிழர்களிடம் ஏவுகணை!

விமானங்களைத் தாக்கும் சக்தி கொண்ட ''ஸ்ரிஞ்ஜர்''(Stringer) ஏவுகணைகள் அண்மையில் மீண்டுமொரு முறை ஆப்கானிஸ் தானிலிருந்து இலங்கைத் தமிழர்களுக்கும், கட்டார், தஜிகிஸ்தான் போன்ற நாடுகளுக்கும் வழங்கப் பட்டுள்ளதாக மேற்கத்தைய ஆயுத வல்லுனர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக பிரித்தானியாவின் ''சண்டே ரெலிகிறாப்'' பத்திரிகை தெரிவித் துள்ளது.

அமெரிக்காவின் இரகசிய உளவுப் பிரிவு ஆப்கானிஸ்தானுக்கு வழங்கிய 1000இற்கும் அதிகமான ஸ்ரிஞ்ஜர் ரக ஏவுகணைகளில் இதுவரை 70 ஏவுகணைகள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கும் அப்பத்திரிகை அண்மையில் வழங்கப்பட்ட ஏவுகணைகளும் தமிழர்களால் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் பாவிக்கப்படுவதாகக் கூறுகிறது.

இவ் ''ஸ்ரிஞ்ஜர்'' ஏவுகணைகள் ஆப்கானிஸ்தான் வியாபாரிகளால் ஒன்று இரண்டு லட்சம் ஸ்ரேலிங் பவுண் வீதம் விற்பனை செய்யப் பட்டுள்ளதாக மேலும் தெரிய வந்துள்ளது.

தவறான கைகளுக்கு மேற்கூறிய ஏவுகணைகள் சென்றுள்ளதால் சிவில் விமானங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படக் கூடும் எனத் தெரிவிக்கும் ''சண்டே ரெலிகிறாப்'' பத்திரிகை மிகவும் குறுகிய பயிற்சியொன்றின் பின்பு எந்த வொரு விமானத்தையும் ஒரு கணத்தினுள் தரையில் வீழ்த்தக் கூடிய இயல்புகள் மேற்கூறிய ஏவுகணைகளுக்கு உள்ளதாக மேலும் தெரிவிக்கிறது.

(திவயின -19970413)

## ராஜகுரு வேண்டாம்!

பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பீ.ராஜகுருவை அப் பதவியிலிருந்து நீக்குமாறு கோரி ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐம்பது பேர் மட்டில் மகஜரொன்றில் கையொப்ப மிட்டுள்ளனர்.

அவசரகாலச் சட்ட விவாதம் நடைபெற்ற கடந்த 10.04.1997 அன்று இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இம் மகஜரில் கையொப்பங்களைத் திரட்டியுள்ளனராம்.

ஆளும் கட்சியின் மல்பெரி குழுவினூடாகவும் இதற்கு முன்பும் இவ்வாறான கோரிக்கையொன்று விடுக்கப்பட்டது.

ஆனாலும் அரசிடமிருந்து அதற்கு நல்ல பதில் கிடைக்காததால் அவர்களுடன் ஒன்று சேர்ந்து இந்த ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறு போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இம் மகஜரில் கையொப்பமிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுள் சில பிரபல அமைச்சர்களும் பிரதி அமைச்சர்கள் சிலரும் உள்ளனர் என்று தெரியவருகிறது.

ஆளுங் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கவனத்தி லெடுக்காது விடுவது, அவர்களின் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதில் வழங்காமை, அவர்களால் செய்யப்படும் புகார்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை ஆகிய விடயங்களைக் காரணமாகக் காட்டி இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக இவ்வாறான நடவடிக்கையொன்றை எடுத்துள்ளனர். இதற்கு முன்பும் பொலிஸ் மா அதிபரை அப் பதவியிலிருந்து அகற்றுமாறு ஆளுங் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டங்களில் பல தடவை ஜனாதிபதியிடம் வாய் வழி மூலமாகக் கோரியுள்ளனர்.

இப்போது ஐம்பதுக்கு மேற்பட்ட ஆளுங் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் கையொப்ப மிடப்பட்டுள்ள இம் மகஜர் இன்றோ, நாளையோ ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

(லக்பிம - 19970420)

## விமானியைக் காணவில்லை!

இரத்மலானையில் அத்திடிய சதுப்பு நிலத்தில் விழுந்து நொருங்கிய ஸ்ரீலங்கா விமானப் படையின் அன்ரநொவ் விமான விபத்துக்குப் பொறுப்பானவரெனக் கூறப்படும் கசகஸ்தான் விமானப் பொறியியலாளரொருவரும், இன்னொரு கசகஸ்தான் விமானியும் காணாமற் போயுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இவ் விமானப் பொறியியலாளரும், விமானியும் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கசகஸ்தானுக்கு தப்பியோடியுள்ளார் என்று கூறப் படுகின்ற போதும் அத்தகவலை விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரிகள் நிராகரிக்கவோ உறுதிப்படுத்தவோ இல்லை.

21.02.1997 அன்று அத்திடிய சதுப்பு நிலத்தில் விழுந்து நொருங்கிய அன்ரநொவ் விமானத்தின் பொறியியலாளராகச் செயற்பட்ட அந்திரெவ் ரெலஷின்இற்கு எதிராக தவறான மனிதப் படுகொலைகளுக்கு காரணமானவர் என்று வழக்குத் தாக்கல் செய்யப்பட விருந்தது. இவ் விமானத்தை ஆகாயத்தை நோக்கி மேலெழுப்பு கையில் தடைப்பூட்டு இறுக்கப் பட்டிருந்ததாலேயே விமானம் வீழ்ந்து நொருங்கியதாகக் கருத்தொன்று தெரிவிக்கப் பட்டிருந்தது. அதற்குப் பொறுப்பான பொறியியலாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட விருந்தது.

ஆனாலும் விமானப் பொறியியலாளரின் வெளிநாட்டுக் கடவுச் சீட்டை நீதிமன்றம் பறிமுதல் செய்திருக்கவில்லை. இவ் விமானம் இரத்மலானையிலிருந்து, பலாலி வரை பறக்கவிருந்த அதே சமயம் கட்டளை பிறப்பிப்பாளரான சீ.ரீ.குணவர்தன அதன் பிரதான விமானியாகச் செயற்பட்டுள்ளார். விமானம் சதுப்பு நிலத்தில் வீழ்ந்து நொருங்கியதால் ஆயுதப் படையினர் ஐவர் மட்டில் இறந்தும், இன்னும் சிலர் காயமடைந்தும் உள்ளனர்.

கசகஸ்தான் பொறியியலாளர் மீது இம் மரணங்கள் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இப் பொறியியலாளருடன் காணாமற் போனதாகக் கூறப்படும் மற்றைய விமானி யாரென அறிவதற்காக விமானப் படையின் சிரேஷ்ட அதிகாரிகள் பலருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போதும் அவர்கள் அனைவரும் அதற்குப் பதிலளிக்க மறுத்து விட்டனர்.

எவ்வாறெனினும் இவ்வாறு விமானப் படையூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து வெளிநாட்டு விமானிகளது பணிகளும் இப்போது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

(திவயின - 19970413)

## வெடிக்காத குண்டுகள்!

பாவனைக்கு ஒவ்வாத 350 கோடி ரூபாய் பெறுமதியான பெருந்தொகை எறிகணைக் குண்டுகள் கோட்டை துறை முகத்தில் கப்பல்களில் குவிந்து கிடப்பதாகத் தெரியவருகிறது.

இவ் எறிகணைக் குண்டுகள் சீனாவிலிருந்து கொண்டு வரப் பட்டுள்ளதாகவும், அவற்றின் நிறை 700 தொன்களாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இனிவரும் முப்பது வருடங்களினுள் பாவிக்கக் கூடியது என்ற உத்தரவாதத்துடன் கொண்டு வரப்பட்டுள்ள இக் குண்டுகள் ஸ்ரீ லங்கா கடற்படையின் தாக்குதல் படகுகளில் உள்ள எறிகணைகளுக்குப் பொருத்தமற்றவை எனவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாவனைக்கு உகந்தவை யல்லாததால் அவற்றைக் கடற் படைத் தளபதி பொறுப்பேற்காது நிராகரித்துள்ளார். அதனால் ஜனவரி மாதத்தில் கொண்டு வரப்பட்ட இக் குண்டுகள் இன்னும் கொழும்புத் துறைமுகத்தை விட்டு அகற்றப்படவில்லை.

அக் குண்டுகளைத் திரும்பவும் சீனாவுக்கு அனுப்பி வைக்கக் கடற்படை கருதினாலும் அதற்கான பணக் கொடுக்கல் செய்யப்பட்டு முடிவடைந்து விட்டதாகவும் அறியக் கிடைத்துள்ளது. இதனால் இதற்காகச் செலவான 350கோடி ரூபாய் நஷ்டத்தை இலங்கை அரசே தாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

(லக்பிம - 19970413)

## மண்ணெண்ணை மலிவு!

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெற்றோல் விற்பனை செய்வதற்கு 07.04.1997 முதல் பத்து நிரப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாகவும், போதியளவு பெற்றோல் யாழ்ப் பாணத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க,யாழ்ப்பாணத்தில் ஒரு லீற்றர் பெற்றோல் ரூ.77/=இற்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் டீசல் மண்ணெண்ணை மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளதுடன் யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான வாகனங்கள் மண்ணெண்ணையிலேயே ஓடியுள்ளன.

''சூரியகதிர் -1'' நடவடிக்கையினால் யாழ்ப்பாணம் மீட்டுவிக் கப்பட்டதும் ஏற்கெனவே அழிக்கப் பட்டிருந்த 68 நிரப்பு நிலையங்களில் 31 இதுவரை புனர் நிர்மாணிக்கப் பட்டு எரிபொருள் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்பின், 200ரூபாய்க்கு விற்கப் பட்ட ஒரு போத்தல் மண்ணெண்ணைய் ஒருலீற்றர் ரூபா13.45க்கும், ஒரு லீற்றர் டீசல் 21/55க்கும் விற்பனை செய்யப்பட ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நிரப்பு நிலையங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக ஏறத்தாழ ஒரு கோடி ரூபா செலவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணை 15இலட்சம் லீற்றரும், டீசல் 80 ஆயிரம் லீற்றரும் மாதமொன்றுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே எரிபொருள் வழங்கப்படுகிறது.

(திவயின- 19970414)

## வீண் விரயம்!

பல்வேறு முறைகேடுகள் ஊழல்களில் சம்பந்தப்பட்டவர்கள் என ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எல்.எம். பெர்னாண்டோவின் தலைமையிலான மூன்று நபர்களைக்கொண்ட குழுவினரால் குற்றம் காணப்பட்ட, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (ச.தொ.ச.) சிரேஷ்ட அதிகாரிகள் 10 பேர் ஜனாதிபதியின் உத்தரவின் மீது கட்டாய விடுமுறையில் அனுப்பப் பட்டிருந்தனர். ஆயினும் இவர்களுக்கு கடந்த பதினொரு மாத காலமாக இலட்சக் கணக்கான ரூபாய்கள் சம்பளமும் இதர சலுகைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இது பொது மக்களின் பணம் வீணாக்கப்படுவதைப் போலவே பெரும் அநியாயமுமாகும் என கூ.மொ.நி. அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானவர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

(திவயின - 19970413)

## கயிறிழுப்பு!

திருகோணமலை அபயபுர பிரதேதத்தில் புத்தாண்டு கயிறு இழுத்தல் போட்டி நிகழ்ச்சியொன்றில் போது மக்கள் அணியிடம் பொலிசாரின் அணி தோல்வி கண்டது. இதனால் ஆத்திரமடைந்த பொலிசார் அதே இடத்தில் அன்று மாலை நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றின் போது புழுதி கிளப்பும் விதத்தில் ஆடி ஊறு விளைவித்துள்ளார்கள். இதனால் ஏற்பட்ட கைகலப்பை அடுத்து ஆத்திரமடைந்த பொலிசார் பொது சனங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அபய புரத்தைச் சேர்ந்த றொஹான் சமிந்த (24), மஹாமாயாபுரவைச் சேர்ந்த ரவீந்திர குமார (21) ஆகிய இருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளதுடன், பொலிசார் இருவர் உட்பட மொத்தம் 7பேர் காயமடைந்து திருகோணமலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அச்சம்பவத்தின் போது ரீ56 ரகத் துப்பாக்கியின் 75 குண்டுகள் பாவிக்கப்பட்டுள்ளன.

(திவயின - 19970417)

மிக விரைவில் யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப்பாதையைத் திறப்பதற்கான மாபெரும் அரச படையெடுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. இது அநேகமாக மன்னாரிலிருந்து கரையோரமாக பூநகரி நோக்கிச் செல்லும் பாதையாக இருக்கலாம் என ஒரு ஊகம் நிலவுகிறது. வவுனியாவிலிருந்து புளியங்குளம், மாங்குளம் ஊடாக கிளிநொச்சியை அடைவதற்கான படைக்குவிப்புகள் ஏதும் தற்சமயம் காணப்படாத காரணத்தாலேயே படையெடுப்பு மன்னாரிலிருந்து ஆரம்பமாகலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. இப்படையெடுப்பிற்கென ஏராளமான தயாரிப்புகளில் இராணுவத் தலைமைப்பீடம் கடந்த மூன்று மாதங்களாக ஈடுபட்டு வருகிறது. கிளிநொச்சியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட சத்ஜெய 3 படை நகர்வு புலிகளின் எதிர்த் தாக்குதலால் முன்னேற முடியாமல் போன காலத்திலிருந்து தரைப் பாதை திறப்பதற்குக் குறைந்த பட்சம் பதினையாயிரம் மேலதிக படையினராவது தேவை என அரசு கூறி வந்துள்ளது. இதனையிட்டு கட்டாய ஆட்சேர்ப்பில் இறங்குவதைப் பற்றியும் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது. எனினும், கட்டாய ஆட்சேர்ப்பினால் ஏற்படக்கூடிய அரசியல்எதிர்விளைவுகளை உத்தேசித்து இத்திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் கடந்த ஆறு மாதங்களாக நடைபெற்ற ஆட்சேர்ப்பினூடாகப் பெற்ற படையினரை போர் நெருக்கடி குறைந்த இடங்களில் போட்டும், அவ்விடமிருந்த அனுபவமிக்க படையணிகளை வெளியெடுத்தும், குடாநாட்டில் பொலிசாரின் கீழ் தற்போது கொண்டு வரப்பட்ட பகுதிகளிலிருந்து படைகளை மாற்றியும் ஒரு பெரும் படையணி (Division) அண்மையில் உண்டாக்கப்பட்டது. இந்தப் படையணியே குடாநாட்டிற்கான தரைவழிப்பாதையை கட்டுப்படுத்தும் எனக் கூறப்படுகிறது.

பரந்தன் படைத்தளத்தின் மீது மேற்கொண்ட தாக்குதல்களைப் போன்று புலிகள் இடையிடையே இத்தரைப் பாதையினைக் காக்கும்



# மன்னாரிலிருந்து படையெடுப்பு?

அணிகள் மீது தாக்குதல்களைத் தொடுப்பினும் தாம் தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கான போக்கு வரத்தைப் பேண முடியும் எனத் திட்டவட்டமாக நம்புகின்றனர் படைத்துறைத்தலைமையகத்தினர். தரைவழிப்பாதையினைத் திறப்பதற்கான படையெடுப்பின் பெறுபேறுகளை கணக்கிலெடுத்த பின்னரே பெரும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கும் இலங்கை விமானப் படைக்கான கொள்வனவுகளில் ஈடுபடுவதென அரசு தீர்மானித்துள்ளது. தற்சமயம் குடாநாட்டிற்கான வழங்கல்கள், மற்றும் போக்குவரத்து விடயங்களில் விமானப் படை ஓய்வின்றி ஈடுபடுத்தப்படுவதால் பலத்த நெருக்கடிகளுக்கு அரசு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது இதன் காரணமாக இவ் வேலைகளை உக்ரேனிய விமான நிறுவனத்திடமும், லயன் கோல் எனப்படும் ஒரு அமெரிக்கத் தனியார் கம்பனியிடமும் இலங்கை அரசு கையளித்துள்ளது. ஆகாய வழிப்பாதையும், கடல்வழிப் பாதையும் தொடர்ந்து கடும் நெருக்கடிக்குள்ளாகி வருவதனால் அரசின் செலவும் கூடுகின்றது. யாழ்ப்பாணத்தை சுமூக நிலைக்குக் கொண்டு வரமுடியாதுள்ளது. எனவே தான் தரைவழிப்பாதைப் படையெடுப்பு துரிதப்படுத்தப்படுகிறது. இதில் புலிகள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

மன்னாரிலிருந்து கரையோரமாகப் படைநகர்வு மேற்கொள்ளப்படுமாயின் பெருங்காடுகளற்ற அப்பிரதேசத்தில் புலிகள் கடுமையாக எதிர்த்துப் போரில் ஈடுபட முடியாதிருக்கும் என இராணுவம் நினைப்பதாகத் தெரிகிறது.

இப் படையெடுப்பின் நோக்கம் நிறைவேறினால் புலிகளை வன்னியின் கிழக்குப் பகுதிகளுக்குள் முடக்கி விடலாம் என்ற எதிர் பார்ப்பும் இராணுவத்திடம் உண்டு. இதன் பின்னர் தொடர்ச்சியாக முல்லைத்தீவுக் கரையோரத்தைத் தாக்கி வந்தால் புலிகளுக்கு வெளியிலிருந்து கிடைக்கக் கூடிய தளபாட உதவிகள் வருவது கடினமாகிவிடும். இதனால் அவர்கள் மேலும் பலவீனமாகி விடுவார்கள் என்பதும் ஒரு கணக்கு.

அண்மையில் இதற்கென கடற்படையின் தரையிறங்கு கலமொன்றில் போர்த் தாங்கியொன்றை ஏற்றிச் சென்று அதன் பீரங்கி மூலமாக சாலை, அலம்பில் பகுதிகள் கடும் எறிகணைத்தாக்குதலுக்குள்ளாகின. தமது நடவடிக்கைகளின் காரணமாக அண்மைய காலத்தில் முல்லைப் பகுதியில் புலிகளுக்குக் கடும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக முப்படைத்தலைமைப் பீடங்களும் வழமைபோல் கொக்கரித்துள்ளன. இதன் சுருக்கமான உண்மையென்னவெனில், புலிகள் தாம் இதுகால வரை கையகப்படுத்திய ஏழு 120 மி.மீ கனகர ஏவுகணைச் செலுத்திகளையும், இரு 122 மி.மீ பீரங்கிகளையும், ஒரு 85 மி.மீ. பீரங்கியையும் இன்று மட்டும் முழுமையாக ஒரு தாக்குதலிலும் பயன்படுத்தவில்லையென்பதும்

அங்ஙனம் அவை பயன்படுத்தப்பட்ட பின்னரே மூன்றாம் ஈழப் போர் எவ்வகையான பாதையிற் செல்லும் என்பதைத் தீர்மானிக்க முடியும் என்பதுமாகும்.

தரைவழிப் பாதையை திறந்து விட்டால் ஈழப்போரின் சமநிலை தன்பக்கம் சரிந்து விடும் என அரசு எண்ணுவது பேதமை அன்றி வேறில்லை. ○

டி.சிவராம்

---



# வவுனியா: கோர விபத்துக்களும் விகார மரணங்களும்!

வவுனியாவில் வீதிவிபத்துக்கள் மிகச் சாதாரணமாகி விட்டன. இதனால் இடம் பெயர்ந்து வந்துள்ளவர்கள் உட்பட பல அப்பாவிகள் அநியாயமாக உயிரிழந்து வருகின்றனர்.

வவுனியாவின் சனத்தொகை முன்னெப்போதுமில்லாத அளவில் இப்போது அதிகரித்துள்ளது. வவுனியாவில் செயற்பட்டு வருகின்ற வடமாகாணம் இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரி, பூந்தோட்டத்தில் அமைந்துள்ள கல்வியில் கல்லூரி போன்ற உயர் கல்விநிறுவனங்களின் ஸ்தாபகமே முதலில் வவுனியாவில் குடித் தொகையை அதிகரித்தது.

அதனையடுத்து இடம்பெயர்ந்த நிலையில் இங்கு வந்து தஞ்சமடைந்தவர்களும், உத்தியோகரீதியாக இங்குள்ள பாடசாலைகளில் அரச அலுவலகங்களில் இணைந்து கொண்டவர்களும், இடம்பெயர்ந்தவர்களுக்கென இங்கு அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்களும், இடம்பெயர்ந்து வந்துள்ள மாணவர்களுமாக சனத்தொகை இங்கு பெருகியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நகர சபையின் எல்லைப்பகுதிகளுக்குள்ளேயே அதிகரித்துள்ள சனத்தொகையினர் குடியிருக்கின்றனர். இதனால் வவுனியா நகர வீதிகள் பொது இடங்கள் என்பவற்றில் மக்களின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதேவேளையில் பாதுகாப்புத் தேவைகளுக்கென பல்வேறு வகைகளிலும் எண்ணிக்கையில் அதிகரிக்கப்பட்டுள்ள படைவீரர்கள், பொலிசாரினாலும் கூட சனத்தொகை அதிகரித்துள்ளது.

வீதிகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் போக்குவரத்தும் அதிகரித்து வீதிகளில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே கண்மண் தெரியாமல் காது செவிடுபடும்படி ஹோர்ன் ஒலியை முழப்பிக் கொண்டு ஓட்டிச் செல்லும் ஓட்டோக்களும் வாகனங்களும் சைக்கிளோட்டிகள், பாதசாரிகளின் உயிர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன.

இதற்கு மேலாக படைவீரர்களினதும் பொலிசாரினதும் ட்ரக்குகள், லொறிகள், பவுசர்களின் வீதி ஒழுங்குகளை மதிக்காத ஓட்டமும், சந்திகள் சன நெருக்கடிமிக்க இடங்களில் கவனயீனமாக வாகனங்களை நிறுத்தி வைத்தலும் வாகன போக்குவரத்துகள் பாதசாரிகளின் பாதுகாப்பான நடமாட்டம் என்பவற்றுக்கு பெரும்இடையூறாக உள்ளன. அத்துடன் பல விபத்துக்களுக்கும் உயிழப்புகளுக்கும் காரணமாகியுள்ளன.

கடந்த சனிக்கிழமை மாலை மடுக்கந்தை மாமடு பக்கமாக இருந்து தாண்டிக்குளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினரின் லொறி ஒன்றில் மோதுப்பட்ட 19வயது இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

சாஸ்திரி கூழாங்குளத்தைச் சேர்ந்த அவர் வெளிநாட்டில் உள்ள தந்தையிடம் செல்வதற்காக தாண்டிக்குளம் ஊடாக வவுனியா நகருக்குள் வந்து வேப்பங்குளம் முகாமில் தங்கியிருந்தார்.

உறவினரைப் பார்த்துவிட்டு சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த போது தான் இந்த அனர்த்தம் நேர்ந்து உயிரிழந்துள்ளார். லோகநாதன் சசிகுமார் என்ற அந்த இளைஞனின் தந்தை ஜேர்மனியில் உள்ளாராம். தாயார் சாஸ்திரிகூழாங்குளத்தில், தங்கை ஒருவர் வவுனியா நகரப் பாடசாலை ஒன்றில் கல்வி பயில்கிறார். இவரது உடலை பொறுப்பெடுப்பதற்குக் கூட தாயார் தாண்டிக்குளத்தைக் கடந்து வரமுடியாத நிலை. வவுனியாவில் உள்ள உறவினர்களே உடலை பொறுப்பேற்றுள்ளனர்.

இதேபோன்று முகாம்களில் வந்து தங்கியிருந்த குடும்பப்பெண் ஒருவரும் வவுனியா கண்டிவீதியில் படையினரின் வாகனம் மோதியதில் மரணமானார்.

பிரவுண் கம்பனியருகில் - யாழ் வீதியில் பொலிஸ் பாஸ் பெறச் சென்ற சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி கஜேந்தினி (16) என்பவர் சில வாரங்களுக்கு முன்னர் இராணுவ பாதுகாப்புடன் செல்லுகின்ற உணவு விநியோக வாகன அணியில் சென்ற லொறி ஒன்று மோதியதில் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இவ்வாறான வாகன விபத்துக்களில் உயிரிழந்தவர்கள் அனைவருமே வாகனச்சில்லுகள் உடல் மீது ஏறியதால் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளார்கள்.

ஏன் இவ்வாறான கோரமான வாகன விபத்துக்கள் நேர வேண்டும்?

இவற்றைத் தடுப்பதற்கு உறுதியான சட்ட நடவடிக்கைகளும் தடுப்பு நடவடிக்கைகளும் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும்என்ற சிந்தனை பொறுப்பானவர்கள் மத்தியில் தோன்றியதாகத் தெரியவில்லை.

ஏனெனில், உயிர் இழப்பவர்கள் அனைவரும் தமிழர்கள் தானே என்ற எண்ணமோ தெரியவில்லை. சிவில் நிர்வாகம் நடைபெறுகின்ற வவுனியாவில் பொலிசார் கடமையில் ஈடுபடுகின்றார்கள். பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்துப் பிரிவு ஒன்று செயற்பட்டு வருகின்றது. ஆனால் வீதிப்போக்குவரத்தில் சட்டமும், ஒழுங்கும் முறையாகப் பேணப்படுவதாகத் தெரியவில்லை. விபத்தில் சம்பந்தப்பட்ட படை வாகனங்கள், சாரதிகள் சாதாரண சட்ட விதிக்கமைய விசாரணைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரியவில்லை.

இதனால், கோரமான வாகன விபத்துக்களும் விகாரமான மரணங்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

தம்பு சிறீநாவுக்கரசு ○

## மட்டக்களப்பு:

# மனம் மாறாத புலிகள் பழி வாங்கும்! படையினர்! பரிதவிக்கும் மக்கள்!



கிழக்கின் இன்றைய இராணுவ நடவடிக்கையைப் பொறுத்தவரையில் மனித உரிமைகள் மீறப்படுவது மிகச்சர்வ சாதாரணமாகிவிட்டது. தினமும் இவ்வாறான நடவடிக்கைகளினால் மக்கள் தலைதெறிக்க ஓடும் ஓர் இடமாக இருப்பது மட்டுமல்லாமல், எங்கோ ஒரு மூலையில் தினமும் ஒரு சில நிமிடமாவது துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டுக் கொண்டே இருக்கும் இடமாகவும் மட்டக்களப்பு இருந்து வருகின்றது. கடந்த சில வாரங்களாக மட்டக்களப்பின் வழமையான நிலை முற்றாக மாறிக்கொண்டு வருகின்றது. அன்னை பூபதியின் 9வது ஆண்டு தினத்தை ஒட்டி புலிகள் பரவலாக எல்லா இடங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டுவதும், நினைவுக் கொண்டாட்டங்கள் நடத்துவதுமாகவே இருந்து வருகின்றனர். இந்நினைவு தினத்தை ஒட்டி எந்த நேரத்திலும் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு இராணுவத்தின் கெடுபிடிகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றது. துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்ட இடங்களின் 'அஞ்சியவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்' என்பது போல் ஆயுதப்படையினருக்கு அயலில் உள்ள பொதுமக்கள் அனைவரும் புலிகளாகத் தெரிகின்றனர். இதனால் அம்மக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்குகின்றனர். இவ்வாறான வேளைகளில் புலிகளும் மறைந்திருந்து கெரில்லாத் தாக்குதல்களை மேற்கொள்வதனால் பொது மக்களே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான வேளைகளில் புலிகள் பொது மக்கள் உள்ள இடங்களில் தாக்குதல்களை நடத்துவதில் எந்தவித மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இவ்வாறான தாக்குதல்கள் நடந்து முடிந்தபின் புலிகளுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்ல. எங்கள் இனத்தின் ஒருவர் பலியானால் உங்கள் இனத்தின் 10 பேர் பலியாக வேண்டும். அது புலியாக இருந்தால் என்ன அப்பாவியாக இருந்தால் என்ன என்ற வக்கிரத்தில் பழிதீர்த்துக் கொள்ளும் சம்பவங்களே தொடர்ந்து மட்டக்களப்பு பகுதியில் இடம் பெற்று வருகின்றது.

ஏப்ரல் முதலாம் திகதியன்று ஏறாவூர் பொலிஸ்சோதனைச்சாவடிக்கு அருகில் உள்ள கடை ஒன்றின் கூரையில் இருந்து காலை 9 மணியளவில் குண்டொன்று வெடித்ததால் பி.ஜி. விஜயரத்தின என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஸ்தலத்தில் மரணமானார். விஜயரத்தின மரணமானதைக் கண்ட சகபாடிகளின் சீற்றம் ஏறாவூர் தமிழ்ப் பிரதேசங்களை நோக்கி ஷெல் மழையாகப் பொழியத் தொடங்கியது. கடமைக்கு வீதிகளில் இருந்த பொலிசார் கண்டபடி நாலாபுறமும் எறிகணைத் தாக்குதலினால் ஏறாவூர் 5ஐச் சேர்ந்த தம்பிமுத்து ஜெயதேவியும், அவரது மகன் பச்சிளம்பாலகன் சஞ்சிவனும் மரணமானார்கள். இவ்விடத்தில் இருந்த இரண்டு வயதுப்பாலகன் சஞ்சித், சி. ஜெயராணி, கனகசூரியம் தங்கம்மா ஆகியோர் காயங்களுக்குள்ளானார்கள். ஏறாவூர் ஐயங்கேணியைச் சேர்ந்த சௌந்தரராஜன் அருட்செல்வி என்ற 8மாதக் கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றை எங்கோ இருந்து வந்த துப்பாக்கிக்குண்டு பதம்பார்த்துச் சென்றது. அருட்செல்வி ஆபத்தான நிலைமையில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு, குழந்தையை வெளியே எடுத்து ஒரு சில மணிநேரத்தின் பின் குழந்தை இறந்த அந்த பரிதாபகரமான சம்பவமும் நிகழ்ந்திருக்கின்றது. உலகத்தைக் கண்டிராத அந்த சிசு யாருக்கு என்ன தீங்கு நினைத்ததோ?

அதேசமயம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கொம்மாந்துறை இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தவண்ணம் வீதியால் வந்ததால் அருகிலுள்ள பாடசாலைகளில் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவர்கள் பாதியில் விட்டு விட்டு நாலாபுறமும் சிதறி ஓடினர்.

ஏப்ரல் 12ம்திக்தி செங்கலடி வீதியில் 11மணியளவில் சென்று கொண்டிருந்த சிவில் உடை தரித்த பொலிசார் மீது புலிகள் துப்பாக்கி பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து பொலிசாரும், இராணுவத்தினரும் கண்மூடித்தனமாக பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர். இராணுவத்தினர் கவசவாகனத்தில் இருந்தே தங்களது பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் புதுவருடத்துக்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சந்தைக்கு வந்த மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு, சிதறி ஓட ஆரம்பித்தனர். இச்சம்பவத்தில் ஏறாவூரைச் சேர்ந்த ஏ.எம்.ஹனிபா, செங்கலடியைச் சேர்ந்த கே.சுந்தரதேவி ஆகியோரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுந்தரதேவி இரண்டு பிள்ளைகளின் தாய். இவர் தனது பிள்ளைகளுக்கு புதுவருடத்துக்கு துணி எடுப்பதற்கு சந்தைக்கு வந்தபோதே இந்த கோரச்சம்பவம் நிகழ்ந்ததாக கூறினார். அன்னை பூபதியின் நினைவு தினவாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைக் கழற்றிச் சென்ற வாழைச்சேனை துறைமுகவத்தினர் அவரை அவ்விடத்தில் வைத்து சுட்டுள்ளனர். இவரது பிரேதத்தை எடுத்துச் சென்று முறக்கொட்டாஞ்சேனை ஆற்றங்கரையில் போட்டுவிட்டு சென்றுவிட்டனர். இவர் திருமணமாகி இருவாரங்களிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தை நேரில் பார்த்துக்கொண்டிருந்த இவரது மனைவி மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்.

பொலிசார் மீது ஏப்ரல் 16ந்திகதி பகல் 12மணியளவில் வாழைச்சேனை மக்கள் வங்கிக்குமுன் புலிகள் துப்பாக்கி பிரயோகம் செய்ததையடுத்து அரை மணித்தியாலத்துக்கு மேலான பதில் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலின் போது சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த கஹாலி, ஆதம்லெவ்வை, ச. சக்திவேல், ஆகியோர் இறந்துள்ளனர். முஹமட் முகைதீன், தெய்வானை, மனோகரன், புகாரி, சாமித்தம்பி, சிவராசா ஆகியோர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தினால் இரண்டுநாட்களாக வாழைச்சேனை நகர் வெறிச்சோடிக்கிடந்தது.

சித்தாண்டியைச்சேர்ந்த ஆறுமுகம் குமரன் என்னும் இளைஞன் ஏப்ரல் 4ம்திகதி மாலை 6மணியளவில் தனது நண்பர்களுடன் வீட்டுப் படலையடியில் கதைத்துக்கொண்டிருந்த போது அவ்வீதியால் வந்து கொண்டிருந்த முறக்கொட்டாஞ்சேனை இராணுவத்தினர் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். குமரன் தோளில் துப்பாக்கி சூட்டுடன் தனது வளவிற்குள் சென்றுள்ளார். வளவிற்குள் சென்ற இராணு இராணுவத்தினரோடு சேர்ந்து இருக்கும் தமிழ்க் குழுக்களும் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயல்களில் இறங்கி வருகின்றனர்.

ஏப்ரல் முதலாம் திகதி நள்ளிரவு ஒருமணியளவில் பெரிய நீலாவணையைச் சேர்ந்த இராமலிங்கம் புஸ்பராஜா என்பவர் ராசிக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் புலிகளின் ஆதரவாளர் என்பதால் சுட்டோம் என்று கூறுகின்றனர். செஞ்சிலுவைச்சங்க மூலமாக இவரது சடலத்தை புலிகளிடம் அனுப்பிய போது புலிகள் ஏற்கமறுத்து விட்டனராம். இவ்வாறாக கண்மூடித்தனமாக இளைஞர்களைச்சுட்டுப்பொசுக்கும் சம்பவங்களும் இடம்பெறுகின்றது. பட்டிருப்பு பாலத்து சோதனைச் சாவடி, பெரியகல்லாறு சோதனைச் சாவடிகளில் இருக்கும் பொலிசார் மதுபோதையில் இருந்து கொண்டு இதனூடாகச் செல்லும் பெண்களுடன் கெட்ட வார்த்தைகளினாலும், தகாதமுறையிலும் நடந்து கொள்கின்றனர். இதனால் இதனூடாக பெண்கள் தனியாகச் செல்வதற்கு பயப்பட வேண்டி நிலையுள்ளது.

இதேவேளை அம்பிளாந்துறையினூடாகப் பயணம் செய்யும் அரச ஊழியர்களிடம் நாளாந்தம் அதிரடிப்படையினர் புலிகளைக் கண்டீர்களா என நச்சரிக்கின்றார்கள். இவ்வாறாக கேட்டு புலிகளை காணவில்லை என்ற அரச ஊழியர் ஒருவர் அண்மையில் தாக்கப்பட்டுள்ளார். படுவான்கரைப்பிரதேசத்தில் கடமை புரியும் அரச ஊழியர்கள் தினமும் படையினரால் துன்புறுத்தப்படுகின்றனர். கடந்த சில வாரங்களாக நகர் புறங்களிலுள்ள வீடுகளில் சோதனை அதிகரித்து வருகின்றது. வீட்டை சோதனை செய்தபின் அங்கிருக்கும் இளவயதினரை எதுவிதகாரணங்களும் இன்றி கைது செய்து கொண்டு செல்கின்றனர். இது போன்று படுவானில் இருந்து நகருக்கு வரும் இளைஞர் யுவதிகளையும் அழைத்துச் செல்கின்றனர். இவ்வாறு கொண்டு செல்பவர்கள் பற்பொடி கம்பனி என அழைக்கப்படும் இராணுவ முகாமுக்கே கொண்டு செல்லப்படுகின்றனர். இங்கு கொண்டு செல்பவர்களில் காணாமல் போகும் பட்டியலில் இடம் பெறும் சம்பவங்களும் உண்டு.

மதன்

# மனமுண்டானால் இடமுண்டு!

இந்த மாதத் தொடக்கத்தில் துணை வெளிநாட்டமைச்சர் ஷியாம் ஃபொக்ஸ் இன் முயற்சியில் கைகூடிய சந்திரிகா - ரணில் இணக்கப்பாடு இந்நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கப்போகின்றது என்ற நம்பிக்கை பரவலாக வெளிப்படுத்தப்பட்டது. பத்திரிகைகள் இந்த ஒப்பந்தம் அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்துவதில் எழக்கூடிய சிக்கல்களை தவிர்க்கும் ஒரு முக்கியமான நடவடிக்கை என்று வர்ணித்தன.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இலங்கையின் அரசியல் வரலாற்றில் செய்யப்பட்ட அனைத்து முயற்சிகளும் அப்போதிருந்த எதிர்க்கட்சிகளால் எதிர்க்கப்பட்டதும் அவை நடைமுறைக்கு வராமலே போனதும் தெரிந்த கதை.

இந்த வரலாற்றின் காரணமாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இரண்டு கட்சிகளும் ஐக்கியப்பட்டு இணங்கி வருவது என்பது ஒரு தீர்வுக்கு தவிர்க்க முடியாத முன்நிபந்தனை யாகும் என்பதை யாவராலும் விளங்கிக்கொள்ளக்கூடிய உண்மையாகும். இதுவே இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க இந்த இணக்கப்பாடு ஒரு முக்கியமான அம்சமாக பத்திரிகைகளில் வர்ணிக்கப்படுவதற்கான காரணமாகும்.

இந்த உடன்படிக்கையின் பின்னணியைப் பற்றிய தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன, பிரித்தானிய அரசாங்கமும், அதன் வெளிநாட்டு அமைச்சும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே இவ்வாறான ஒரு உடன்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன. இந்த நோக்கத்திற்காகவே பாரிசிலிருந்து நேபாளம் வழியாக வன்னி நோக்கி திலகர் வந்தாரென்றும் அவர் பிரபாகரனுடன் இதுபற்றிப் பேசிய பின் மீண்டும் திரும்பிச் சென்று பிரித்தானிய வெளிநாட்டமைச்சுடன் பேசியதாகவும் இதன் பின்னரே இந்த இணக்கப்பாட்டுக்கான முயற்சியில் ஷியாம் ஃபொக்ஸ் இறங்கினாரென்றும் கூறப்படுகிறது. பத்திரிகையாளர்களுக்கு அமைச்சர் கதிர்காமரால் வெளிப்படுத்தப்பட்ட இணக்கம் தொடர்பான கடிதங்கள் பிரித்தானியாவிலிருந்து நகல்வடிவில் தயார் செய்யப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டதாகவும், அவற்றில் ஒரிரு திருத்தங்கள் செய்யப்பட்டபின்னர் இருவரும் கைச்சாத்திட்டனர் என்றும் தெரியவருகிறது.

எனவே, இப்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் ஒரு மூன்றாவது சக்தியாக பிரிட்டன் நுழைந்துள்ளது. என்பதே வெளிப்படையாகத் தெரியும் உண்மையாகும். புலிகளுடன் இலங்கை அரசாங்கம் பேசுதல் வேண்டும் என்பதே பொதுவாக அனைத்து உலகநாடுகளதும் அபிப்பிராயமாக - அதுவும் மிக அண்மைக்காலமாக - இருந்து வருகிறது. இணக்கம் கைச்சாத்தாகிய ஒரிரு தினங்களுக்குள் அது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, 'அரசாங்கம் புலிகளுடன் பேசப் போகிறது. அதனால் தான் எம்முடன் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளது என்று நினைக்கின்றேன். வேறு காரணங்கள் எனக்குப் புரியவில்லை.' என்று தெரிவித்து இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. தவிரவும் பேச்சுவார்த்தைக்காக ஏற்கெனவே திலகருடன் பாலசிங்கமும் ஐரோப்பா பயணமாகியுள்ளதாகவும் ஒரு உறுதி செய்யப்படாத தகவல் கூறுவதையும் இதுனுடன் இணைத்துப்பார்க்க முடியும்.

இவையெல்லாம் பொதுவாக நம்பிக்கைத் தருகின்ற விடயங்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இவ்வாறான ஒரு ஒப்பந்தத்தை வெறும் கண்துடைப்புக்காக செய்து விட்டு அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபடாமலே இருந்துவிடுமோ என்ற அச்சமும் கூடவே எழாமல் இல்லை. இந்த அச்சத்திற்கு காரணமும் இருக்கவே செய்கிறது. தாம்புலிகளுடன் பேசுவதானால், புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் மாற்றிவிட்டதாகத் தெரியவில்லை. மாறாக, அமைச்சர் கதிர்காமர் தனது அண்மைக்காலப் பேச்சொன்றில் இந்த விடயத்தைத் திரும்பவும் வலியுறுத்தியிருக்கிறார். புலிகளோ இலங்கை அரசாங்கத்தின் படைகள், 1995இல் இருந்த நிலைகளுக்குத் திரும்பாமல் பேச்சுவார்த்தை சாத்தியமில்லை என்ற நிலைப்பாட்டையே தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் பேச்சுவார்த்தை ஒன்று நடப்பது சாத்தியம் தானா என்ற சந்தேகம் எழுவது நியாயமே.

தவிரவும், அரசாங்கம் இந்த உடன்பாட்டின் பின் இதுவரை பேச்சுவார்த்தைக்கான எந்த முயற்சிகளிலும் ஈடுபடுவதாக தெரிய



தான் தனது முதலாவது தீர்வுத்திட்டத்தை நகல் அறிக்கையாக வெளியிட்டது. ஆக, ஆயுதங்களைக்கீழே போடுவது என்பது எந்தவிதத்திலும், புலிகளுக்கோ, தமிழ் மக்களுக்கோ நன்மை அளிக்கப் போவதில்லை, எனவே அந்தக் கோரிக்கைக்கு புலிகள் செவிசாய்ப்பார்கள் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. புலிகளும் இதைத் தெளிவாகவே தெரிவித்துவிட்டார்கள். அப்படியிருந்தும் இந்த அரசாங்கம் இக்கோரிக்கையை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது என்றால், அதற்கு இரண்டே இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும். ஒன்று புலிகளுடன் பேசுவதை அது

அமைவது பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பை இல்லாமல் செய்வதற்கு மட்டுமே பயன்பட முடியும்.

இவையெல்லாம் எவ்வாறிருப்பினும், இன்னொரு முக்கியமான கேள்வியும் இங்கு எழவே செய்கிறது. அதுதான் ஐ.தே.கவின் இன்றைய தீர்வுத்திட்டத்தைப் பற்றிய நிலைப்பாடு ஆகும். ரணில் ஜனாதிபதி இணக்கப்பாடு, இத்தீர்வுத்திட்டத்தை ஐ.தே.க. ஏற்றுக்கொண்டிருப்பதாக அர்த்தப்படுத்திக்கொள்ள காரணமாக இருக்க முடியாது என்று அது ஏற்கெனவே அறிவித்து விட்டது. உண்மையில் இந்தத் தீர்வுத்திட்டத்தில் கைச்சாத்திட்ட இரு தலைவர்களும் கட்சிகள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாகக் கொண்டிருக்கும்நிலைப்பாட்டில் பாரியளவு வேறுபாடுகள் இல்லை. இருவரது அபிப்பிராயங்களும் ஏறக்குறைய ஒன்றேதான். தமிழ் மக்களின் அரசியல் ஜனநாயக உரிமைகளை முடிந்தளவுக்கு நசுக்குவது என்பதே அந்த நிலைப்பாடு ஆகும். ஆனால், அந்த விடயத்தில் அவர்கள் இருவரும் ஒரே நிலைப்பாட்டை வெளிக்காட்டுவது அவர்களின் வேறுபடுத்தும் அரசியல் (Differenciative Marketing) சந்தைப் படுத்துதலைப் பாதிக்கும் என்பதால் அவை ஒன்றுடன் ஒன்று ஒத்து




வில்லை. புலிகள்தரப்பிலிருந்து வெளியான தகவல்கள் அத்தகைய முயற்சிகள் எதுவும் நடப்பதாகத் தெரிவிக்கவில்லை. எனவே இது வெறுமனே பத்திரிகைகள் தமது ஆசைக்கு எழுதித்தள்ளிய விவகாரம் தானா என்ற சந்தேகமும் எழவே செய்கிறது.

இதனால் தான்போலும் த.வி.கூ. தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் கூட இணக்கப்பாடு அர்த்தமுள்ளதாக அமைய வேண்டுமானால், அரசாங்கம் புலிகளுடன் பேசப் போகவேண்டும் என்று அறிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு பேசுவதற்கு வரவேண்டும் என்ற அரசாங்கத்தின் கோரிக்கை கொஞ்சமும் காரிய சாத்தியமற்ற ஒரு கோரிக்கையாகும். ஆயுதங்களை புலிகள் கீழே போடுவார்கள் என்றால் அதன் பின் பேச வேண்டிய அவசியம் இலங்கை அரசாங்கத்திற்குஇல்லாமலே போய்விடும். இலங்கையின் காலங் காலமாக வந்த எந்த அரசாங்கங்களும் தாமாகவே மாறிவந்து இனப்பிரச்சினைத் தீர்க்க முன்வந்ததில்லை. இன்றைய அரசாங்கமும் கூட 1995 ஏப்ரலில் மீண்டும் யுத்தம் வெடித்த பின்னர்

உண்மையில் விரும்பவில்லை. இரண்டாவது, யுத்தத்தில் புலிகளை அழித்துவிட்டால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்பது. அண்மையில் ஜனாதிபதியே இந்த நாட்டில் இருப்பது வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே என்று விஜேதுங்க பாணியில் அறிவித்திருந்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அதேவேளை அரச படைகள் பழைய நிலைகளுக்குச் செல்ல வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையும் கூட யதார்த்தமற்றதே. அந்தக்கோரிக்கை பேச்சுவார்த்தை வெற்றிபெறும் பட்சத்தில் அவசியமான ஒன்றே என்ற போதும் பேச்சுக்கு அது முன்நிபந்தனையாக



நிற்பதில்லை, ஆனால், இன்று பிரிட்டனின் நிர்ப்பந்தம் காரணமாக இருவரும் இவ்விடயத்தில் உடன்பட்டாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளனர்.

ஒருவகையில் இது அவர்களின் அரசியலுக்கு வாய்ப்பான ஒன்று தான். அமைச்சர் கதிர்காமரின் வார்த்தைகளில் சொல்வதானால், இவ்விணக்காப்பாடு அவர்களின் 'நீண்டதூரப் பயணத்திற்கு எடுத்து வைக்கப்பட்டுள்ள முதற்காலடியாகும்'. ஆம், அவர்கள் இருவரும் இணைவதன் மூலமாக இருவரும் ஒத்துவருகின்ற தீர்வு ஒன்றினை தமிழ் மக்களது தலையில் கட்டிவிட வாய்ப்பளிக்கக் கூடிய ஒரு இணக்கப்பாடாகவும், கொள்வதில் தவறில்லை. ஏற்கெனவே அரசாங்கம் ஆரம்பத்தில் வெளியிட்ட நகல் வெட்டு வெட்டென்று வெட்டிக் குறைக்கப்பட்டு ஒரு புஸ்வாணத் திட்டமாக விட்டிருப்பதாக அரசியலமைப்பு சட்ட வல்லுனர்கள் தெரிவிக்கின்றார்கள். இப்போதுள்ள நிலையிலேயே இந்தத் திட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமா என்ற சந்தேகம் பொதுவாக எழுப்பப்படுகிறது. இந்த நிலையில் இரண்டு கட்சிகளும் ஒத்துப் போகும் ஒரு திட்டம் எப்படி

அமையும் என்பது குறித்து யாரும் சந்தேகம் கொள்ளாமல் இருக்க முடியாது.

தவிரவும், ஜனாதிபதிக்கும் ரணிலுக்கும் இடையிலான இணக்கப்பாடு அரசாங்கத்தின் தீர்வு முயற்சிகளை எதிர்க்கும் விதத்தில் எதிர்க்கட்சி நடப்பதைக் கட்டுப்படுத்துகிறதே ஒழிய அதன் தீர்வுப் பொதியை ஏற்குமாறு கட்டாயப்படுத்தவில்லை. இதன் அர்த்தம் தாம் ஒத்துப்போகும் ஒரு திட்டத்தினை வெளியிடும் போது மட்டுமே ஐ.தே.க. அதனை ஆதரிக்கும் என்பதாகும். இதனை பல ஐ.தே.க். எம்.பிக்கள் பகிரங்கமாகவே கூறி வருகிறார்கள்.

இந்த இடத்தில்தான் பிரிட்டனின் மத்தியஸ்தத்துடனான புலிகளின் பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெறுகிறது. இனப்பிரச்சினைத் தீர்ப்பதில் இந்தியா செய்யப்பட்டது போல பிரிட்டனும், தனது நலனின் அடிப்படையில் சிந்தித்து தமிழ் மக்களின் அபிலாஷைகட்கு எதிரான முடிவுகளை எடுக்குமாறு புலிகளை நிர்ப்பந்திக்குமா இல்லையா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை என்பதை ஒரேயடியாக மறந்து விடக்கூடாது.

ஏனென்றால், இலங்கையின் இனப்பிரச்சினை ஒன்றும் இன்று நேற்று முளைத்த விவகாரம் அல்ல. இதற்கு ஒரு அரை நூற்றாண்டு கால வரலாறு உண்டு. பிரித்தானியர்கள் இங்கிருந்து போகும் முன்பே அதற்கான ஆரம்பங்கள் தொடங்கிவிட்டிருந்தன. அதன்பிறகு பல சம்பவங்கள் நடந்து வரலாறாகி விட்டன. 1983 கலவரத்தின் பின் லட்சக் கணக்கான தமிழர்கள் வடக்கிலிருந்து புலம்பெயர்ந்து இலண்டனில் அரசியல்தஞ்சம் கோரியுள்ளார்கள். தமிழ் அரசியல் தலைவர்கள் பல தடவைகளில் இனப்பிரச்சினை தொடர்பாக பிரித்தானிய அரசாங்கத்துடன் பேசியும் உள்ளார்கள். ஆயினும், பிரித்தானியா இப்படி ஒரு முடிவெடுக்க இவ்வளவு காலம் எடுத்திருக்கிறது. இதற்கு சர்வதேச நிலைமைகள் குறிப்பாக இந்தியாவின் இன்றைய 'தலையிடா' நிலைப்பாடு ஒரு காரணமாக இருக்கக் கூடும் என்றாலும், இப்பிரச்சினையில் அதன் அக்கறை நீண்டகாலத்தின் பின் வந்திருக்கும் ஒன்று என்பதால், பிரிட்டன் எந்தவித அரசியல் சுயலாப நோக்கமும் இன்றி இதில் கலந்து கொள்கிறது தானா என்று சந்தேகமும் கொள்வதைத் தவிர்க்க முடியாது. மற்றெந்த நாடுகளையும் போலல்லாது பிரிட்டன் இந்த விடயத்தில் அக்கறை கொள்ளும்போது இக்கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது. ஏனென்றால், இங்கு புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்கான ஆரம்ப வித்துக்களைப் போட்ட பொறுப்பு பிரித்தானியரையே சாரும். இதன் காரணமாகவே இப்பிரச்சினையில் அவர்கள் தலையிட வேண்டும், அதற்கான தார்மீகப் பொறுப்பு அவர்களிடம் இருக்கிறது என்ற கோரிக்கைளும் தமிழ் தலைவர்களால் முன்பு முன்வைக்கப்பட்டிருந்தன. ஆயினும், அப்போது இவ்விடயத்தில் கவனம் செலுத்தாது இருந்த பிரிட்டன் இப்போது மனமுவந்து வந்திருப்பதை ஒருவகை எச்சரிக்கையுடன் அவதானிப்பது தவிர்க்க முடியாததாகும்.

எவ்வாறாயினும், இன்றைய பிரச்சினையில் ஒரு உலக ரீதியாக அங்கீகரிக்கப்படக் கூடிய மூன்றாந்தரப்பின் மத்தியஸ்தம்

→16

கோசலை மகன்

## மலையகம்: ஒரு புதிய வரலாறு -02

# தென்னாசிய சாதியமைப்பிலிருந்து தலை கீழ் மாறான மலையக சாதியமைப்பு !

இந்தியத் தமிழர்கள் என்று உத்தியோகபூர்வமாகவும் 1960பதுகளில் மலையகத் தமிழர்கள் என்று இனத்துவ அரசியல் கலாசார அடிப்படையிலும் அடையாளம் காணப்படுகிற இந்திய -இலங்கைத் தமிழர்களது சமூக பொருளாதார இனத்துவ அமைப்பு எத்தகையது என்பதை ஒரு சிறு கட்டுரையின் பகுதியாக ஆராய்வது கடினம். இலங்கையின் குடிசனத் தொகை மதிப்பு அறிக்கைகள் கூட இந்த இனச்சமூகத்தின் உண்மையான தொகையை நேரடியாகத் தெரிவிக்கவில்லை. பல்வேறுபட்ட இவர்களது உருவாக்கமும் பல்வேறு பட்டது.

தென் இலங்கைக்கு கடந்த ஓரிரு நூற்றாண்டுகளுக்குக்குள் புலம் பெயர்ந்த தென்னியந்தியருள் ''சாலையர்''(சலாகம) சாதியினரைப் போன்று சிங்கள மயமானவர்கள் புறநீங்கலாக தமிழராக எஞ்சியிருக்கிற இந்திய வம்சாவளியினர் அனைவரும் அவர்கள் தம்மை உத்தியோகபூர்வமாக இந்தியத் தமிழர்கள், இலங்கைத் தமிழர் என எப்படி அடையாளப்படுத்தியிருப்பினும் அவர்கள் இந்திய - இலங்கைத் தமிழர்களாவர். இவர்களது இனத்துவ வளர்ச்சியின் அடிப்படையான சமூகத் தொகுதி மலையகத் தமிழர்களாவர்.


மத்திய மலைநாடு சார்ந்து 1930களில் தோற்றம் பெற்று 1960களில் தம்மைத் தெளிவாக அடையாளம் காட்டி 1980 - 90களில் பெருவெடிப்பாக பரந்துபடுகிற இந்திய - இலங்கைத்தமிழர்களது கற்ற மத்திய தர வர்க்கமும், தோட்டப் பிணைப்புகளில் இருந்து விடுபடுகிற தொழிலாளி வர்க்கமும், வர்த்தக முதலாளிகளும் இவர்களது புத்திஜீவிகளும், கலைஞர்களும் தாம் ஒரு பிரதேசத்தை மையமாகக்கொண்டே தனித்த ஒரு இனமாக வளர்ச்சி பெற்று வருவதை சந்தேகமறப் பிரகடனப் படுத்தியுள்ளனர்.

1960களிலேயே இவர்கள் தாம் இந்திய அல்லது தேயிலை ரப்பர் பெருந் தோட்டத் தமிழர்களாக அடையாளப்படுத்தப்படுவதை நிராகரித்தனர். மறுபுறத்தில் இலங்கைத் தமிழர்களது தொங்கு தசையாகத் தாம் அடையாளம் காணப்படுவதையும் இவர்கள் நிராகரித்தனர். இவர்கள் தம்மைத் தனித்த உயர்மலையக பிரதேசம் சார்ந்தவர்களாக அடையாளம் கண்டு கொண்டனர். இந்த அடையாளப் படுத்தலே, இந்த அரசியல் சமூக கலாசார உணர்வே மலையகத் தமிழ் இனத்துவ வளர்ச்சியின் மூலைக்கல்லாயிற்று.

இந்த அடையாளப்படுத்துதல் கொழும்பை மையமாகக் கொண்ட இந்திய - இலங்கைத் தமிழர்களின் பலமான உயர்சாதி உயர்வர்க்கப் பிரிவினரை உள்ளடக்கிய கணிசமான பகுதியை வெளிவாரிப்படுத்தியது. எனினும் மலையைத் தமிழர்களது அரசியலில் குறிப்பாக பாராளுமன்ற அரசியலில் மேற்படி வெளிவாரிப்படுத்தப்பட்ட உயர்சாதி உயர்வர்க்கப் பிரிவினரின் ஆதிக்கத்தை உடைப்பது இதுவரை சாத்தியப்படவில்லை. ஒருவகையில் இந்தச் சமூக பொருளாதார சாதி அமைப்பையும் அதன் அரசியலையும் தெளிவாகப் புரிந்து கொள்வது தொண்டமானின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் சரியாகவே புரிந்து கொள்வதற்கு உதவும்.

சாதி, சமூக அமைப்பைப் பொறுத்து அனைத்து இந்திய - இலங்கைத் தமிழர்கள்- குறிப்பாக மலையகத் தமிழர்கள் தென்னாசிய சாதி சமூக அமைப்பில் இருந்து தலைகீழாக மாறுபட்டுள்ளமையைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும். தென்னாசிய சாதி, சமூக அமைப்பில் பல்வேறு இனங்களைச் சார்ந்த இந்திய நாட்டவர்களாயினும் சரி, இலங்கையைச்சேர்ந்த தமிழர்களாயினும்சரி, சிங்களவர்களாயினும்சரி பல்வேறு ஒத்த அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்க, மலையகத் தமிழர் மட்டும் சாதி, சமூக அமைப்பு ரீதியாக ஏனைய இனங்களுடன் ஏன் மாறுபடுகின்றனர்? எவ்வகையில் மாறுபடுகின்றனர்? என்பது மலையகத் தமிழர்களின் சமூகவியலின் அடிப்படை அம்சமாகும்.

ஏன் மாறுபடுகின்றனர்? அனைத்து இந்திய - இலங்கைத்தமிழர்களதும் சமூக உருவாக்கம் அண்மைக் காலத்துள் குறிப்பாக ஒன்று ஒன்றரை நூற்றாண்டுகளுள் ஏற்பட்ட பல்வேறுபட்ட தென்னிந்தியத் தமிழர்களின் புலப்பெயர்வுகளின் அடிப்படையில் தோற்றம் பெற்றதாகும். பல்வேறுபட்ட நோக்கங்களுடன் ஏற்பட்ட இந்தப் புலப்பெயர்வுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சாதி வர்க்க சமூகப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாகும்.




தென் ஆசிய சமூகங்களை வர்க்க ரீதியாக ஆராய்கின்ற போது ஏனைய சமூகங்களைப்போலவே அதுவும் கோட்பாட்டு ரீதியாக முதலாளித்துவ வர்க்கம் சிறியதாகவும் மத்தியதர வர்க்கம் இடைத்தரமானதாகவும் பாட்டாளி வர்க்கம் பரந்துபட்டதாகவும் அமையும். இலகுபடுத்தப்பட்ட மாதிரியில் இனங்களின் வர்க்க அமைப்பு முக்கோணப் படத்தைக்கொண்டது. தென்னாசிய இனங்களை சாதி அமைப்பு ரீதியாக ஆராய்கின்ற போது மேற்படி இனங்களின் சாதிவரிசை மாதிரிப்படம் தலைகீழாக நிறுத்தப்பட்ட முக்கோணப் படமாக அமையும். (பிராமணர் புற நடை) இதற்குக் காரணம் தென்னாசிய இனங்கள் வர்க்க ரீதியாக கீழ்ப்பட்ட பாட்டாளி மக்களை தனிப்பெரும்பான்மையாகக் கொண்டிருந்தபோதும் சாதிவாரியாக மேம்பட்ட உயர்சாதியினரை தனிப்பெரும்பான்மையினராகக் கொண்டிருப்பதுதான்.

இந்த உயர்சாதி, உழைக்கும் தொழிலாளி, விவசாயிகளின் கணிசமான பகுதியையும் சொத்துடைய பரந்துபட்ட உயர்வர்க்கத்தின் பெரும்பகுதியையும், உள்ளடக்கி அமைவது தான் இங்கு சிக்கலான அம்சம். வர்க்க அடிப்படையில் தொகை ரீதியாக சிறுபான்மையாக பலவீனப்பட்டுள்ள உயர் வர்க்கத்தவன் சாதிரீதியாக, சாதீய உறவு ரீதியாக மத்தியதர, பாட்டாளி வர்க்கங்களின் பெரும்பான்மையினருடன் இணைந்து பெரும்பான்மையினனாகிறான். இதனால் தென்னாசிய இனச்சமூகங்கள் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டை சாதி ரீதியாகப் பலவீனப்படுத்துகிற அகமுரண்பாட்டைக்கொண்ட சமூகங்களாக அமைந்துள்ளன.

மலையகத் தமிழர்களது சமூகம் எந்த வகையில் இத்தகைய தென்னாசிய இனச் சமூகங்களுடன் முரண்படுகிறது என்கிற விடயம் ஆர்வம் தருவதாகும்.

மலையக இனச் சமூகம் அடிப்படையில் தேயிலை ரப்பர் தோட்டங்களின் தொழிலாளர் தேவையை இலக்காகக் கொண்டு குடிபெயர்த்துவரப்பட்ட தென்னிந்தியாவின் நிலமற்ற ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சார்ந்த பாட்டாளி வர்க்கத்தினரை அடிப்படையாகக்கொண்டதாகும். இதனால் இவர்கள் மத்தியில் வர்க்க ரீதியாக தனி முழுப்பெரும்பான்மையினராக பாட்டாளி வர்க்கம் அமைகிற போது சாதிவாரியாகப் பெரும்பான்மையினராகவும் ஒடுக்கப்பட்ட சாதியினரே அமைகின்றனர். இது வர்க்க ரீதியாகவும் சாதிரீதியாகவும் பாட்டாளி மக்களே பெரும்பான்மையினராக உள்ள ஒரு நிலையாகும். முக்கியமான மறுமொரு விடயம் இவர்களது உயர்சாதி உயர்வர்க்கப்பிரிவு வர்த்தக நோக்கங்களுக்காக கொழும்பையும் பின் தென்னிலங்கை நகர்ப்புறங்களையும் இலக்காக் கொண்டு புலம் பெயர்ந்து வந்த பிரிவாகும். இவர்கள் மலையகத் தமிழர்களது பிரதேசத்து முதன்மை நில உடமையாளர்களல்ல. மலையகத் தமிழர்கள் வாழும் பிரதேத்து நில உடமை முன்னர் பிரிட்டிஷ் கம்பனிகளதும் தற்போதைய அரசு தனியார் கம்பனிகளதும் உடமையாக மாறியுள்ளது.

இதனால் ஏனைய தென்னாசிய சமூகங்களைப் போலல்லாது வர்க்க அடிப்படையில் மட்டுமின்றி சாதி அடிப்படையிலும் சிறுபான்மைப் பட்டிருக்கிற மலையகத்தமிழர்களது உயர்சாதியினர் சாதி வர்க்க ரீதியாகப் பெரும்பான்மையினரான பாட்டாளி வர்க்க தலித் சாதிப்பிரிவினர் மீது நிலம், கோவில் சார்ந்த சமூக மேலாதிக்கத்தைக்கொண் டிருக்கவில்லை. இதனால் பிரித்தாளுவதும் நீண்ட காலத்திற்குச் சாத்தியமில்லை.

எனவே மலையக மக்களின் தலைமைத்துவம் நீண்ட காலத்தில் பெரும்பான்மையும் கலாசார ரீதியாக ஒடுக்கப்பட்ட சாதிகளினதும் வர்க்க ரீதியாக பாட்டாளி வர்க்க நடுத்தர வர்க்கத்தவர்களினதும் முதன்மை கொண்டதாகவே தன்னை மீளமைத்துக் கொள்ளும்.

மேற்படி வர்க்க சமூக பின்னணியும் ஓரளவுக்கு தொண்டமானின் வீழ்ச்சியின் வரலாற்று ரீதியாக தவிர்க்க வொணாத் தன்மையைப் புலப்படுத்துகிறது.

இந்தத் தர்க்கம் மலையகத்தின் எதிர்கால தலைவன் தனிப்பட்ட ரீதியில் எந்த சாதியுள் இருந்து வருவான் என்கிறதையல்ல, அத்தகைய தலைமை மலையக பாட்டாளிகள், மத்திய தர வர்க்கத்தவர்களதும் தலித் சாதியினரதும் நிலைப்பாட்டை எடுக்கிற அவர்களது நலன்களுக்காக போராடுகிற ஒரு தலைமையாக இருக்கும் என்பதையே காட்டுகிறது. தொண்டமான் அவர்களுக்குக் கூட அவர் தன்னை சுய விமர்சனம் செய்து கொள்ளக் கூடுமாயின் தவறுகளைத் திருத்த முடியுமாயின் இன்னமும் காலம் கடந்துவிடவில்லை.

இத்தகைய புலப்பெயர்வுகள் இக் கட்டுரையுடன் தொடர்பில்லாததும் இதுகாறும் தமிழ் நாட்டு ஆய்வாளர்களது அக்கறையை கவராததுமான சில முக்கிய சமூகத் தாக்கத்தை தமிழ்நாட்டின் இனத்துவ வரலாற்றிலும் ஏற்படுத்தியுள்ளன. தொடர்ச்சியாகவும் குறிப்பாக சென்ற நூற்றாண்டுகளிலும் தமிழகத்தில் இருந்து இந்து சமுத்திர நாடுகளை நோக்கி ஏற்பட்ட புலப்பெயர்வுகள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட தலித் சாதியினரின் புலப் பெயர்வுகளாகும். இத்தகைய புலப் பெயர்வுகள் ஒருபுறநிலத்தில் தலித்துகளுடைய அழுக்கத்தை குறைத்ததன் மூலமும் தலித்துக்களில் ஒரு சாரார் மத்தியில் ஓரளவு பணப்புழக்கத்துக்கு வழி வகுத்ததன் மூலமும், ஒப்பீட்டு ரீதியில் ஏனைய இந்திய இனங்களின் தலித்துக்களை விடவும் மாறுபட்ட வாய்ப்பான ஒரு நிலைக்கு தமிழ்நாட்டு தலித்துக்களின் ஒரு சாராரை மேம்படுத்தியது. இதனால் தான் இந்தியாவில் தமிழ்த் தேசிய இனத்துவ வளர்ச்சி ஆரம்பத்தில் இருந்தே ஏனைய இந்திய தேசிய இனத்துவ வளர்ச்சிகளையும் விட தலித்துக்களை (மேல் வர்க்கப் பிரிவினரை) ஒப்பீட்டு ரீதியாக அதிகம் உள்வாங்கக் கூடிய பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது என்று நான் கருதுகிறேன். இந்த விடயத்தை தமிழக தலித் புத்திஜீவிகள் புறக்கணித்து விடக் கூடாது.

மேற்படி புலப்பெயர்வுகள் குறிப்பாகப் பெங்களூர் நோக்கியும் திருப்பதிநோக்கியும் அயல் மாநிலங்களுக்குள் தமிழர்கள் புலம்பெயர்ந்து பரந்து பட்டிருக்கக் கூடிய அவசியத்தை இல்லாமல் செய்தது என்றும் அயல் மாநிலத்தவர்கள் தமிழகத்துக்குள் பரந்து படுகிற வாய்ப்பான தன்மையை அதிகரித்தது என்றும் நான் கருதுகிறேன். இத்தகைய போக்கிற்கு குறிப்பாக கேரளமாநில எல்லைப்பகுதிகளில் தாயகம் திரும்பிய மலையக தமிழர்கள் சவாலாக உள்ளமையும் இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட, முப்பதுகளில் கொழும்பில் மையப்பட்டிருந்த உயர்சாதி, உயர்வர்க்க இந்திய வம்சாவளிகளின் அரசியலில் இருந்து இந்திய - இலங்கைத் தமிழர்களின் தலைமைத்துவம் தோற்றம் பெற்று மலையகத்தை நோக்கி விரிவடைந்தது. ஐம்பதுகளில் மேற்படி அமைப்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசாக மறுசீரமைக்கப்பட்டதுடன் மலையக தொழிற்சங்க நடவடிக்கைகள் மையப்பட்ட தொண்டமானின் தலைமைத்துவம் மலையகத் தலைமைத்துவமாக முகிழ்த்தது. தொண்டமானின் எழுச்சியின் பின்னர் மலையக அரசியல் ஒரு வகையில் தொண்டமானதும் அவரால் சுயநல நோக்குடனும் வெளியேற்றப்பட்டவர்களாலும் (அஸீஸ், வெள்ளையன், சீ. வி. வேலுப்பிள்ளை செல்லச்சாமி, சந்திரசேகரன் முதலியபலர்) 1930களிலிருந்து முகிழ்த்து 1960பதுகளில் விரிவடையத் தொடங்கிய மலையக புத்திஜீவிகள் என். சண்முகதாசன் தலைமையில் அரசியல் மயப்படுத்தப்பட்ட 'இடதுசாரிகளது நடவடிக்கைகள் என்பவையே மலையகத்தின் சமூக பொருளாதார அரசியல் கலாசார வரலாறு ஆயிற்று.

முப்பதுகளில் கொழும்பு மையப்பட்ட உயர்சாதி உயர்வர்க்கத்தின் அரசியலாக ஆரம்பித்து பாட்டாளி வர்க்க மலையகம் நோக்கி விரிவடைந்த இந்திய - இலங்கைத் தமிழர்களது அரசியல் 1960களில் இருந்தே ஆழமாக மலையகத்தில் வேரூன்றி இன்று விழுதுவிட்டு விருட்சமாகி விட்டது. இதனை மீண்டும் கொழும்பு மையப்பட உயர்சாதி உயர்வர்க்க தலைமைத்துவத்தின் கையில் ஆறுமுகம் தொண்டமானினூடாக பாரப்படுத்துகிற முயற்சியில் தொண்டமான் தோல்வியைத் தழுவியிருக்கிறார்.

இ.தொ.க. இதுகாறும் இ.தொ.கா வில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களது அமைப்புகளுடனும் தொடர்ந்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ள மலையக தமிழ் புத்திஜீவிகளதும்இடதுசாரி அரசியல்தன்மை வாய்ந்த தொழிற்சங்கங்கள் அமைப்புகளுடனும் ஐக்கிய முன்னணி அமைத்துக் கொள்வதன் மூலம் வரலாற்றுக்குத் தலைமைதாங்க போகின்றார்களா அல்லது வரலாற்றின் குப்பைமேட்டில் போய் விழப் போகிறார்களா என்ற கேள்விக்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஆனால் மலையகத் தமிழர் மையமாகக் கொண்டுள்ள இந்திய -இலங்கைத் தமிழர்கள் வெற்றியே பெறுவார்கள்.

வ.ஐ.ச. ஜெயபாலன்

# தேசியவாதம்: தொடரும் விவாதம்-
# புதிய தேசியவாதத்தின் போக்கு என்ன?

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் சமூக பொருளாதார விடுதலைக்கு இன்றைய யதார்த்தத்தில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் முன்நோக்கி சரியான வழியில் செல்ல வேண்டியது முன்நிபந்தனையாக அமைகின்றது. இந்த அடிப்படையில் தமிழ் மக்களின் விடுதலையை பிரதான நோக்கமாகக் கொண்டு அரசியல் கட்டுரைகளையும், விமர்சனங்களையும் பத்திரிகை ஒன்றின் மூலம் தனக்குரிய எல்லை வரை சென்று கொழும்பிலிருந்து கொண்டுவெளிவருவது என்பது மிகவும் சிக்கலானதே. ஆனாலும் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றிலும், தமிழ் பத்திரிகை உலகத்திலும் முதன் முதலாக காத்திரமான ஒரு பத்திரிகையாக நீண்டகாலம் வெளிவந்து தாக்கத்தை ஏற்படுத்தி பங்களிப்பு செய்த / செய்கின்ற பெருமையை சரிநிகர் பெற்றுக்கொள்கின்றது. இப்பங்களிப்புப் புறக்கணிக்கப்பட முடியாததே.

இவ்வகையில் சரிநிகர் முன்னெடுத்துச் செல்லும் தேசியவாதம் தொடர்பான விவாதம் தமிழ் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய பங்கை ஆற்றும் என நம்பலாம். ஏனெனில் ''தேசியம்'' என்ற கருத்தாக்கமானது, 20ம் நூற்றாண்டில் காரசாரமான விமர்சனங்களுக்கு உட்பட்டதுடன் 21ம் நூற்றாண்டின் உலக அரசியலில் குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் கருதப்படுகின்றது. ஆகவே, இது தொடர்பான ஆழமான ஆய்வுகளையும் விவாதங்களையும் முன்னெடுத்துச் செல்வது இன்றைய காலத்தின் இன்றியமையாத தேவையாக இருக்கின்றது.

இதைக் கருத்திற்கொண்டு, சரிநிகரில் வெளிவந்த தேசியவாதம் தொடர்பான விவாதங்களை மீளாய்வுக்கு உட்படுத்தி விமர்சனங்களை முன்வைக்க முயற்சிக்கின்றேன்.

சரிநிகரின் 60வது இதழில் சரிநிகர் ஆசிரியர் பீடம் தனது விவாதத்தை பின்வருமாறு ஆரம்பித்து முன்வைக்கின்றது.

சரிநிகர் தமிழ் இனவாதத்தை தூண்டும் விதத்தில் எழுதுகின்றதாமே என்று சிங்கள நண்பர் ஒருவர் சரிநிகரிடம் கேட்ட கேள்வியில் இருந்தே விவாதம் ஆரம்பமாகின்றது. ஏன் இப்படியான ஒரு கேள்வியை இவர் கேட்டார் என, சரிநிகர் தேடலில் இறங்கிய போது தமக்கு பின்வரும் ஆச்சரிய மூட்டும் பல விடயங்கள் தெரியவந்ததாக அது குறிப்பிடுகின்றது. தமிழ் தேசியவாதம் என்ற பதத்தை சிங்கள மொழிக்கு பரிமாற்றம் செய்தபோது தமிழ் இனவாதம் என்ற அர்த்தத்தில் மாற்றப்பட்டிருப்பதாகவும் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் தேசியவாதம் என்ற பதம் பல்வேறு அர்த்தங்களில் பாவிக்கப்படுவதாகவும் அறியக்கிடைத்தாகவும் அது கூறுகின்றது.

அத்துடன் தமிழ் தேசியம் குறித்து எழுதப்படுபவற்றை அதன் இருப்பை மறுத்து வெறும் தமிழ் இனவாதம் எனக் கணிப்பதனையும் வலுவிழந்து போன ''இலங்கை தேசியம்'' அல்லது இதை ஆதிக்கம் செய்யும் சிங்கள பௌத்த பேரினவாதமே இலங்கையில் ''தேசியம்'' எனக் கருதப்படுவதையும் அறிந்ததாக மேலும் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு மொழிகளுக்கு இடையில் ஏற்பட்ட சொற்பதங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கூறிவிட்டு இலங்கையின் அரசியல் வரலாற்றில் இலங்கைத் தேசியம் தோற்றம் பெற்றதையும், பின் சிங்கள பௌத்த தேசியவாதம் பேரினவாதமாக மாறியதையும் தமிழ் தேசியத்தின் தோற்றத்தையும் மிகச் சரியாகவே குறிப்பிட்டுள்ளது சரிநிகர்.

தமிழ் தேசியவாதத்தினுள் இருக்கும் இனவாதம் என்ன என்பதைச் சரியாக கணிப்பிட்டு விட்டு பின் வருமாறு எழுதுகின்றது, ''தமிழ் தேசியத்தின் பிற்போக்கான ஒரு கூறான தமிழ் இனவாதத்தின் ஒரு அம்சம்தான் முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒரு முகம். இத் தேசியம் தமிழ் தேசியத்திலிருந்து அண்மைக் கால அரசியலில் முற்றாக நிராகரிக்கப்பட்டுவிட்டது, என்ற கூற்று ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. ஏனெனில், முஸ்லிம் மக்களுக்கு எதிரான சித்தாந்த ரீதியிலான ஆதிக்கம் எங்களிடம் இருக்கும் வரை இப்போக்கும் இருக்கும். ஆனால், இச்சித்தாந்த ஆதிக்கத்தை தமிழ் மக்களின் அரசியலினுள் இருந்து களைந்தெறிவதற்கான முயற்சியில் அக்கறையுடனும், உணர்வுபூர்வமாகவும் தமிழ் மக்களின் உண்மையான விடுதலையின் பால் அக்கறையுள்ளவர்கள் இறங்கியுள்ளனர் எனக் குறிப்பிடுவதே சரியானதாகும். இவ்விடயத்தில் தமிழ் தேசியம் சரியாக செயற்படுமானால், மற்றைய தேசியங்களும் தமக்குள் இருக்கும் இனவாதத்தைக் களைய முன்னுதாரணமாக இருக்கும் என நம்புகிறேன்.

சரிநிகர் ஆசிரியர் பீடம் தனது விவாதத்தை பின்வருமாறு முடிக்கின்றது. ''தேசியவாதம் இனவாதம் என்பன சமகாலத்தில் இங்கு தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது தொடர்பான ஆழமான ஆய்வு தேவை.

இக்குறிப்பிட்ட ஆய்வு முக்கியமான தேவையாக இருந்தபோதும் சரிநிகர் ஆசிரியர் பீடமானது தனது தேசியவாதம் தொடர்பான விவாதத்தை தாம் நடைமுறையில் எதிர்கொள்ளும் மொழிகளுக்கு இடையிலான பிரச்சினைகளிலிருந்தே ஆரம்பித்திருக்கின்றது. இவ்விவாதத்திற்கான முயற்சி நன்மையாக இருந்த போதும் ஆரம்பம் ஆரோக்கியமானதல்ல என்றே கருதுகிறேன். ஏனெனில், தேசியவாதம் தொடர்பான கோட்பாடே கேள்விக்குள்ளாக்கப்பட்டு கடுமையான விமர்சனத்திற்கு உட்படும் இன்றைய காலத்தில் தேசியவாதக் கோட்பாடு தொடர்பான விவாதத்தை ஆரம்பிப்பதே ஆரோக்கியமானதாக இருக்கும். அத்துடன் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் வலுவூட்டுவதாக இருக்கும் என நம்புகின்றேன். இக்கட்டுரைக்கு முதல் எழுதப்பட்ட ''வரலாற்றில் தேசியமும் சரிநிகரின் வரையறைகள்' என்ற கட்டுரை அவ்வாறான ஒரு சிறு முயற்சியே.

[redacted]

வரலாற்று ஆதாரங்கள் மூலம் தேசியவாதக் கோட்பாடு தொடர்பான, தனது கருத்தை இதழ் 61இழ் முன்வைத்து சரியான முறையில் விவாதத்தை ஆரம்பித்தவர் எம். ஏ.நுஃமான் என்றால் மிகையல்ல. ஆனால் தேசியம் தொடர்பான மரபுவாத மார்க்சிய சிந்தனையிலிருந்து இன்னும் தன்னை முறித்துக்கொள்ளாததும், புதிய சிந்தனைகளை உள்வாங்காததும் அவரது கட்டுரையில் நன்றாகவே வெளிப்படுகின்றது.

வரலாற்றில் காலத்துக்குக் காலம் தேசியவாதம் எப்படித் தோன்றியது? ஆதிக்கம் செலுத்தியது என்பதை பின்வருமாறு வேறுபடுத்திக்காட்டுகின்றார்.

✱ 18,19ம் நூற்றாண்டுகளில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய தேசியவாதம்.

✱ மேலைத்தேய ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக காலனித்துவ நாடுகளில் தோன்றிய தேசியவாதம்.

✱ இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ''விடுதலையடைந்த'' பல்லின சமூகங்கள் கொண்ட நாடுகளில் ஏற்பட்ட தேசியவாதம்.

இவை மூன்றும் சாராம்சத்தில் வேறுபட்டவை என அவர் கூறியதற்கு அமைய அவராலேயே புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்ட ஒன்று உண்டு. அதாவது காலத்திற்கு காலம் தன் மீதான ஒடுக்கு முறையினடிப்படையில் தேசியமானது தன்னைக் கற்பிதம் செய்து கொண்டது மட்டுமின்றி, வரலாற்றில் முற்போக்கான பாத்திரத்தை வகித்துள்ளது. அதேவேளை தன்னிடமிருக்கும் பிற்போக்கான அம்சங்களையும் காலத்திற்கு காலம் களைந்துள்ளது.

17ம், 18ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய நிலப்பிரபுத்துவ ஒடுக்கு முறைகளுக்கு எதிராக முதலாளித்துவ சக்தியின் தலைமையில் தமது நலன்களை அடிப்படையாகக்கொண்டு போராடியது அன்றைய தேசியம். இத்தேசியமானது குறிப்பிட்ட ஒரு மக்கள் குழுவினரின் இனம், கலாசாரம், மொழி, மதம் தொடர்பாகக் கொண்டிருந்த அக்கறையானது பிற மக்கள் குழுக்கள் மீது இருக்கவில்லை. பதிலாக அவற்றை ஒடுக்கும் மிகவும் பிற்போக்கான அம்சத்தையே இது கொண்டிருந்தது.

காலனித்துவ ஆட்சியானது அது ஆதிக்கம் புரிந்த நாடுகளில் இன, மத, சாதி, மொழி வர்க்க வேறுபாடின்றி அனைவரையும் ஒடுக்கியது. இந்நாடுகளில் இருந்த வளங்களை கொள்ளையடித்தது மட்டுமின்றி தனது நலன்களை மட்டும் நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆகவே, பரந்துபட்ட வகையில் ஒவ்வொருவரையும் இது பாதித்தது. வெள்ளையர் ஆட்சியை தம் நாடுகளிலிருந்து அகற்றுவதே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வாக பொதுவாகக் கருதப்பட்டது. இக் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக முன்வைக்கப்பட்டதே இடைக்கால தேசியக் கோட்பாடாகும். இப்போராட்டத்தை பல மட்டங்களிலிருந்து பல சக்திகள் முன்னெடுத்தபோதும் வசதிபடைத்த உயர் குழாமைச் சேர்ந்தவர்களது தலைமை பிரதானமானதும், முக்கியமானதுமான பங்கை வகித்தது. இவர்கள் தமது நலன்களையே முதன்மைப்படுத்தினர். காலனித்துவ ஆட்சியாளர்களும் தமது எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு இத்தலைமைகளையே ஆட்சிகளில் அமர்த்தவும் விரும்பினர். பல நாடுகளில் இத் தலைமை தவிர்ந்த பிற இன, மத, மொழி, அடிமட்ட மக்களது பிரச்சினைகள் உணரப்பட்ட போதும் சரியான தீர்வுகள் முன்வைக்கப்படாமை இத்தேசியத்தின் குறைபாடானது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் காலனித்துவத்திலிருந்து நவீன காலனித்துவ முறைக்கு மாறியதன் மூலம் ''விடுதலையடைந்த'' நாடுகளில் காலனித்துவ ஆட்சியாளர்களது கைப்பொம்மைகளாக இருந்தனர். அல்லது இருவரது நலன்களையும் பாதுகாக்க சமரசம் செய்து கொண்டனர். இதன் விளைவு காலனித்துவ ஆட்சி முறை சுருட்டிவிட்ட இன, மத, நிற, மொழி முரண்பாடுகள் பெரிதாக வெடிக்க ஆரம்பித்தன. அல்லது ஆட்சியாளர்கள் தாம், தாம் சார்ந்த மக்கள் குழுமத்தின் நலன்களைப் பாதுகாப்பவர்கள் என்ற பொய்யான கண்ணோட்டத்தை வெளிப்படுத்த பிற மக்கள் குழுக்கள் மீது கடுமையான ஒடுக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். இதேவேளை ஐரோப்பிய நாடுகளிலும் ஆட்சியிலிருந்தவர்கள் தாம் சார்ந்த மக்கள் குழுமங்கள் தவிர்ந்த பிறர் மீது தம் மேலாதிக்கத்தை நிறுத்த ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இவ் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கோடபாடே இன்றைய தேசியம். சமூகத்தில் சகல அடிப்படைகளிலும் ஒடுக்கப்பட்டு கீழ்நிலையில் வாழும் மக்களது தலைமையை வேண்டி நிற்பதே இன்றைய தேசியத்தின் முற்போக்கான அம்சமாகும். தேசியவாதக் கோட்பாட்டின் வரலாற்றில் இடம் பெற்றதைப் போல இதுவும் பழம் பெருமை பேசுவது, தம்மை உயர்ந்தவர்களாகக் கருதுவது, சமூகத்தில் வாழும் உயர் குழாமைச் சேர்ந்தவர்களின் சித்தாந்த ஆதிக்கத்தினுள் சிக்கித் தவிப்பது என்பது போன்ற பிற்போக்கான அம்சங்களைக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் இவற்றைக் களைந்து முன்னேறிய சமூகமாற்றத்திற்கு பங்கு வகிக்கும் புரட்சிகர கோட்பாடாக மாறுவதற்கு முயற்சிப்பதில் மட்டுமல்ல, மற்றைய கால தேசியங்களைப் போலன்றி அடிமட்ட மக்கள் நலன் சார்ந்து இருப்பதுடன் இவர்களது தலைமையை வேண்டி நிற்பதாலும் இன்றைய தேசியம், சிறப்புற்றும் சக்தியுள்ளதாகவும் விளங்குகின்றது.

இம் மூன்று காலகட்ட தேசியங்களும் தம்மீதான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கோட்பாடுகள் என்றடிப்படையில் பொதுவானவை. அதேவேளை தம்மீதான ஒடுக்கு முறைகளின் தன்மையைப் பொறுத்தும் அக்காலகட்ட சூழல்களுக்கும் ஏற்ப கற்பிதம் செய்யப்பட்ட தேசியம் என்றடிப்படையில் வேறானவை.

''வளர்ச்சி குன்றிய நாட்டின் பொருளாதார வளங்களைப் பங்கு போடுவதில் ஏற்பட்ட போட்டி காரணமாக எழுந்தவையே இனத் தேசியவாதங்கள்'' என நுஃமான் அவர்கள் கூறுகின்றார்.

முதலில் இனத் தேசியவாதம் என்ன என்பதை புரிந்து கொள்வது இவருடைய கூற்றைப் புரிந்து கொள்ள உதவும் என நம்புகின்றேன்.

ஒரு மக்கள் கூட்டம் ஏதோ ஒரு அடிப்படையில் இன்னோர் மக்கள் கூட்டத்தினரால் தாம் வேறுபடுத்தப்பட்டு ஒடுக்கப்படுகின்றோம் என உணர்கின்றனர். பின் அந்த ஒடுக்கு முறைக்கு எதிராக போராட ஒடுக்கு முறைக்குள்ளான மக்கள் தமக்குள் ஒரு பொதுவான தன்மையை இனம் கண்டு தம்மை ஒரு தேசியமாகக் கற்பிதம் செய்து கொள்கின்றனர். இதனடிப்படையில் தமக்கான தேசத்தையும் வரையறை செய்து கொள்கின்றனர். இவ்வொடுக்கு முறைக்கு உள்ளாகும் மக்கள் கூட்டத்தினர் ஒரே அல்லது வெவ்வேறு இனத்தவராக, நிறத்தினராக மொழியைப் பேசுபவராக, மதத்தினராக, கலாசாரத்தைக் கொண்டவர்களாக இருக்கலாம் ஆனால், அம் மக்கள் குழுமத்தின் மீதான ஒடுக்கு முறையின் பொதுவான தன்மையானது இவ்வேறுபாடுகளையும் கடந்து ஒன்றுபடவும் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கவும் போதுமான காரணியாக இருக்கின்றது.

**வி.கே.எஸ்.பாரதி**

அடுத்த இதழில் முடியும்

*ஒரு மக்கள் கூட்டம் ஏதோ ஒரு அடிப்படையில் இன்னோர் மக்கள் கூட்டத்தினரால் தாம் வேறுபடுத்தப்பட்டு ஒடுக்கப்படுகின்றோம் என உணர்கின்றனர். பின் அந்த ஒடுக்கு முறைக்கு எதிராக போராட ஒடுக்கு முறைக்குள்ளான மக்கள் தமக்குள் ஒரு பொதுவான தன்மையை இனம் கண்டு தம்மை ஒரு தேசியமாகக் கற்பிதம் செய்து கொள்கின்றனர். இதனடிப்படையில் தமக்கான தேசத்தையும் வரையறை செய்து கொள்கின்றனர். இவ்வொடுக்கு முறைக்கு உள்ளாகும் மக்கள் கூட்டத்தினர் ஒரே அல்லது வெவ்வேறு இனத்தவராக, நிறத்தினராக மொழியைப் பேசுபவராக, மதத்தினராக, கலாசாரத்தைக் கொண்டவர்களாக இருக்கலாம் ஆனால், அம் மக்கள் குழுமத்தின் மீதான ஒடுக்கு முறையின் பொதுவான தன்மையானது இவ்வேறுபாடுகளையும் கடந்து ஒன்றுபடவும் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கவும் போதுமான காரணியாக இருக்கின்றது.*

# நாங்கள் வன்முறையாளர்கள் அல்ல, விடுதலைப் போராளிகள்!

## ராதிகாவுக்கு புலிகளின் பெண் போராளியிடமிருந்து ஓர் எதிர்வினை

வன்முறையினால் பாதிக்கப்படுகின்ற பெண்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் மனித உரிமைப் போராளியாகத் தன்னை இனங்காட்டிக்கொள்ளும் ராதிகா அவர்களுக்கு, பால் வேறுபாடின்றி அனைத்துத் தமிழர்களுமே வன்முறைகளினால் பாதிக்கப்படாமல் நிம்மதியாகவும் கௌரவமாகவும் வாழும்பொருட்டு அவர்களுக்கென தனியான நாடொன்றை உருவாக்கப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் போராளியான நான் சில விடயங்களைக் கூற விரும்புகின்றேன்.

மேசை முன் அமர்ந்து ஆய்வுகளைச் செய்வதன்மூலமோ அறிக்கைகளை விடுவதன் மூலமோ எல்லாப் பிரச்சினைகளையுமே யாராலுமே தீர்த்துவிட முடியாது. ஒரு பெண் வன்முறையால் பாதிக்கப்பட்டபின் 'அவள் பாதிக்கப்பட்டுவிட்டாள் என்று அறிக்கை விடுவது அவளுக்கு எந்தத்தீர்வையும் தரப்போவதில்லை. வன்முறை பிரயோகிக்கப்படமுன் அதைத்தடுக்கக்கூடிய அல்லது முறியடிக்கக்கூடிய வகையிலான நடவடிக்கைகளில் நேரடியாக இறங்குவதே பெண்ணின் உரிமைகளை அல்லது மனித உரிமைகளை பாதுகாக்கக்கூடிய ஒரே வழி. இதைத்தான் நாங்கள் செய்கிறோம். நாங்கள் வன்முறையாளர்கள் அல்ல. உரிமைக்காக உழைக்கும் போராளிகள்.

அதிகாரத்தையும் சமத்துவத்தையும் பெற வேண்டும் என்ற நோக்கில் நாம் போராட்டத்துடன் இணையவில்லை. சிறீலங்காப் பேரினவாத வன்முறையாளர்கள் எங்கள் பகுதிகளில் செய்த மனித உரிமை மீறல் சம்பவங்களே எம்மைப் போராடத்தூண்டின. நாம் நிம்மதியான கௌரவமான வாழ்வை அமைப்பதற்காகவே போராடுகின்றோம். பெண் விடுதலை பெறாத மண் விடுதலையும், மண் விடுதலை பெறாமல் பெண் விடுதலையும் சாத்தியமில்லை என்ற உண்மையை உணர்ந்து கொண்டால் நாம் பெண் விடுதலைக்காகவும் போராடுகின்றோம். போராட்டத்தில் இணைந்தால்தான் நாம் பெண் விடுதலை அடையலாம் என்ற எண்ணத்துடன் நாம் போராடப் புறப்படவில்லை.

எமது இராணுவ ரீதியிலான செயற்பாடுகள் சாதாரண பெண்கள் மத்தியில் பல கருத்தியல் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை யாராலுமே மறுக்கமுடியாது. விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியின் பெண் உறுப்பினர்களின் கடல் சார் நடவடிக்கைகள் கரையோர மக்கள் சமுதாயத்திலே கருத்து மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதை இதற்கு ஒரு உதாரணமாகச் சொல்லலாம். பெண்கள் கடலுக்குப் போகக் கூடாது என்ற பரவலான மூடநம்பிக்கையை இன்றைய இளம் பெண்கள் துணிவாக மீறுகின்றனர்.

கரும்புலித் தாக்குதலில் ஈடுபடும் பெண்ணின் உடல் மோசமான நிலைக்கு ஆளாகிறது என்று நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள். இங்கு அவர் 'பெண்' என்பதல்ல முக்கியம். அவர் ஒரு போராளி. அவர் கரும்புலி. தனது சாவு எப்படி அமைய வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமையை அவர் தனதாக்கிக் கொண்டுள்ளார். தன்னைப்பற்றிய சிந்தனைகளைக் கடந்து தாய் நாட்டின் விடுதலைக்காக மனப்பூர்வமாகச் செயற்படும் ஒரு போராளியின் உடல்நிலைபற்றிய ஆய்வைவிட சமூகத்திலிருக்கும் பெண்களில் பெரும்பாலானோர் தமது கணவர்களின் மோசமான பாலியல் உறவுகளினாலும், வன்முறைகளாலும் உடல் உள ரீதியாகத் துன்பப்படுவதை ஆய்வு செய்தால், அது அதிக பயன்தரும் ஒரு நடவடிக்கையாக அமையும்.

நீங்கள் குறிப்பிடுவது போல இலங்கை - இந்திய ஒப்பந்தக் காலத்தில் புலிகளுக்கு ஏற்பட்ட ஆள்வளத் தேவைகளுக்காகப் பெண்கள் போராளிகளாக உள்வாங்கப்படவில்லை. 1984லேயே 'சுதந்திரப் பறவைகள்' என்ற அமைப்பின் கீழ் ஒருங்கிணைந்த நூற்றுக்கணக்கான பெண்கள் விடுதலைப்புலிகளின் அரசியல்வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விட்டனர். 1985இல் தனது பயிற்சியை ஆரம்பித்த விடுதலைப் புலிகள் மகளிர் படையணி 1986லிருந்து சிறிய, பெரிய இராணுவ நிலைகள் மீதான தனது தாக்குதல்களைத் தொடர்ந்தது. 1987இல் இந்திய இராணுவம் இம்மண்ணில் கால் வைத்தபோது, சிறு சண்டைகளாகவும், பெருந்தாக்குதல்களாகவும் பல களங்களைக் கண்டு போரனுபவம் மிக்க இராணுவ அணியாக அது வளர்ந்து விட்டிருந்தது. முன்னர் எப்போதும் இல்லாத வகையில் இந்திய இராணுவக் காலத்தில் ஏராளமான பெண்கள் போராட்டத்துடன் இணைந்து கொண்டார்கள். அதற்குக் காரணம் மக்களின் சாதாரண வாழ் நிலையை அச்சுறுத்தும் வகையிலான இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளே.

விடுதலைப் போரின் விளைவாக தமிழ் சமூகத்தில் ஏற்பட்ட இயல்பான மாற்றங்களைக் குறிப்பிடும் போது 'புனிதம்' என்ற பேச்சு முகாம்களிலோ, வீடுகளிலோ எடுபடுவதில்லை என்று குறிப்பிடுகின்றீர்கள். தூய்மையான மன உணர்வுகளை, தன்னலம் கருதாத ஈகத்தை நாம் புனிதமாகக் கருதுகிறோம். நீங்கள் புனிதம் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்பது புரியவில்லை.

எமது அமைப்பின் கட்டமைப்புகளுள் பெண்கள் இராணுவத் தலைமையைப் பெற்றிருப்பதும் நீதியை நிலை நாட்டுபவர்களாகச் செயற்படுவதும் அவர்களின் திறமையால் கிடைத்த உயர்வைத்தான் வெளிப்படுத்துகின்றது. இவையெல்லாம் அவர்கள் 'பெண்கள்' என்ற காரணத்தால் உண்டானவையல்ல.

நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்பட்டபின்னரும் இந்நிலை தொடருமா என்ற கேள்வி தேவையற்றது. எந்தச் சமூகத்திலுமே எல்லாக் கட்டுப்பாடுகளும் இறுக்கங்களும் நிரந்தரமாக நிலைத்து நிற்பதில்லை என்பது வரலாறு எமக்குக் கற்றுத் தந்த பாடம். இம்மண்ணில் விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருப்பதால் வேகமாக ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், இப்படியொரு போராட்டச் சூழல் இல்லையெனில் சிறிது தாமதமாக ஏற்பட்டிருக்குமே தவிர மாற்றமே இல்லாமல் போயிருக்காது என்பது தான் நடைமுறை உண்மை.

லண்டனிலிருந்து வெளியாகும் தமிழ் டைம்ஸ் (Tamil Times) இல் வந்த பூப்புனித நீராட்டு விழா விளம்பரத்தை வைத்துக்கொண்டு மாற்றங்களெல்லாம் இடைக்கால மாற்றங்களே என்றும், அமைதியான வாழ்நிலை கிடைக்கும்போது பாரம்பரியச் சடங்குகளே மேலோங்கும் என்ற முடிவுக்கும் வருவது தவறானது என்றே நான் கருதுகின்றேன். வெளிநாடுகளில்வாழும் தமிழர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது தமது பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கினால் அல்ல. தமது கௌரவத்தை, பொருளாதாரத்தை ஏனையவர்களுக்கு உயர்த்திக் காட்டும் முயற்சியில் ஒன்றுதான் இதுவும். இந்தச் சடங்கிலிருந்த பாரம்பரியமான பல முறைகள் கைவிடப்பட்டுள்ள நிலையில் நிகழ்வைப் பதிவு செய்யும் ஒளிப் படப் பிடிப் பாளர் தான் பூப்புனித நீராட்டுவிழாவின் நடைமுறைகளைத் தீர்மானிப்பவராக இன்று உள்ளார். நாளடைவில் இந்த நிகழ்வு தேவையா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பெண்ணே தீர்மானிக்கும் நிலை வரும். முற்றாக வேண்டாம் என்று நிராகரிக்கும் நிலை கூட நாளை வரலாம்.

போரில் ஈடுபடாமல் எஞ்சியிருக்கும் பெண்களுக்கே 'சீதாதேவி' நிலைக்குத் திரும்பவும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்கிறீர்கள். அதென்ன சீதாதேவி நிலை? புரியவில்லை. தனது தூய்மையில் ஐயப்படுபவனின் முகத்தில் காறி உமிழாமல், தமிழ் பெண்கள் எல்லோரும் தீக்குளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களா? வேண்டாமப்பா. அப்படியொரு நிலை எங்கள் பெண்களுக்கு வேண்டாம். அவர்கள் அவர்களாகவே வாழட்டும். யாரோ போல மாறவேண்டாம்.

இலட்சியமும் வழிமுறைகளுமே முக்கியம் என்பதால் ஏற்பட்ட பெண் - ஆண் ஒருமை நிலை ஆண் நோக்கிலேயே உள்ளது. பெண்மையை ஆண்மை முற்றாகத்துடைத்தழித்துச் செல்கின்றது. இதுதானா புலிகள் இயக்கத்தில் பெண்களுக்கான சிறப்புரிமை என்று கேட்கும் உங்களிடம் நான் இரண்டு கேள்விகளைக் கேட்கின்றேன்.

அ. (சாதாரணப் பெண்கள் போல) தழையத் தழையக் கட்டிய சேலையுடன் கால்களில் கொலுசு கிலுங்க, கைவளை ஒலி எழுப்ப, கூந்தலில் சூடிய பூவின் வாசனை ஊரையே இழுக்க, அலங்காரமாக ஒரு பெண்கள் அணி நகர்ந்து எந்நேரமும் விழிப்புடன் இருக்கும் சிறீலங்கா இராணுவத்தின் படைத்தளம் ஒன்றைத் தாக்கப் போனால் எப்படி இருக்கும்?

ஆ. ஆண்களைப் போல பெண் போராளிகள் நீண்ட கால்சட்டையையும், மேற்சட்டையையும் அணிந்திருப்பதற்குப் பதிலாக, ஆண் போராளிகள் எல்லோரும் பெண்களைப் போல சேலை அணிந்து, கட்டுக் குடுமி முடிந்து, காதில் கடுக்கனும் அணிந்திருந்தால், உடனே நீங்கள் ''ஆகா'' விடுதலைப் புலிகளின் பாலற்ற நிலை (Androgyny) பெண் நோக்கிலே உள்ளது. ஆண்மையைப்பெண்மை முற்றாகத் துடைத்தழித்துச் செல்கின்றது'' என்று ஆனந்தக் கும்மியடித்திருப்பீர்களோ?

இலட்சியப் பெண் மாதிரியை எப்போதும் கன்னியாகவே காட்டுகின்றோம் என்ற கூற்றை நான் முற்றாக மறுக்கின்றேன். தமிழீழ விடுதலை நோக்கிய ஆயுதப் போரில் புலிகளுடன் பெண்கள் இணைந்து கொண்ட சில வருடங்களிலேயே 1990இல் போராளிகளுக்கிடையிலான முதல் திருமணம் நடைபெற்றது. காதல் மணம் செய்து கொண்ட அந்த ஆண் போராளி 1991இல் வீரச்சாவடைய, பெண் போராளி பெண் குழந்தை ஒன்றுக்குத் தாயானார். இப்போது ஆறு வயதுக் குழந்தையுடன் வாழும் அந்தப் பெண் போராளி கடந்த வருடம் இன்னொரு ஆண் போராளியைக் காதல் மணம் செய்து கொண்டார். இதைவிட ஏராளமான பெண் போராளிகள் குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ளனர். பலருக்குக் குழந்தைகள் கூட உண்டு. போர்க்களங்களில் பங்கேற்பதால் எங்கள் பெண்மையை நாங்கள் கைவிடவில்லை. அது எங்களின் இயல்பு. நாங்கள் எப்போதுமே பெண்கள்தான்.

பாலியலை தளர்வூட்டும் கெட்ட சக்தியாக நாங்கள் நினைக்கவில்லை. அதை ஒரு பலமாகவே கருதுகின்றோம்.

ஒரு பெண் போராளியின் திருமண நிகழ்வு எமக்குள் எவ்வாறு கொண்டாடப்படுகின்றதோ, அது போலவே அவர்களின் வீரச்சாவு நிகழ்வுகளும் எம்மால் மரியாதையான முறையில் கொண்டாடப்படுகின்றன. தன் தாய் மண்ணுக்காக உயிரைக் கொடுத்த பெண்களைக் கொண்டாடாமல் விடுவது அவர்களுக்கு நாம் செய்யும் அவமரியாதையல்லவா?

உங்களுக்கு நான் சொல்ல விரும்பும் கடைசி விடயம் இதுதான். பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலே ஏற்படுகின்ற புரிந்துணர்வுதான் பெண் விடுதலையைப் பெற்றுத்தரும் என்று நாங்கள் நம்புகின்றோம். எங்களுடைய ஆளுமையையும், கௌரவத்தையும், பெரும்பாலான ஆண் போராளிகள் மதிப்பதால் தான் நாம் இன்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கீழ் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு போர் முகம் மட்டுமல்ல, புன்னகை முகமும் உண்டு. அதை நீங்கள் பார்க்க வேண்டும். எங்களின் உணர்வுகள் மென்மையானவை. அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். 'நான்', 'எனது குடும்பம்' என்ற சிறுவட்டத்துக்கு அப்பாற்பட்டு 'எனது மக்கள்', 'எனது நாடு' என்று பரந்து பட்டு அன்பு செலுத்துவது மென்மையான உள்ளங்களுக்கு மட்டுமே சாத்தியமாகும். போர் எமது பெருவிருப்புக்குரிய ஒன்றல்ல. எமது மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக ஆயுதம் ஏந்திப் போராடுவதைத் தவிர, வேறெந்த வழியையும் சிறீலங்காப் பேரினவாதிகள் விட்டு வைக்கவில்லை என்பதுதான் வரலாறு எங்களுக்குச் சொல்லித்தந்த பாடம்.

*மோகனா சிவானந்தகுரு,*
*முல்லைத்தீவு.*



பொதுமக்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகளில் இந்திய அமைதிப் படை ஷெல் தாக்குதலை நடத்தியமை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும். இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, ஒரு நகரத்தை தங்களுடைய பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டால் முதலில் தாங்கள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டே ஆக வேண்டும் என்றும் நாங்கள் குடிமக்கள் தாமென்றும் இராணுவ நடவடிக்கைகள் பற்றி எம்க்கு எதுவும் தெரியாது என்றும், இந்திய அதிகாரிகள் பதில் அளித்தார்கள். ஒரு அமைதி காக்கும் படையின் தன்மைக்குச் சிறிதும் பொருந்தாத வகையில் அமைந்த இத்தகைய நிலைப்பாட்டை நாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அதிலும் இப்பிரச்சினையில் இந்தியா அடிக்கடி வெளிப்படுத்திய உணர்வுபூர்வமான புரிதலுக்கும் எதிராக இது உள்ளது. இந்த ஷெல் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளை ஒன்றும் செய்யவில்லை. இது அவர்களை மிக அரிதாகவே பாதித்தது



# 'முறிந்தபனை' நூலிலிருந்து...

# இறாலும்சேலையும்

அல்லது அச்சுறுத்தியது எனலாம். எப்போதுமே பலியாக்கப்பட்டவர்கள் அப்பாவிப்பொதுமக்களேயாவர்.

இலங்கைப் பிரச்சினை பஞ்சாப் பிரச்சினை போன்றது தானா என்று செய்தியாளர்கள் இந்தியப் பிரதமரை 1987ம் ஆண்டின் ஆரம்பத்தில் கேட்ட போது இலங்கை அரசைப் போலன்றி இந்திய அரசு தனது சொந்த மக்களின் மீதே ஷெல் தாக்குதலையோ விமான மூலம் குண்டுத்தாக்குதல்களையோ நடத்த வில்லை என்று இந்தியப்பிரதமர் பதில் அளித்திருந்தார். சர்வதேச சமூகத்தினதும், மற்றும் தமிழர்களதும் எதிர்பார்ப்புக்கள் ஒரு புறம் இருக்க, அமைதிப்படை இவ்வாறு தனது துப்பாக்கிச் சூட்டின் வலிமையைப் பிரயோகித்தமையை இந்தியப் பிரதமரின் இந்தக் குறிப்பின் பின்னணியில் வைத்து நோக்குதலும் பொருந்தும். இலங்கை அரசு தமிழ்ப் பொதுமக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யமுடியாது போனதினால், இந்திய அரசு தான் இக்கடமைகளைப் பூர்த்தி செய்யக் கூடியது என்று நிலவிய நம்பிக்கையின் அடித்தளந்தான் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கான தார்மீக உரிமையினைப் பெற்றுக் கொடுத்திருந்தது.

## இந்தியாவும் போராளிகளும்

போராளிகளில் மூத்த உறுப்பினர்கள் தமிழ் நாட்டிலேயே தங்கியிருந்தனர் என்பது பொதுவாகத் தெரிந்த விஷயமே. போராளிகளுக்கு இந்தியாவிலேயே ஆயுதமும் பயிற்சியும் வழங்கப் படுகிறது என்று இலங்கை அரசும், சர்வதேசச் செய்தியாளர்களும் மீண்டும் மீண்டும் கூறி வந்துள்ளனர். இந்தியாவின் நிலையோ தாம் இலங்கை அகதிகளை மட்டுமே கொண்டிருக்கிறோம் என்பது மட்டும் தான். எனினும் இலங்கை அரசோ தான் கூறி வந்ததைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு தனது கடற்படையைப் பலப்படுத்தி பாக்கு நீரிணை வழியான போக்குவரத்துகளைப் பூரணமாகத் தடுப்பதில் கூடிய முக்கியத்துவம் காட்டியது. இந்திய அரசும் அதன் உளவு ஸ்தாபனமான றோவும் போராளிக் குழுக்களுடன் தொடர்புகள் வைத்துள்ளன என்பதைப் போராளிக் குழுக்களின் தலைவர்களும், புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களும் மிகவும் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டுள்ளனர். இத்தகைய உறவுகள் தார்மீக மதிப்பீடுகளைப் புறக்கணிக்கின்றன. பரஸ்பரம் ஒருவரையொருவர் நம்பாத தன்மையே இத்தகைய உறவுகளை வழி நடத்துகிறது. ஒவ்வொருவரும் தான் மற்றவரைப் பயன்படுத்திக் கொண்டதாக நினைத்துக் கொண்டனர்.

தங்களை இவர்கள் ஒரு கணக்கிலும் எடுக்கவில்லை. தாங்கள் விளையாட்டில் பாவிக்கப்பட்ட பகடைக் காய்கள் மாத்திரமே என்ற சங்கடமான உணர்வு இலங்கைத் தமிழர் மக்கள் மத்தியில் நிலவியது. பொதுவாக மக்கள் இந்தியாவிடமிருந்து உயரிய நடத்தையை எதிர்பார்த்தனர். இந்தியாவில் நடந்த உட்கொலைகள் பற்றிய இந்தியக் காவல் துறையின் போக்கும் தமிழக அரசின் போக்கும் அதிக சந்தேகங்களைக் கிளப்பின. 1985ம் ஆண்டு ஆரம்பத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் மனச்சாட்சியின் உறுத்தலுடன் இருந்த தங்களின் சொந்த உறுப்பினர்களையே சித்திரவதை செய்ததையும் கொன்றதையும் பற்றிய செய்திகள் பிரபல இந்தியச் செய்தித் தாள்களிலேயே வெளிவந்துள்ளன. இந்தக் கொலைகள் இந்திய மண்ணிலேயே நடந்திருந்தன. காவல் துறையினரோ இந்தச் சம்பவங்களைக் கண்டும் காணாதது போல் நடந்து கொண்டனர். இந்தியக் காவல் துறை இம்மாதிரிப் பல தருணங்களில் நடந்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு இரண்டு சம்பவங்கள் இங்கே குறிப்பிடப் படுகின்றன.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்திலிருந்து வெளியேறியிருந்த மிக முக்கியமான உறுப்பினரான சந்ததியார் அவர்கள் அந்த இயக்கத்தால் தமிழ் நாட்டில் கொலை செய்யப்பட்டார். இலங்கையின் மூத்த கட்டிடக்கலை வல்லுநரான ஏ. டேவிட் அவர்கள் இக்கொலைபற்றிப் புகார் கொடுத்த போது தமிழகக் காவல் துறை ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதைத்தொடர்ந்து லண்டனில் வாழும் செல்வாக்கு மிகுந்த இலங்கைத் தமிழர் ஒருவர் தமிழ் நாட்டிலிருந்த தொழிலதிபரான தமது நண்பர் ஒருவருடன் தொலை பேசிமூலம் தொடர்பு கொண்டார். அந்த நண்பர் தமிழக அமைச்சர் எஸ்.டி.எஸ். சோமசுந்தரத்துடன் தொடர்பு கொண்டார். இவ்வளவுக்கும் பிறகுதான் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் கைது செய்யப்பட்டார். அவரும் பின்னால் விடுதலை செய்யப் பட்டார். மற்றொரு சம்பவம் ரூபன் பற்றியது. ரூபன் மனச்சாட்சி உறுத்தலின் மேலீட்டினால் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி அகதிகளுக்கான பணிகளில் ஈடுபட்டிருந்தார். 1984ன் இறுதிப்பகுதியில் ஒரு நாள் இவர் தனது நண்பர்களுடன் சென்று கொண்டிருக்கும்போது விடுதலைப் புலிகள் இவரை எதிர்கொண்டனர். பின் அவர்கள் இவரை அடித்துக் கொன்று விட்டனர். தமிழ்நாடு காவல் துறையிடம் இது குறித்து ஒரு பிரபல முக்கியஸ்தர் புகார் செய்தும் கூட எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. போராளித் தலைவர்கள் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரான பிரபாகரனும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவரான உமா மகேஸ்வரனும் தமிழகத்தில் உயர்பதவி வகித்தவர்களுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தனர் என்பதும் இவர்களது இயக்கங்களிடம் தாராளமான பொருள் வசதி இருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவை. போதைவஸ்து விற்பனையுடன் சில போராளிக்குழுக்களுக்குத் தொடர்பு இருந்தது குறித்துத் தொடர்ந்து பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்த வண்ணமிருந்தன. மிகவும் சமீபத்திய செய்தி லண்டன் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் புலன் விசாரணைக் குழுவிடமிருந்து வெளிவந்தது. இந்த வியாபாரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முக்கியமாகத் தொடர்பு கொண்டிருப்பதாக அறிவித்தது. (சண்டே டைம்ஸ் - லண்டன் 30 ஒகஸ்ட் 1987) எது தங்களுக்கு வசதியோ அதன்படி நடந்து கொண்ட தன்மையானது இந்தியாவின் சட்டம், ஒழுங்கு என்பனவற்றைப் பாரதூரமாகப் பாதித்திருந்தது. பல நாடுகளால் இதை ஒரு சிறிதும் சகித்துக்கொண்டிருந்திருக்க முடியாது. இனி வரவிருக்கும் ஆண்டுகளில் இந்நிலை இந்தியாவை எந்த நிலைக்கு இட்டுச் செல்லும் என்பது வேறு விஷயம்.

இலங்கை அரசின் கரங்களை முறுக்கவே தமிழ்ப் போராளிக் குழுக்களை இந்தியா பயன்படுத்தி வந்தது என்பது சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசுக்கும் வெளிப்படையாகவே தெரிந்திருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்குப் போதுமான அளவு ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் உள்ளனர் என்றும் இலங்கை இராணுவம் தங்களை நெருங்காத வண்ணம் அவர்களால் பார்த்துக்கொள்ள முடியுமே தவி அதற்கு மேலால் எதுவும் செய்ய முடியாது என்றும் யாழ்ப்பாணத்தில விஷயம் தெரிந்த அவதானிகள் தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகளுக்கு விமான எதிர்ப்புத் தாக்குதலுக்கான ஆயுதங்கள் கிடைத்திருக்கவில்லை. இலங்கை அரசு மேற கொண்ட ''ஒப்பரேசன் லிபரேசனை''த் தொடர்ந்து 'அகதிப் பணிகளுக்காக தமிழகத்தின் முதலமைச்சர் எம்.ஜி இராமச்சந்திரன் விடுதலைப் புலிகளுக்கு 3 மில்லியன் பவுண்களும் ஈரோஸ் அமைப்புக்கு 1 மில்லியன் பவுண்களும் வழங்கியமையும் குறிப்பிடத்தக்க இன்னொரு விஷயமாகும் அகதிப் பணிகளில் அனுபவம் மிகுந்த பல ஸ்தாபனங்கள் இருந்தபோது, இது இந்திய அரசின் நல்லாசிகள் பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஈரோஸிற்கும் வழங்கப்பட்ட ஆதரவாகவே பொதுவாகக் கருதப்பட்டது. இதுபற்றி பி.பி.ஸி.யில் மார்க் டெலியால் கோடி காட்டப்பட்டது.

1987ன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்த இரண்டு மாதங்களில் இந்திய அமைதிப்படை பொது மக்களிடமிருந்து தன்னைத் துண்டித்துக்கொண்டு விட்டது. ஆனால் இந்தியப்படையின் சில சிரேஷ்ட அதிகாரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

ஒரு விதமான சமூகத் தொடர்புகள், உறவுகள் கூட அவர்களிடம் நிலவியது. கொழும்புக்குக் கொண்டு செல்லப் படும் தறுவாயில் தற் கொலை செய்து கொண்டு விட்ட விடுதலைப் புலியான குமரப்பாவின் திருமணத்திற்குக் கூடத் தான் சென்றிருந்ததாகவும், அத்திருமணத்தின் போது மணப்பெண்ணிற்கு ஒரு சேலையைப் பரிசளித்ததாகவும் இந்திய அமைதிப்படை கோர்ணல் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் தனக்கு இறால் மற்றும் கடல் உணவுப் பொருட்களை அன்புடன் பரிசாகக் கொண்டு வந்து கொடுத்ததையும் வருத்த உணர்வோடு நினைவு கூர்ந்தார். கடற்கரைகளில் தன்னோடு அவர்கள் இருந்து எடுத்துக் கொண்ட சில புகைப்படங்களைக் கூடக் காட்டினார். புகைப்படத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மாத்தயா, குமரப்பா ஆகியோரும் இருந்தனர்.

வரும்...



# இனிதனாய் மேலெழு

விரைவில் வெளிவரவுள்ள மு.பொ.வின் காலி லீலை கவிதைத் தொகுதியிலிருந்து ஒரு கவிதை.

*''பாணும் பருப்புமா இண்டைக்கும்?''*
*என் மகள் ஒரு நாள் தாயிடம் கேட்ட கேள்வி*
*கவிதை எழுத உட்கார்ந்த என்னுள் இப்போதும் கேட்டது*
*கனகாலமாகப் புரண்டு புரண்டு படுக்கும்*
*கேள்வியும் இதுதான்:*
*இந்தப் பழகிப்போன சுரத்துக் கெட்ட சொற்களோடு தானா*
*இன்னும் நாம் மல்லுக்கட்ட வேணும்?*

*'அன்புடைய நண்பனுக்கு' என்று நான் நேற்றெழுதிய கடிதம்*
*நினைவுக்கு வந்தது.*
*தயாரிக்கப்பட்டிருந்த சொற்கள், செமிபாடடைந்த கழிவென*
*கடிதத்தில் விழுந்தன!*
*சொற்களின் யந்திர ஓட்டத்தில் மனிதம் அழிந்து,*
*கணனி இயங்கிற்று.*
*பழகிய சொற்கள் என்பவை,*
*மனிதம் சுடப்பட்டு கம்பத்தின் கீழ் சுருள்வதற்கு முன்*
*கண்ணை மூடிக்கட்டிய அடுப்படிக் கரித்துணி!*

*'எப்படிச் சுகம்' என்றொருத்தன் கேட்டால்*
*செருப்பைத் தூக்கிக் காட்டு ஸென் பௌத்தன் பாணியில்!*
*செருப்பைக் கண்டவன் தன் இருப்பைத் தொடலாம்.*
*தொட்டு மனிதனாகிப் புதுச் சொல்லோடெழலாம்*
*அதனால் 'வளவளா'வென அதிகம் கதைக்காதே' என*
*எனக்கு நானே கட்டளை போட்டேன்.*

*பேச்சை சுருக்கு;*
*முடிந்தால் சும்மாவே இருந்து விடு.*
*சும்மா இருத்தல் எழுப்பும் சூட்டின் கதிப்பில்*
*ஒளியுருவங்கள் பேச்சாய் தொழிற்படலாம்*
*மனிதன் மரித்ததிலோர் பேர் 'இனிதன்' இப்புவியின்கை*
*கனித்தெழலாம்!*

*தற்போதைக்கு*
*உன்னைச் சூழ்ந்து விலங்கிடும் பழஞ்சொற் படைத்தளத்தை*
*தகர்த்தெறி!*
*போராளிச் சொற்கள் புகுந்து புகுந்து புரட்சிக்க!*
*ஓசை அவி, பாஷையின் பின் பதுங்கு! அப்போது*
*உன் மூச்சிலெழும்*
*உந்தித் தணலில் உணர்வுக் கோலிடு!*
*எடுத்ததை ஒவ்வோர் மொழியிலும் விழியிடு - நுதல்விழி!*

*எஞ்சிய பிரம்மனின் மிச்ச முகத்தில்*
*கொய்த கூத்தனின்*
*நெற்றிக் கண் வை!*
*நாவின் சிறுக்கி உக்கிரம் கொள்வாள்!*
*சொற்கள் கூத்திடும்*
*சிருஷ்டிச் சிலம்பில் தெறிக்கும் பரல்கள்*
*ஓர் புதுக் குரல்!*
*புதை குழியிருந்தோர் குருத்தெறி விடுதலைக் குரல்!*

*இறந்த மனிதத்தை எடுத்தெறி!*
*புது இயல்புக்குரிய சொல்லெடு*
*'அன்பு ஆசை' என்னும் சொற்களைக் கோர்த்து*
*இன்பு எனச் சொல்! அல்லது எதையாவது*
*விறைப்பாய் விண்டிடு!*
*மனிதன் என்பதற்குப் பதில் புதிதாய்*
*'இனிதன்' எனச் சொல்*
*கீழ் இயல்புகள் வீழ மேலெழு மேலெழு...*
*இன்கமழ்ச் சொற்கள் இறைக்கைகளாய் விரி!*

மு.பொ

# தீர்வுத்திட்டம்: மறுக்கும் சக்திகளும், தி

"எமக்கு இருப்பதோ இந்தச் சிங்கள ஸ்ரீ லங்கா மட்டுமே. எமக்குப் போவதற்கு வேறு இடமெதுவுமில்லை. சிங்கள மக்கள் தமது தொழில் நிமித்தம் பல நாடுகளுக்குப் போயுள்ளனர் தான். ஆனால் நமக்கிருப்பதோ இந்த நாடு மட்டுமே. அது உண்மை. இதனை நாங்கள் பாதுகாக்க வேண்டும்."

இந்தக் கூற்றை இனவாதியான நளின் த டி சில்வாவோ, குணதாச அமரசேகரவோ, எஸ்.எல்.குணசேகரவோ, சம்பிக்க ரணவக்கவோ, சூரிய குணசேகரவோ, தினேஸ் குணவர்தனவோ அல்லது போனால் ஹரிச்சந்திர விஜேதுங் கவோ கூறியிருக்கக் கூடும் என நீங்கள் நினைத்தால் நிச்சயம் ஏமாந்துதான் போவீர்கள். ஏனெனில் இதனை கூறியவர் வேறு யாருமல்ல. சாட்சாத் நமது மாட்சிமை தங்கிய ஜனாதிபதி சந்திரிகா அவர்களே தான்.

அவர் ஆசிரியர்களுக்கான மாநாடொன்றிலேயே இவ்வாறு உரையாற்றியுள்ளார். இதை அக்கறையுடன் வெளியிட்டுள்ளது வெண்தாமரை இயக்கம் அதன் "சமாதானம்; அரசியல் தீர்வு மற்றும் நாட்டின் எதிர்காலம்" எனும் நூலில்.

சிங்கள பெளத்த மரபு ரீதியிலான பேரினவாத கோஷத்துக்கு அப்பால் நின்று எந்த சிங்கள தலைமையாலும் சமாதானம் பேச முடிவதில்லை என்பதும் சிங்கள பெளத்த பேரினவாதத்தைத் திருப்திப்படுத்தாத எந்தத் தீர்வையும் தமிழ் மக்களுக்கு வழங்கப் போவதில்லை என்பதையும் மீண்டும் உணர்த்தும் சைகைகளே இவை.

இந்த லட்சணத்தில் தான் சமாதான பேச்சுவார்த்தை முஸ்தீபுகளும், தீர்வுத் திட்டம் தெரிவுக்குழுவின் அங்கீகாரத்துடன் 3வது முறை முன்வைக்கப்பட்டிருப்பதும், அது குறித்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவகையில் பிரதான கட்சிகள் இரண்டும் கண்டுள்ள உடன்பாடுகளும் நடந்து வருகின்றன.

இவை குறித்து விமர்சிப்போரை தீர்வு முயற்சியையே எதிர்ப்பவர்களாக சித்திரிக்கும் பலரும் உள்ளனர் ஆனால் அரசின் நேர்மையற்ற முயற்சிகள் இதனை நம்பச்செய்யும் வகையில் இல்லையே. இந்தத் தீர்வு முயற்சிகளை தமிழ் மக்கள் நம்ப வேண்டுமெனில் அரசு தான் நேர்மையானது என்பதை வெளிக்காட்டுவது முன்நிபந்தனையாக உள்ளது அந்த நேர்மையை வெளிப்படுத்தும் தார்மீக பொறுப்பையுடைய அரசு, மீண்டும் மீண்டும் தமிழ் மக்களுக்கு தமது வரலாற்று ரீதியிலான ஏமாற்றங்களை நினைவுபடுத்தும் வகையில்; சிங்கள பேரினவாதத்தோடு சமரசம் செய்து கொண்டு அதனை திருப்திப்படுத்தித்தான் தீர்வை வழங்கலாம் என்று கருதுகையில் தமிழ் தரப்பு நம்பிக்கையிழக்காமலிருப்பது எப்படி?

அரசின் இந்த நேர்மையின்மைக்கு பல்வேறு காரணங்கள் கற்பிக்கப்படலாம் என்பது உண்மையே. ஆயினும் இந்தக் காரணிகளை மீறி இதுவரை எந்த அரசாங்கமும் செயற்பட்டதில்லை என்பதுதான் வரலாற்று அனுபவம்.

இதைப் புரிந்து கொள்ள அரசின் தீர்வுத் திட்ட முஸ்தீபுகள் குறித்து ஒரு மீள்பார்வையை செலுத்துவது பொருத்தமாக இருக்கும்.

### தீர்வுத் திட்டத்தின் வளர்ச்சி

**பேச்சுவார்த்தை முறிவும் தீர்வு யோசனையும்:**

1994ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பொ.ஐ.மு.வின் பிரதான தேர்தல் வாக்குறுதிகளாக சமாதானம்; பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பன அமைந்திருந்தன. இவற்றைக் கூறி அமோக வெற்றியீட்டி அது ஆட்சியையும் அமைத்தது. அதே வருட இறுதியிலிருந்து விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையையும் தொடக்கியது. ஆயினும், இப்பேச்சுவார்த்தையின் போது அது தொடர்ச்சியாகப் பல இழுத்தடிப்புகளை செய்துவந்தது. இதன் காரணமாக 1995 ஏப்ரல் 19ம் திகதி பேச்சுவார்த்தை முறிவடைந்த போது புலிகளின் திருமலை கப்பல் தாக்குதலை காரணம் காட்டி முறிவுக்கான முழுப்பொறுப்பையும். புலிகளின் மீது சுமத்தியது. புலிகளுக்கும் இம்முறிவில் பங்குண்டு என்ற போதும் முழுப்பொறுப்பையும் அவர்கள் மீது போடுவது அப்பட்டமான பொய்யாகும். ஆயினும் அரசு; தனது தொடர்பு சாதனங்களுக்கூடாக இக்கருத்தை நம்பச்செய்யும் வகையில் தீவிரமாகச் செயற்பட்டது.

### "தமிழ் மக்களை மீட்கும் யுத்தம்?" இழப்பு புலிகளுக்கா? மக்களுக்கா?

பேச்சுவார்த்தையின் போது அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த எந்த வித தயாரிப்புமே நகல் அளவில் கூட இல்லாததும் அரசு பக்கமிருந்த பலவீனங்களிலொன்று என்பதை பல விமர்சகர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். 3வது ஈழ யுத்தம் தொடர்ந்த போது பயங்கரவாதிகளிடமிருந்து தமிழ் மக்களை மீட்கும் யுத்தம் என்றும் சமாதானத்துக்கான யுத்தம் என்றும் அரசு பிரச்சாரம் செய்தது. ஆனால் வடக்கில் ஏற்பட்ட - ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இழப்புகளைக் கொண்டு இருப்பதையும் இழந்தவர்கள் புலிகளா? மக்களா? என்பதை எவருமே அறிவர் அப்படியாயின் இழக்கச் செய்தவர்களின் இலக்கு என்ன? யாரை திருப்தி செய்ய இவ்வாறு அரசு நடந்து கொண்டது? அவை நிச்சயமாக தமிழ் மக்களை திருப்தி செய்யும் ஒன்றாக இருந்திருக்க முடியாது.

### பணிய வைக்கும் முயற்சி

உண்மையில் அரசு தரப்பில் யுத்தத்தை தீர்மானிக்கிற காரணிகளும் தமிழ் மக்கள் தரப்பில் யுத்தத்தை தீர்மானிக்கிற காரணிகளும் நேருக்கு நேர் முரணான பண்புகளைக் கொண்டுள்ளன. ஏனென்றால் அரசு யுத்தத்தை தொடங்கியது பேரினவாத சக்திகளை தாஜா செய்யவே. புலிகளோ தமது அரசியல் இருப்பைப் பேண யுத்தம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளார்கள்.

"புலிகளுக்கு யுத்தம்! தமிழ் மக்களுக்கு பொதி!" என உலகுக்கு கூறிக்கொண்டு ஒரு பக்கம் யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களை களைப்படையச் செய்து; போராட்டம் மீதே வெறுப்பை ஏற்படுத்தி, அவர்களைப் பணிய வைப்பது அல்லது சரணடையச் செய்வதே யுத்தத்தின் பிரதான நோக்கமாகும்.

அந்த நம்பிக்கையிலேயே ஓட்டைத் தீர்வை தைரியமாக அரசு முன்வைத்தது. முதற் தடைவையாக 1995 ஒகஸ்ட் 3ம் திகதியன்று முதல் நகல் வெளியிடப்பட்டது. இந்த நகலை ஏற்கெனவே ஜீ.எல்பீரிஸ் தலைமையிலான குழு (ஜீ.எல்பீரிஸ் பொ.ஐ.முவுடன் சேருவதற்கு முன்னமிருந்தே) கொழும்பு பல்கலைக்கழகத்தில் பல கால உழைப்பின் பின் தயாரித்திருந்தது. அக்குழுவில் புத்திஜீவிகள் என சொல்லப்படும் பல சட்டநிபுணர்களும் இருந்தார்கள். இந்த நகல் மிகவும் முன்னேறிய ஒன்று. என்பதே பலரது கருத்து. ஆயினும், அதில் உள்ள விடயங்கள் நன்றாக குறைக்கப்பட்ட பின்பே அரசின் தீர்வுத் திட்ட நகலாக அது வெளியிடப்பட்டது. இது குறித்து கட்சிகள்; அமைப்புகள், தனிநபர்களது கருத்துக்களை ஆராய்வதற்கான அரசின் குழுவொன்றும் இயங்கியது. இறுதியாக இவையெல்லாம் ஆராயப்பட்டு முடிந்ததாகக் கூறி 1996 ஜனவரி 17ம் திகதியன்று (அரசியலமைப்பு நகலுடன்) அரசின்



திட்டமாக அது வெளியிடப்பட்டது.

### தீர்வுத்திட்டம் யாருக்கானது?

தீர்வுத்திட்டத்தை கொண்டு வருவது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காகவே என்று சொல்லப்பட்டது. அவ்வாறெனில் மக்களின் விமர்சனத்துக்காக வெளியிடப்பட்ட வேளை, தமிழ் தரப்பில் தெரிவிக்கப்பட்ட விமர்சனங்கள் முடிந்தளவுக்கு பரிசீலிப்புக்கும் கவனத்துக்கும் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதன்படி எடுக்கப்படும் முடிவும் கூட தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்ப்பனவாக இருந்திருக்க வேண்டும். ஆனால் 1995 ஒகஸ்ட் தீர்வு யோசனையானது தமிழ் தரப்பு கோரிக்கைகளை கருத்திற் கொண்டிராதது மாத்திரமன்றி பேரினவாதக் கோரிக்கைகளைக் ஈடுசெய்யும் வகையில் - ஏற்கெனவே இருந்த அதிகாரங்களும் குறைக்கப்பட்டே வெளிவந்தன.

இந்த இடத்தில் அரசு யாரைத் திருப்தி செய்வதற்காக அந்த நிலைப்பாட்டை எடுத்தது என்ற கேள்வி எழுகிறது. நிச்சயமாக தமிழ் மக்களின் தரப்பில் எழுந்த கோரிக்கையை விட சிங்கள பெளத்த பேரினவாதக் கோரிக்கைக்கே அரசு இசைந்து கொடுத்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்படியானால் இவ்விடயத்தில் அரசை கட்டுப்படுத்தக் கூடிய வல்லமை இந்த பேரினவாதத்திடமே உள்ளது என்பதும், அரசின் இருப்பே அதில்தான் தங்கியுள்ளது என்பதும் புரியும். எந்த ஆட்சியதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக சிங்கள பெளத்த பேரினவாதத்துக்கு பயந்து பண்டாரநாயக்காவும்: பின்னர் டட்லியும் செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை கிழித்தெறிய நேரிட்டதோ அதே காரணத்துக்காக இன்றும் தமிழ் மக்களின் உரிமைகளை பறித்தெடுக்கவே சிங்கள அரசாங்கங்கள் தயாராக முனைகின்றன என்பது இதிலிருந்து தெரியவருகிறது.

### நிறுவனமயப்பட்ட பேரினவாதத்தின் முன்னால்...?

சிங்கள பெளத்த சக்திகளின் பேரினவாத முஸ்தீபுகள் எளிதான சிறிய விடயமாக நோக்கக் கூடியவையல்ல. சிங்கள பெளத்த பேரினவாதம் ஏற்கெனவே நிறுவனமயப்பட்டுள்ளது, அரசைக் கட்டுப்படுத்தவும் இயக்கவும் வல்லது; (பார்க்க பெட்டி செய்தி) அரச யந்திரத்தின் மூலமாகவே சிங்கள மக்களிடம் சிங்கள பெளத்த பேரினவாத கருத்தியலை ஊட்டி வருவது.

"இலங்கையின் வரலாற்றில்

---

### பேரினவாதத்தரப்பின் அணிவகுப்பு

அரசு தீர்வு யோசனைகளை முன்வைத்ததிலிருந்து சிங்கள பேரினவாத சக்திகளின் எதிர்ப்பு தீவிரமாக மேலெழும்பி வருகிறது. இந்தச் சக்திகளை மீறி அரசு எதுவும் செய்ய முடியாத நிலையே உள்ளது. குறிப்பாக சிங்களப்பேரினவாதக்கட்சிகளைக்கூட சிலவேளை அரசினால்எதிர்த்துநின்று விடமுடியும். ஆனால் பெளத்த மகாசங்கத்தினரையும், மகாநாயக்கர்களையும் அப்படி எதுவும் பண்ணிவிட முடியாது. அரசியலமைப்பு ரீதியில் பெளத்த மதத்துக்கும், பெளத்த பீடத்துக்கும் வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவமானது (ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலேயே 1972ம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் முதல் தடவையாக பெளத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது தெரிந்ததே) அதை மீறி செயற்பட முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது. தீர்வு யோசனைக்கு எதிராக மகாசங்கத்தினர் தீவிரமாக இயங்கிவருகின்றனர். கடந்த ஜனவரி மாதம் கூட திடீரென "தீர்வுத் திட்டமானது தமிழர்களுக்கு சிங்கள நாட்டை தாரை வார்த்துக் கொடுக்கும் ஒன்று" என கூறி அதனை வாபஸ்பெறாவிட்டால்தாமெல்லோரும் மகாசங்கத்தை விட்டு விலகப் போவதாகவும் பௌத்த மகாசங்கத்தின் உயர்பீட மகாநாயக்கர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். அதன்படி செய்தும் காட்டினர். பாதயாத்திரை, சத்தியாக்கிரகம், ஆர்ப்பாட்டம், கருத்தரங்குகள் என்பனவற்றையும் நடாத்தினர். சிங்கள பத்திரிகைகளும் அதனை வரவேற்று வாழ்த்தின. இறுதியில் அரசு தரப்பில் பேச்சுவார்த்தை நடாத்தி சரணடைய நேரிட்டது. அரசு என்ன அடிப்படையில் மகாசங்கத்தினரை கைவிடச்செய்தது என்பதோ வழங்கிய வாக்குறுதி என்ன என்பதோ இறுதி வரை வெளிவரவில்லை. அரசியலமைப்பு-தீர்வு யோசனையில் கூட "பெளத்த மதம் அரச மதமாகவும் அதனை பேணிப் பாதுகாப்பது அரசின் கடமையெனவும். பெளத்தத்தைக் காக்கவென மீயுயர் பேரவையொன்று அமைக்கப்படுமெனவும் இம்முறை கூறப்பட்டுள்ளது. பெளத்த பிக்குகளின் போதனைகளை சிங்கள மக்கள் மேலானதாக மதிக்கிறார்கள் என்பதை சொல்ல வேண்டியதில்லை.

இது தவிர இனவாத கட்சிகள், அமைப்புகள்என்பனவும்முக்கியமானது. குறிப்பாக கட்சி மட்டத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிக்க சிந்தனய, ஹெல 'உருமய, ஜனதா மித்துரோ என்பன முக்கியமானவை இவை தொடர்ச்சியாக பல கருத்தரங்குகளையும் ஆர்ப்பாட்டங்களையும், கூட்டங்களையும் சத்தியாக்கரகங்களையும் நடாத்தி வருவதுடன் பல நூல்களையும்துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றன. தீர்வுத்திட்டம் குறித்து மாத்திரம் இரண்டு முக்கிய நூல்கள் இவர்களால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

குறிப்பாக பெரிய நூல்களெனக் கொண்டால் **"புலி மத்தியஸ்தர்களும் பெண்டோராவின் பொதியும்"** எனப் பெயர் கொண்ட ஒரு சிங்கள மொழி நூலை எஸ்.எல். குணசேகர என்பவர் வெளியிட்டுள்ளார். இவர் நளின் த டி சில்வா அணியை சார்ந்தவர். இந்நூல் 224 பக்கங்களைக் கொண்டுள்ளது. இதனை அப்படியே ஆங்கிலத்தில்மொழிபெயர்த்து "Tigers, Moderates' and Pandora's Package" எனும் பெயரில் வெளியிட்டுள்ளனர். இனவாதி என அழைக்கபடும்காமினி ஈரியகொல்ல என்பவரே இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் "சிங்கள ஆணைக்குழு" விசாரணை நடக்கும் இடங்களிலெல்லாம் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. ஒரு முறை சிங்கள ஆணைக்குழு விசாரணை நடக்கும் இடத்துக்கு சென்றும் கூட வாங்க முடியவில்லை அத்தனையும் தீர்ந்திருந்தது. பல இடங்களில் அலைந்து திரிந்த பின்னரே இதனை வாங்க முடிந்தது. அந்த அளவுக்கு விற்பனையாகிக்கொண்டிருக்கும் நூல் இது. விலை ரூபா 100.

இது தவிர சட்டத்தரணி சதிஸ்சந்திர தர்மசிறி என்பவர் **"நாட்டைத் துண்டாடும் யோசனையை நாங்கள் ஏன் எதிர்க்க வேண்டும்?"**



எனும் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூல் 120 பக்கங்களைக் கொண்ட சிங்கள மொழி நூல். விலை 50 ரூபா.

தர்மசிறி செனவிரத்ன என்பவர் **"தம்பி, நமது தாய்க்கு அப்படி செய்யாதே!"** என்ற பெயரில் 30 பக்கங்களைக் கொண்ட ஒரு நூலை வெளியிட்டுள்ளார். இதன் விலை ரூபா. 25.

இதைத் தவிர இன்னும் பல பேரினவாதத்தைப் பரப்பும் நூல்கள் பலவற்றில் தீர்வு யோசனைகளுக்கு எதிராக பல விடயங்களும் சொல்லப்பட்டுள்ளன.

இதற்கிடையில் சிங்கள ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டு விசாரணைகளை நடாத்தி வருகிறது. தீர்வு யோசனைக்கெதிரான தொடர் நடவடிக்கையின் அங்கமே இது.

இதில்சிங்கள பேரினவாத சக்திகள் அனைத்தும் இணைந்துள்ளன. இந்த ஆணைக்குழு இது வரை சிங்கள மக்களுக்கு நடந்த அநீதிகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டது. இதன் நடவடிக்கைகளை இனவாதத்தின் உச்ச வடிவம் எனலாம். ஏனெனில் முழுக்க முழுக்க சிங்களவர்களுக்குத்தான் தமிழ்-மலையக - முஸ்லிம் மக்களால் அநீதிகள் நடந்துள்ளன என்றும், அதற்கு பொறுப்பு சொல்ல வேண்டியது அரசே என்றும், அரசு சிங்களவர்களுக்கு சேரவேண்டிய பல உரிமைகளை சிறுபான்மையினருக்கு வழங்கிவிட்டது என்பதையும் கண்டுபிடிப்பதே இவ்வாணைக்குழுவின் நோக்கமாகும். இவ்வாணைக்குழுவின் முடிவானது சிங்கள மக்கள் மத்தியில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை.



ஜநாயகமயப்
ப்படுத்தலும்
ந்து வந்து
ாக) பின்னர்
தும் மேலாட்
ஜநாயகமயப்
துமொன்றாக
து" என்று
அடிக்கடி

கட்டுப்படுத்துவது; மற்றையது ஏனைய பிரச்சினைகளை இரண்டாம் நிலைக்கு தள்ளுவது. ஏகாதிபத்தியங்களின் ஊடுருவல் தலையீடுகள் பற்றி கதையாதீர்கள் (சிறிய உதாரணம் VOA), சுரண்டல்கள் குறித்து கதையாதீர்கள், வாழ்க்கை செலவுப் புள்ளி குறித்து கதையாதீர்கள், எந்த பிரச்சினையானாலும் யுத்தத்துக்கு முன் இரண்டாம் பட்சமே. யுத்தம்

**சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள்:** சிங்கள பௌத்த நாட்டில் கொடுப்பதை வாங்கிக்கொண்டு கம்முண்ணு இருக்க வேண்டியவர்கள் ஏனைய இனத்தவர்கள். அதை மீறி உரிமை கேட்போரை-போராடுவோரை அழிப்பதைத் தவிர வேறுவழியில்லை என்பதே இவர்களின் நிலைப்பாடு. இந்த அடிப்படையிலேயே தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பவர்கள்.

அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய ஒரு குறைந்தபட்சத் தீர்வாகக் கூட இது இல்லை. (பார்க்க பெட்டி செய்தி)

**எதிர்க்கட்சி:** இது ஒற்றையாட்சிக்கு குந்தகம் விளைவிக்கும் யோசனை.

### ஆதரிக்கும் சக்திகள்

ஆதரிக்கும் சக்திகளாக, (ஸ்ரீமணி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தவிர்ந்த) அரசுடன் இணைந்து செயல்படும் கட்சிகள், மரபு இடதுசாரிக் கட்சிகள், புத்திஜீவிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) என்போர் காணப்படுகின்றனர். இந்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தற்போதைய தீர்வு யோசனையை பிரச்சாரப்படுத்துவதற்காகவே பல நாடுகள் நிதியுதவி வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. பல லட்சங்கள் செலவளித்து இதனை இவர்கள் செய்து வருகிறார்கள். இந்த பலவீனமான தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதற்கு இவையும் துணைபோகின்றன இந் நிறுவனங்கள் பல இதில் உள்ள குறைபாடுகளை தட்டிக் கேட்பதோ அல்லது அதனை திருத்துவதற்காக அரசை நிர்ப்பந்திப்பதோ கிடையாது. மாறாகத் தீர்வு யோசனையை விமர்சிப்பவர்களை, தீர்வு முயற்சியையே எதிர்ப்பவர்களாகக் காட்டுவதில் தான் முனைப்பாக

உண்மை நிலையும் அது தான். இந்தச் சக்திகள் அவ்வளவு துச்சமான சக்திகளல்ல. சர்வதேச அளவில் இவர்களது குரலுக்கு இடமுண்டு. பொ.ஐ.மு வை பதவிக்கு கொண்டு வருவதிலும் முக்கிய பாத்திரமாற்றியவர்கள் இவர்கள். அது தவிர அரசாங்கத்தை முற்போக்கானதாக நம்பியவர்கள். நம்புபவர்கள்.

### ஐ.தே.கவின் முடிவு உறுதியானதா?

சரி, இன்று தீர்வுத் திட்டம் தெரிவுக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது என்று அரசினால் கூறப்படுகிறது. ஐதேக ஆரம்பத்தில் "தெரிவுக்குழுவிலுள்ள எமது அங்கீகாரத்தை பெறாமல் எப்படி தெரிவுக்குழுவின் அங்கீகாரம் கிடைத்து விட்டது என கூற முடியும்" என கேட்டு சலசலப்பை ஏற்படுத்திய போதும் பின்னர் பிரித்தானியாவின் நெருக்குதலின் பின்னர் மௌனமாகியது. என்றாலும் இத்தீர்வு யோசனையை தொடர்ந்தும் ஒற்றையாட்சிக்கு குந்தகமான ஒன்றாக கருதும் அதன் நிலைப்பாட்டில் மாற்றமில்லை. மேலும் ஐதேகவுக்குள்ளேயே பலர் ஐதேகவின் சமரச முயற்சியை ஏற்கவில்லை என்பது பத்திரிகை அறிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது.

### தாண்ட வேண்டிய தடைகள்!

இத்தனை குறைபாடுகளையுடைய தீர்வு யோசனையைக் கூட இன்னும் பேரினவாத சக்திகள் எதிர்க்கத்தான் செய்கிறன. இந்நிலையில் தீர்வு யோசனை அமுலுக்கு வருவதற்குள் அது கடக்கவிருக்கும் தடைகளை அறிந்தால் மேலும் பீதியே மிஞ்சும். அது கடக்க வேண்டிய தடைகள் இவை.

1. யோசனை முன்வைத்தல் (முடிந்தது)
2. அதனை திருத்தங்களுக்குள்ளாக்கல் (முடிந்தது)
3. நகலாக முன்வைத்தல் (முடிந்தது)
4. எதிர்க்கட்சியின் சம்மதத்தைப் பெறல் (இன்னும் நிச்சயமற்றதாகவே உள்ளது)
5. தெரிவுக்குழுவின் அங்கீகாரத்தைப் பெறல் (பெற்று விட்டதாகக் கூறப்படுகிறது)
6. பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு கொண்டுவரல்
7. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுதல்
8. மக்கள் தீர்ப்புக்கு விடப்பட்டு; வெற்றி பெறல்.

இதில் கடக்க வேண்டிய முதலாவது தடையரணுக்கு முன் இப்போது வந்துள்ளது. பாராளுமன்றத்தில் ஐதேகவின் அங்கீகாரமில்லாமல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது. ஐதேக. சம்மதிக்குமா?

அடுத்த தடையரண் மக்கள தீர்ப்பு."மக்கள் தீர்ப்பு" என்ற பேரில் மீண்டும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சிங்கள பெரும்பான்மை மக்களிடம் அனுமதி கேட்பது உண்மையில் ஒரு கேலிக்கூத்தே அன்றி வேறல்ல.

### தீர்வை அமுல்படுத்த முடியுமா?

சரி; அவற்றிலும் வெற்றியடைந்தது என வைத்துக்கொண்டாலும் தமிழ் கட்சிகளே ஏற்காத ஒன்றை (நியாயமற்ற தீர்வை) புலிகளும் ஏற்கப்போவதில்லை: அப்படியெனில் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும். அதற்காக யுத்தத்தை தொடர்ந்து நடாத்த வேண்டும். அப்படியென்றால் மீண்டும் அழிவு; இழப்பு என்பனவே தொடரும். அரசின் தரப்பிலோ, புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் நிலத்தை மீட்காமல் அங்கு தீர்வை அமுல் படுத்தவே முடியாது. இவற்றுக்கெல்லாம் அப்பால் இது எப்போது சாத்தியம். தீர்வு யோசனையை முன்வைப்பதிலேயே அரசாங்கம் தனது ஆட்சியின் பாதி ஆயுட்காலத்தை இழந்துவிட்டது இனித்தான் முக்கியமாக கடக்க வேண்டிய அரண்களே உள்ளன. இதற்குள் எத்தனை அரசாங்கங்கள் வந்து போகவேண்டிவருமோ...? அவற்றின் பண்புகள் எப்படி அமையுமோ..?

உண்மையில் ஸ்ரீ லங்கா அரசுக்கு ஒரு நிரந்தரத் தீர்வில் அக்கறை இருப்பின் நேர்மையான முறையில் எந்தச் சக்திகளுக்கும் சோரம் போகாத முறையில், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், வடக்கு கிழக்கு இணைந்த, அதனை தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகமாக அங்கீகரிக்கிற வகையில் செயல்படுவது அவசியமானது. அதற்கு முன்நிபந்தனையாக அது தன்னை அகவயமாக சிங்கள-பௌத்த பேரினவாத பண்பிலிருந்து மீட்டெடுப்பது அவசியமாகும். அடுத்தது; அரசாலேயே வளர்த்துவிடப்பட்ட பேரினவாத கருத்தியலை அரசே பொறுப்புடன் புறவயமாக களைந்தெறிவதற்கான வேலையை செய்வது அவசியமாகும். இவற்றைச் செய்யாமல்; சிங்கள மக்களிடம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு அனுமதி கேட்பது என்பது ஒரு வகை ஏமாற்றே. வளர்த்த கிடாய் மாரில் முட்டிய கதையாக அரசே வளர்த்துவிட்ட பேரினவாதமானது அரசின் சிறிய முயற்சியைக் கூட ஆதரிக்க அனுமதிக்காது என்பதை கவனத்தில் எடுத்து செயற்படுவது அவசியமாகும். ●

# ...ரிக்கும் சக்திகளும்!

தீர்மானப
ினவாதமே
யுத்தத்தை
கூட அது
வாதத்தின்
டுமெனில்
யுத்தத்தை
டயங்களை
து. ஒன்று
ஓரளவு

செய்ய விடுங்கள். வெல்லும் வரை பொறுங்கள். என்பதே அரசின் நிலை.

### யோசனையை எதிர்க்கும் அணிகள்

தீர்வு யோசனையை எதிர்க்கும் கூட்டில் பல அணிகளைச் சார்ந்தவர்கள் உள்ளனர். அதனைப் பிரதானமாக நான்காகப் பிரிக்கலாம். நான்கு தளங்களிலிருந்து இதனை இவர்கள் எதிர்க்கிறார்கள்.

**தீவிர இடதுசாரிகள்:** பாட்டாளிகளை இனரீதியிலும் புவியியல் ரீதியிலும் கூறுபோடும் அரசினதும் தமிழ் இனவாதிகளதும் முயற்சிகளை முறியடிக்கவேண்டும் என்ற அடிப்படையில் செயற்படுபவர்கள் இவர்கள் தீர்வுத்திட்டத்தை எதிர்ப்பதற்கான அடிப்படை இதுவே.

**தமிழ் தரப்பு:-** தமிழ் மக்களின்

**-என்.சரவணன்**

உள்ளன. தீர்வுக்கான முயற்சிகளை தமிழ் தரப்பு ஒருபோதும் எதிர்த்ததாகத் தெரியவில்லை அதற்காக தீர்வுத்திட்டம் போதுமானதாக இல்லாதபோது அதை ஏற்க முடியாது என்று கூறவுமா முடியாது?

### வீணாக அடம் பிடிக்காதீர்கள்! அழியாதீர்கள்!

தீர்வு யோசனைக்கு ஏன் தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்பது குறித்து அவர்கள் தரப்பில் சொல்லப்படும் நியாயங்கள் இவைதான்.

-முதற் தடவையாக நேர்மையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

-ஒரு அரசாங்கம் இத்தனை தூரம் இறங்கி வந்ததே அதிசயம். அதனை வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்வதை விட்டு பிடிவாதம் பிடிக்கக் கூடாது.

-முன்னைய மாகாண சபையை விட இது மேலானது.

-நேர்மையாக பேச்சுவார்த்தையை நடாத்தி தோல்வி கண்டிருக்கிறது அரசு.

-பேரினவாத சக்திகள், எதிர்க்கட்சி என்பவை எதிர்க்கின்ற போதிலும் தைரியமாக முன்வைக்கப்பட்ட இதை நாம் ஊக்குவிக்க வேண்டும் வெற்றியடையச் செய்ய வேண்டும்.

இவற்றின் மூலம் மொத்தத்தில் கூறப்படுவது இது தான். இனியும் வீணாக அழியாதீர்கள். இழக்காதீர்கள்! விட்டுக்கொடுங்கள்!! கைவிடுங்கள்!!! சரணடையுங்கள்!!!! (இவர்களில் பெரும்பாலானோர் இனப்பிரச்சினையை வெறும் மனிதாபிமான பிரச்சினையாக நோக்குபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.) டொக்டர் கொன்ஸ்ரன்ரைன் ஒரு கூட்டத்தில் இவ்வாறு பேசியிருந்தார்.

"கடந்த ஐதேக. காலத்தில் யாரை நான் புத்திஜீவிகள் என நம்பியிருந்தேனோ, அவர்கள் அனைவருமே ஐதேக எதிர்ப்பாளர்களாகவும், பொ.ஐ.மு ஆதரவாளர்களாகவும் இருந்ததாலேயே அப்படி தெரிந்தார்களென்பது பின்னர் தான் எனக்குத் தெரிந்தது."

கள்
ியில் உள்ள
சாதனங்கள்.
வதில் இவை
கின்றன.
தீர்மானிப்
வழிநடத்துவ
ான. எனவே
சியம்செய்து

கள்
ிகைகளில்
உள்ளன.
க்குகின்ற
சிங்களே",
என்பனவும்
கருத்தை
ம இந்த

லக் ஹவுஸ்
த எதிரான
ரில் தமிழ்
ங்கரவாதத்
யாயப்படுத்
வருகிறது.
த்திரிகை
க. இதன்
வியாபாரி
லங்களில்
. இதை
க்கியமாக
யர் விக்டர்
க்கும் இது
து.மிகவும்
நரடியாக
ற, பாரிய
திரிகை.
ஆயுத
ன நடத்த
த்தத்தை

ஊக்குவித்தல் வேண்டும். அதற்கு சிங்கள மக்களை உசுப்பி விட வேண்டும். இனவாதத்தை பரப்புவதற்காகவே இந்த பத்திகைகையை நடத்தப்படுகிறது என்றும் கூறுவர். இதன் உரிமையாளர் ஜனாதிபதி சந்திரிகாவின் உறவினர் என்ற போதும் ஜனாதிபதியாலேயே ஆயுத வியாபாரி என வர்ணிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**லங்காதீப** இது விஜய நிறுவனத்தினது. இது திவய்ன அளவு இல்லாவிட்டாலும் இனவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதில் சளைத்ததல்ல. இதன் உரிமையாளர் ரணில் விக்கிரமசிங்கவின் உறவினர் என்பதும் அதற்காகவே இந் நிறுவனத்தின் ஏனைய பத்திகைகளான Sunday Times, Midweek Mirror போன்ற பத்திகைகள் ஐ.தே.கவுக்கு சார்பாக செயற்பட்டு வருகின்றன என்றும் கூறலாம். இதன் உரிமையாளரையும் ஆயுத வியாபாரத்துடன் சம்பந்தப்படுத்தி கதைப்பது வழக்கம். ஆனால் திவய்னவை நிரூபித்ததைப் போல் இதனை நிரூபிக்க முடியவில்லை.

### வானொலி

இது தவிர வானொலியை எடுத்துக்கொண்டால், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சேவையோடு அதன் ஸ்ரீ லங்கா எப்.எம் மற்றும் விஷ்வஷ்ரவணி எனும் சேவையும் அரசு சார்பு சேவைகளாக இயங்குகின்றன. இவற்றைத் தவிர சிரச, லக்ஹண்ட, சவண, ரஜரட்ட ஆகிய தனியார் சிங்கள வானொலி சேவைகளும் Yes FM, Capitol Radio, FM99, TNL Radio போன்ற தனியார் ஆங்கில வானொலி சேவைகளும் இயங்குகின்றன. இவை அனைத்தும் மிகவும் பேரினவாத சார்பான முறையில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன.

### தொலைக்காட்சி

தொலைக்காட்சியை எடுத்துக்கொண்டால் ரூபவாஹினி, ஐ.டீ.என். ஆகியவை அரசு சார்பு நிறுவனங்களாகவும் ஸ்வர்ணவாகினி, Dyna Vision, ETV, TNL, MTV, BBC போன்ற தனியார் சேவைகளும் இயங்குகின்றன. இவற்றிலும் இனவாத சார்புடைய நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்றன.

தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட செய்திகள் ஏதாவது காட்டப்பட்டாலும் அவை தமிழ் மக்களின் நலன்களை முற்றுமுழுதாகப் பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதில்லை. எப்போதாவது நடக்கும் ஓரிரு கலந்துரையாடல்களில் மட்டும் தமிழ் மக்களின் நலன் சார்ந்த கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ரூபவாஹினி, ஐடீஎன். ஆகிய அரசு சார்பு சேவைகளில் மாத்திரமே தமிழ் செய்திகளும் காண்பிக்கப்பட்டு வருகின்றன. டீ.என்.எல். எம்.டீ.வி ஆகியவற்றில் சிங்கள மொழியில் அரசு சார்பற்ற செய்திகள் வெளியிடப்பட்ட போதும் தமிழில் அப்படியான வாய்ப்புகள் எதுவுமில்லை.

மொத்தத்தில் இந்த தொடர்பு சாதனங்கள் அத்தனையும் தமிழ் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் இல்லை. அவை ஏற்கெனவே கட்டியெழுப்பப்பட்டுள்ள சிங்கள பேரினவாதத்துக்கு தேவையான இனவாத தாகத்தை தணிக்கும் கடமையை - அந்த இடைவெளியை நிரப்பும் பணியையே செய்து வருகின்றன. தமது இனவாத சார்புக் கொள்கை, மூலதனத்தை பெருக்குதல், ஆயுத வியாபாரம், அரசியல் லாபம் என்பனவற்றுக்காக முழு மக்களையும் பலிகொடுத்துக்கொண்டிருக்கின்றன என்பது தான் உண்மை.

### தீவிர இடதுசாரிகள்

தீவிர இடதுசாரி தரப்பில் ஜே.வி.பி, ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி, போன்றவை உள்ளன. இவைகளில் ஜே.வி.பி ஒரு முக்கியமான சக்தியாகும். ஜே.வி.பி. தீர்வுயோசனைக்கு எதிராக பாரிய அளவில் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகிறது. ஜே.வி.பி மீதான மக்கள் செல்வாக்கும் அதிகரித்து வருகிறது. இந் நிலையில் அதன் தீவிர செயற்திறன் இந்த தீர்வு யோசனைகளுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக பல்கலைக்கழக மட்டங்களில் இனப்பிரச்சினை தொடர்பான விவாதங்களை நடாத்தி வருகிறது. இவ்விவாதங்களில் ஜே.வி.பி.யின் கருத்துக்கு கூடிய ஆதரவுண்டு. ஜே.வி.பி. இத்தீர்வுத் திட்டத்தை நாட்டைத் துண்டாடும் ஒன்றாகவே பிரச்சாரப்படுதி வருகிறது. அண்மையிலும் இனப்பிரச்சினை குறித்து மூன்று சிங்கள நூல்களை வெளியிட்டுள்ளது. நேரடியான இனவாதமாக அல்லாவிட்டாலும் குறுகிய பார்வையே தொடர்ந்துமுள்ளது. பாட்டாளிகளை இனரீதியில், புவியியல் ரீதியில் கூறுபோடும் ஒரு அமெரிக்க சதியென்றும். இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக நாடுகளை கூறுகூறாக சிறுசிறு நாடுகளாக பிரித்துவிட்டு அதன் பின் சுரண்டுவது இலகுவானதாக கருதுவதாகவும். அதற்காகவே சீ.ஐ.ஏ நிறுவனம் இனவாத புலிகளுடன் கூட்டு சேர்ந்து நாட்டை உடைப்பதாகவும், அந்த சதியை முறியடிக்க தமிழ் சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து வர்க்கப் புரட்சியை முன்னெடுக்க வேண்டுமெனவும் கூறி வருகிறது. பிரித்தானிய ஏகாதிபத்தியமும், கடந்த கால முதலாளித்துவ தலைமைகளுமே பிரச்சினைக்கான காரணகர்த்தாக்களென்றும் ஒரு சோஷலிச ஆட்சியில் அப்படி நடக்க இடமளிக்கப்படாது என்றும் கூறி வருகின்றனர்.

ஆனால் இது வரை தமிழ் மக்கள் நடைமுறையில் அன்றாடம் சிங்கள இராணுவத்தினாலும், அரசாலும் முகம் கொடுத்து வரும் பிரச்சினை குறித்து ஒரு போதும் இவர்கள் குரலெழுப்பியதில்லை. இந்நிலையில் இதைக்கூற அவர்களுக்கு என்ன தார்மீக உரிமையுள்ளதோ? அவர்களே சொல்லுவதைப் போல் புரட்சிக்காக தமிழ் மக்கள் அணிதிரண்டாலும் அதுவரையான தமிழ் மக்களின் அவலங்களுக்கு என்ன தீர்வென்பதை ஒரு போதும் கூறியதில்லை. கூறவும் முடியாது என்பது தான் உண்மை.

# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 28

# பொறாமை எங்கிருந்து ஆரம்பிக்கிறது?

தமிழில் : அருண்

### பொறாமையின் பல முகங்கள்

வெளிப்படையாக, கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், பெற்றோர் தமது குழந்தைகளிடையே பொறாமை இருக்கவே செய்யும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பொறாமை பல முகங்களைக் கொண்டதாகவும், மறைந்திருப்பதாகவும் இருக்க முடியும். அது தொடர்ச்சியான போட்டியாகவும் இருக்க முடியும். அது தொடர்ச்சியான போட்டியாகவும் வெளிப்படலாம். அல்லது எந்தப் போட்டிகளையும் ஒதுக்கிவிடுவதாகவும் இருக்கலாம். பிரபல்யத்துக்காக தேடி அலைவதாக இருக்கலாம். அல்லது ஒரு சுவரோவியம் போல அமைதியாக இருந்தும் விடலாம். அது ஒரு அக்கறையற்ற பெருந்தன்மையாகவோ அல்லது இரக்கமற்ற பேராசையாகவோ வெளிப்படலாம். தீர்க்கப்படாத சிறுபராயத்துப் போட்டிகளின் கசப்பான அனுபவங்களின் விளைவுகள் வயதானவர்களின் வாழ்வுபூராவும் வெளிப்படுவதை நாம் அவதானிக்கலாம். எத்தகைய காரணகாரியத் தொடர்புமற்று வீதியில் போய்க் கொண்டிருக்கும் ஒவ்வொரு வாகனத்துடனும் போட்டிச் சவாலிலீடுபடும் ஒரு மனிதரிடம் ஒரு சாதாரண பிங்- பொங் விளையாட்டில் வரும் தோல்வியைத் தாங்க முடியாத ஒரு மனிதரிடம், தனது அபிப்பிராயத்தை உறுதிப்படுத்துவதற்காக தனது வாழ்வையும், அதிர்ஷ்டத்தையும் பந்தயமாக வைக்கக் கூடிய ஒருவரிடம், அல்லது ஒரு பணச்சேர்ப்புக்கான பட்டியலில் தனது சக்திக்குமீறியதாயினும் மற்றவர்களை விட அதிகமாகக் கொடுக்க விரும்பும் ஒருவரிடம் இவற்றுக்கான உதாரணங்களைக் காண முடியும்.

இது போலவே எல்லாப் போட்டிகளையும் தவிர்த்துக்கொள்பவர், போட்டிதொடங்க முன்பேதான் தோற்றுவிடுவேன் என்று கருதுபவர், எப்போதும் எவ்விடத்திலும் பின்னால் உள்ள ஆசனத்தில் அமரவே தயாராகவே இருப்பவர், தனது சட்டபூர்வ உரிமைகட்காகக் கூட எழுந்து நிற்கத் தயங்குபவர்கள் எல்லோரும் இத்தகைய சிறுபராயத்தின் தீர்க்கப்படாத போட்டிகளின் காரணமாக உருவான விளைவுகளுக்கு உதாரணங்களேயாவர். இத்தகைய சகோதரப் போட்டிகள் நாம் புரிந்துகொள்வதை விடவும் அதிகளவுக்கு ஒரு குழந்தையைப் பாதிக்கின்றன. இவை ஒருவருடைய இயல்பின் மீது மிகவும் அழுத்தமான முத்திரையைப் பதிப்பதுடன் அவரது நடத்தையையும் பாழாக்கிவிடக்கூடும்.

### பொறாமையின் தோற்றம்

தனது தாயாரினால் மிகவும் நேசிக்கப்படும் ஒரே குழந்தையாக தான் மட்டுமே இருக்க ஒரு குழந்தை விரும்புவதிலிருந்தே இது ஆரம்பிக்கிறது. இந்த விருப்பம் மிகவும் உடமைத்தன்மை வாய்ந்ததாக இருப்பதால் அது எந்தப் போட்டியாளர்களையும் சகித்துக் கொள்வதில்லை. சகோதர சகோதரிகள் பிறக்கும் போது, குழந்தை தாய் தந்தையரது முற்றுமுழுதான அன்புக்காக அவர்களுடன் போட்டியிடுவது ஆரம்பிக்கிறது. பொறாமை குறித்த பெற்றோரின் அணுகுமுறையைப் பொறுத்து இந்தப் போட்டி வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ அமையலாம். சில பெற்றோர், சகோதரப் போட்டிகளை சகிப்பதில்லை. அவர்கள் எத்தகைய ஒரு வெளிப்படையான ஒரு போட்டி நடவடிக்கைக்கும் தண்டனை வழங்குகிறார்கள். வேறு சில பெற்றோர்கள் இவற்றை கவனியாமல் விடுவதன் மூலம் பொறாமைக்கான ஒரு காரணத்தை உருவாக்குவதைத் தவிர்க்கிறார்கள். அவர்கள் தமது குழந்தைகள் எல்லோர் மீதும் ஒரே அளவான அன்பையே தாம் கொண்டிருப்பதால், பொறாமைப்படவேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவிக்கிறார்கள். பரிசுகள், பாராட்டுக்கள், விடுமுறைகள், உதவிகள், உடைகள், சாப்பாடு என்பவை எல்லோருக்கும் சமத்துவத்துடனும் நீதியாகவும் வழங்கப்பட வேண்டும்.

ஆயினும் இத்தகைய எந்த அணுகுமுறைகளும் சகோதரர்கட்கிடையிலான போட்டி, பொறாமையிலிருந்து முற்றுமுழுதாக விடுதலையைத் தந்துவிடப் போவதில்லை. சமமான தண்டனையோ, சமமான புகழ்ச்சியோ முற்றுமுழுதான அன்புக் கான விருப்பத்தினை சாந்தப்படுத்தி விடப்போவதில்லை. இத்தகைய ஒரு விருப்பம் ஒரு போதும் நிவர்த்திக்க முடியாத ஒன்று என்பதால், பொறாமை, முற்றாக அகற்றப்பட்டுவிட முடியாத ஒன்றாகும். ஆனால் இப்பொறாமை உணர்வு பாதுகாப்பாக வெடிக்கிறதா அல்லது பயங்கரமாகப் பற்றி எரிக்குமா என்பது இது தொடர்பான எமது மனப்பான்மையிலும் நடவடிக்கையிலுமே தங்கியிருக்கிறது.

### பொறாமையை வளர்க்கும் மனப்பாங்கு

சகோதரர்களுக்கிடையே, சாதாரண நிலைமைகளில், பால், வயது, வித்தியாசங்கள் பொறாமை எழக் காரணமாக இருக்கின்றன. வயது வந்த சகோதரனுக்கு அதிகளவு வசதிகளும் சுதந்திரமும் இருப்பதால் அவன் மீது பொறாமை உண்டாகலாம். இளைய சகோதரன் மிகவும் அக்கறையாகக் கவனிக்கப்படுவதால் அவன் மீது பொறாமை ஏற்படலாம். ஒரு பெண் குழந்தை தனது சகோதரனான ஆண் குழந்தை மீது பொறாமைப் பட அக்குழந்தையின் ஆண் குறி காரணமாகலாம். ஆண் குழந்தைகட்கு விசேட சுதந்திரம் இருப்பதாக சொல்லப்படுவது கூட பொறாமையை ஏற்படுத்தலாம். தனது சகோதரிக்கு விஷேட கவனிப்புக்கள் நடப்பதாக ஒரு பையன் பொறாமை அடைகிறான்.

பெற்றோர்கள் தேவையில்லாமலே வயதுக்கும், பாலுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து நடக்கும் போது தான் ஆபத்து ஆரம்பமாகின்றது. ஒரு குழந்தையின் இயலாத்தன்மைக்கும், ஒரு ஆறு வயதுச் சிறுவனின் சுதந்திரத்தை விட முக்கியத்துவம் கொடுக்கும் போதோ அல்லது மாறி சிறுவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் போதோ பொறாமை அதிகரிக்கின்றது. இதே மாதிரித்தான் ஒரு குழந்தையின் பால், அதன் தோற்றம், கெட்டித்தனம், இசை ஆற்றல், மற்றும் பிற செயற் தேர்ச்சிகள் குறித்து அதன் அளவுக்கு மீறிய பெறுமானம் வழங்கப்படும் போதும் பொறாமை உருவாகிறது. ஒருவரை விட ஒருவர் சிறந்தவர் என்று கூறுவது கூட பொறாமையை வளர்க்கலாம். ஆனால் குறிப்பிட்ட விடயத்திற்கு ஒரு வரை விட இன்னொருவருக்கு அதிகமாக பாராட்டுதல் அல்லது பரிசு வழங்குதல் குழந்தைகளிடையே முடிவற்ற போட்டிச் சண்டையை உருவாக்கி விடும்.

வரும்..



ஆங்கில மூலம் : டொக்டர் ஜெய்ம் கி ஜினொட்

---

## எகிப்திய திரைப்பட விழா

ஏப்ரல் 4ம்திகதி முதல் 8ம்திகதி வரை மருதானை எல்பின்ஸ்டன் திரையரங்கில் எகிப்திய திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

இலங்கையில் எகிப்திய திரைப்பட விழா இடம் பெற்றது இதுவே முதற்தடவையாகும். இலங்கைத்தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தினதும் எகிப்திய தூதுவராலயத்தினதும் அனுசரணையுடன் இடம்பெற்ற இவ்விழாவில் ஐந்து திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

''அரசுக்கெதிராக...'', ''இருட் பறவைகள்'', ''ஜனாதிபதியின் விஜயம்'', ''ஜிலீ(ம் நகரில்) மில் ஐஸ்கிறீம்...'', ''மறைவின் வெளிப்பாடு..'' என்பனவே திரையிடப்பட்ட படங்களாகும்.

ஒவ்வொரு நாட்டுத் திரைப்பட விழாக்களின் மூலமும் அந்நாட்டு அரசியல், கலை, கலாசார, சமூகநிகழ்வுகளை, நிலைப்பாடுகளை விளங்கிக்கொள்கிற சந்தர்ப்பம் கிடைக்கிறது. அந்தவகையிலேயே நாம் அதிகம் பெரிதாய் அறிந்திராத எகிப்தைப் பற்றியும் இப்படங்களின் மூலம் விளங்க முடிந்தது.

சில தனிப்பட்ட நடிகர்களின் நல்ல நடிப்புக்கள் இப்படங்களில் இடம் பெற்றிருப்பினும் நாம் திரைப்பட விழாக்களில் எதிர்பார்க்கிற 'நல்ல' படங்களைப் பார்க்கிற சந்தர்ப்பத்தை இது தரவில்லை. ஓரளவு நல்லதாகச் சொல்லக்கூடியபடம் 'மறைவின் வெளிப்பாடு''. யுத்த காலங்களின் போது பிறநாட்டு உயரதிகாரிகள், ராஜதந்திரிகள் உடன் விபச்சாரம் புரிந்து தகவல்கள் பெறும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட பெண்ணின் வாழ்க்கையும் அவளின் முடிவும் பற்றிய கதையிது. 'இருட்பறவைகள்' என்ற படம் முஸ்லிம் நாடென அடையாளம் காணப்படினும் முதலாளித்துவ கலப்பு மிகுந்த ஒருவகையான மதச்சார்பற்ற அரசிற்கு, எதிராக இயங்குகின்றவர்களையும் அவர்களின் முடிவுகள் இருளில் எங்காவது மோதி எதையாவது உடைத்துச் சின்னாபின்னப்படுத்துகிற பறவைகளாக இருக்கும் என்பதையும் காட்டுகிறது. இதில் ஓர் இருட்பறவையாக இஸ்லாமிய அரசொன்றை அமைப்பதற்குப் போராடிவரும் ''முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம்'' (Muslim Brotherhood Movement) காட்டப்படுகிறது.

இன்னொரு படம் நன்றாகப்பாட முடியுமான அநாதை இளைஞனினதும் அவனது சகாக்களினதும் நகரத்து வாழ்க்கைப் பற்றிய கதை.

அரபு மொழி மூலமான இப்படங்களுக்கு ஆங்கில உபதலைப்புகள் வழங்கப்பட்டன. எனினும் சினிமாக் கையேடுகள் வழங்கப்படாதது ஒரு குறையே. எகிப்தில் நல்ல படங்கள் இருந்திருப்பினும் இத்தெரிவு தன் நாட்டை அரசை அறிமுகப்படுத்துகிற பணியையே முக்கியமாக கொண்டுள்ளது போல் தெரிகிறது.

இனிவரும் காலங்களில் நல்ல படங்கள் திரையிடப்படுமென எதிர்பார்ப்போம்.

## ''தி இங்லிஷ் பேஷன்ட்'' -



இந்த வருடம் ஆஸ்காரின் 12 விருதுகளில் 9 விருதுகளைத் தட்டிக்கொண்டிருக்கிறது 'தி இங்கிலிஷ் பேஷன்ட்' என்ற படம்.

இதே பெயரில் இலங்கையில் பிறந்த கனடாவாசியான ''மைக்கேல் ஆண்டட்ஜ்'' எழுதிய நாவலே இந்தப்படமாகும்.

இந்த நாவல் சர்வதேச Booker பரிசைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹொலிவூட் நிறுவனங்கள் தயாரிக்க மறுத்த படம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வெளிவந்து ஆஸ்காரைப் பெற்றிருப்பது பிரமிக்க வைக்கிறது.

ஹொலிவூட்டின் பெரிய நடிக, நடிகையர்கள் நடிக்காத இப்படத்தின் வெற்றிக்கு இதில் நடித்தவர்களான Ralph Fienness, Kriston Scott Thomas, Juliette Binoche போன்ற நட்சத்திரங்களே முக்கிய பங்காற்றியுள்ளார்கள். இவர்களது பெயர்களும் ஆஸ்காருக்காக பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

படமாக்கப்பட்ட நாவலின் ஆளுமையும் மிக முக்கிய காரணமெனக் கூறப்பட்டாலும் இந்த உண்மைக்கதையான நாவலில் வரும் பிரதான பாத்திரம் நாஜிகளின் கைக்கூலி, ஒற்றர் எனவும் அவரை படத்தின் மூலம் இயக்குனர் புனிதப்படுத்திவிட்டார் எனவும் விமர்சனம் கிளம்பியுள்ளது.

இப்படத்தயாரிப்புக்கான செலவுகளை Twentieth Century Fox ஏற்பதாயிருந்தது. எனினும் இயக்குனர் அந்தன் மிங்கெல்லாவும் தயாரிப்பாளர் Saul Zaentz பெரிய நட்சத்திரங்களை (டெமி மூர்போன்றோரை) நடிக்க வைக்க விரும்பாததால் அதை வாபஸ் வாங்கிக் கொண்டது. இதனால் இத்தாலியில் இடம்பெற்ற ஆரம்பத் தயாரிப்புக்களும் தடைப்பட்டது. பின்னர் Miraman நிறுவனHarvey Weinsteinனின் 27.5மில்லியன் டொலர் உதவியுடன் (இதில் 6 மில்லியன் வரை தயாரிப்பாளருடையது) தயாரிப்பாகி வெளியாகி இன்று ஆஸ்கார் விருதையும் வென்றுள்ளது.

சத்யா

# லிங்கநகர்: அபகரிக்கப்படுகிற பூமி!

மனித உரிமைகளுக்கான யாழ்பல்கலைக் கழக ஆசிரியர்களினால் "திருகோணமலை: அரச கருத்தியலும் அச்சத்தின் அரசியலும்" என்ற தலைப்பிலான விஷேட அறிக்கை (இல.8) ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை திருமலை குறித்த சில அண்மைக்கால சம்பவங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டித் தருகின்றது. சரிநிகரில் வெளிவந்த லிங்கநகர் தொடர்பான பல செய்திக் கட்டுரைகள் வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இவ்வறிக்கையில் லிங்கநகர் விவகாரம் தொடர்பான சில தகவல்கள் வெளியிடப் பட்டிருப்பதால், லிங்கநகர் தொடர்பான பகுதிகளை தமிழில் சுருக்கமாக மொழிபெயர்த்துத் தருகிறோம்.

1996 செப்டெம்பர் 17ம் திகதியன்று எம்.டி.பீரிஸ் என்ற காணி உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது இறுதிக் காலத்திய நடவடிக்கைகளில் ஒன்று தான், லிங்கநகரில் உள்ள அரச காணிகளில் குடியேறியிருந்த மக்களை வெளியேற்றும் உத்தரவைப் பிறப்பித்ததாகும். இந்தக் குடியேற்றம் இலங்கைப் பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயல்பட்டுவரும் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஈ.பி.டி.பி. என்ற தமிழ் ஆயுதக்குழுவினால் ஏற்படுத்தப்பட்டதாகும். இந்தக் குடியேற்ற நிலத்தை இலங்கை இராணுவத்துக்கு சொந்தமான நிலம் என்று கூறுகிறது பாதுகாப்பு அமைச்சு. காணி உத்தியோகத்தர் பீரிஸைக் கொலை செய்த கொலையாளி அவரது நகரத்திலுள்ள வீட்டை சில நாட்களாக நோட்டம் விட்டு வந்தார் என்று கூறப்படுவதாலும், புலிகள் சாதாரணமாக நடமாடுகின்ற கிராமப் புறங்களுக்கு பீரிஸ் பல தடவை சென்று வந்திருந்த போதும் அவருக்குப் புலிகளால் எதுவும் நடக்கவில்லை என்பதாலும் இக்கொலைக்கு புலிகளை காரணமாகக் கொள்ள முடியாது என்ற அபிப்பிராயம் பரவலாக நிலவுகின்றது. காணி உத்தியோகத்தர் பீரிஸ் அவர்களது நடவடிக்கைகளை அங்குள்ள தமிழ்மக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் கவனித்து வந்துள்ளார்கள் என்றபோதும் அவர் புலிகளின் இலக்குகளில் ஒன்றாக இருந்தார் என்பதற்கான எத்தகைய சான்றுகளும் இல்லை. இக்கொலைக்கான கொலையாளி அடையாளம் காணப்படவில்லை என்பதுவும் அதற்குப் போதிய சாட்சியங்கள் எதுவும் இல்லை என்பதுவும், உண்மையே என்ற போதும், இக்கொலை குறித்த சந்தேகம் ஈ.பி.டி.பி. மீதே நிலவுகிறது.

1996ம் ஆண்டு செப்டம்பர் 29ம் திகதி ஞாயிறு ஐலண்ட் பத்திரிகையில் "ஒரு காணி உத்தியோகத்தரின் கொலை" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. இக்கட்டுரையானது, சில உத்தியோகத்தர்கள், முன்னை நாள் ஐ.தே.க். அமைச்சர் காமினி ஜயசூரிய போன்ற, ஒரே மாதிரியான பார்வை கொண்டவர்களை நேர்காண்பதன் மூலமாகப் பெறப்பட்ட அபிப்பிராயங் களின் தொகுப்பாக அமைந்திருந்தது.

இந்த ஐலண்ட் கட்டுரையின் சாரம் இதுதான்.

லிங்கநகர், ஐ.தே.க அரசாங்கத்தினால் இராணுவம் தன் சூட்டு வீச்சு எல்லை (firing range) யைக் கட்டுவதற்காக வழங்கப்பட்ட 47 ஏக்கர் காணி நிலத்திலேயே அமைந்துள்ளது.

கடற்படையின் படகுத்துறை, பிளான்டன் பொயின்ற் இராணுவ முகாம், விமானப் படைத்தளம், திருகோணமலைத் துறைமுகம் ஆகியவற்றை தாக்குவ தற்கு இந்த லிங்கநகர்ப் பகுதி பாவிக்கப்படக்கூடும் என்பதால், அங்குள்ள மக்களை அகற்றி வேறோரிடத்தில் குடியிருத்துவதென்று அதிகாரிகள் மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பீரிஸ் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின் படி லிங்கநகரின் 177 தமிழ்க் குடும்பங்களில் 31 குடும்பங்கள் மட்டுமே யுத்தத்தால் இடம் பெயர்ந்த குடும்பங்களாகும். ஏனைய குடும்பங்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்து கொண்டு வந்து குடியேற்றப்பட்டவர்களாவர். இந்த குடியேற்றத்தை ஏற்படுத்துவதற்கு பின்னால் நின்ற குழுவானது தனது நடவடிக்கைகளை மேலும் அதிகரித்துக் கொள்ளப்போகின்றது என்ற ஒரு பயமும் அங்கு நிலவியதாக கூறப்படுகிறது.

திருமலையின் சிவில் நிர்வாகத்தை செயலற்றதாக்கும் நோக்கத்துடன் மிகவும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு திட்டம் அங்கு இருந்ததாகவும், அத்திட்டத்தின் ஒரு பகுதியே தமிழ் அகதிகள் என்று கூறப்படுவோரை பெருமளவில் கொண்டு வந்து திருகோணமலை நகரில் குடியேற்றும் செயலாகும் என்றும் கூறுகிறார் காமினி ஜயசூரிய.

உண்மையில் அங்கு நடந்தது என்ன என்பதை எம்மால் சேகரிக்க முடிந்த தகவல்களின் அடிப்படையில் இப்போது நோக்குவோம்.

## லிங்கநகர்

திருகோணமலை நகருக்கு வடக்காக அமைந்துள்ளது லிங்கநகர். நகரத்திலிருந்து வடக்குப் புறமாக இரு நிலப்பரப்புக்களையும் இணைக்கும் இடுக்குப் போன்ற பகுதியின் உட்புறமாக பிரயாணம் செய்யும் ஒருவருக்கு முதலில் இடதுபுறமாகத் தெரிவது Cottair Bay ஆகும். முதலில் உட்துறைமுகத்தையும் அடுத்து உவர்மலையென அழைக்கப்படும் கடலுள் துருத்திக் கொண்டிருக்கும் பாறைப் பகுதியையும் காணலாம். உவர் மலையை அண்டிய பகுதியில் தற்போதைய வடக்கு கிழக்கு மாகாணசபை அலுவலகங்கள் இருக்கின்றன. அதை அடுத்து சன நெரிசலான ஒரு பகுதியும் அதைத்தொடர்ந்து இறுதியாக பிளான்டன் பொயின்ற் இராணுவ முகாமினால் பிடிக்கப்பட்டிருக்கும் பெரிய நிலப்பரப்பும் காணப்படும். இடது புறம் இருக்கும் ஜய சுமணராம ஆலயத்தினைத் தாண்டிச் செல்லும் வீதி இடது புறம் யாட் கோவ் (yard cove) என்ற சிறு கடலேரியையும் வலது புறத்தில் மட்டிக்களியையும் ஊடறுத்துக் கடந்து செல்கிறது. இதை அடுத்த பகுதிதான் லிங்கநகர். ஆகும். இதை அடுத்து தொடர்ந்து சென்றால் பாலையூற்று என்ற தமிழ்க் கிராமம் எதிர்ப்படும்.

லிங்கநகரானது பிரதான வீதிக்கு அருகாக இருக்கும் பழைய கிராமத்தினை ஒரு பகுதியாக கொண்டுள்ளது. இக் கிராமத்தில் 150க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் 1970க்கு முற்பகுதியிலிருந்தே வாழ்ந்து வந்துள்ளனர். 1980இல் இன்னும் ஒரு 100 குடும்பங்கள் அரச காணிகளில், கிராமத்தின் உட்புறமாகக் குடியேறி வாழ்ந்து வந்தார்கள். 1989இல் காணி அமைச்சு அரச காணிகளில் குடியேறி வாழ்பவர்களை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவித்திருந்தது. இந்த அறிவிப்பின் நோக்கம் அந்த அரச காணிகள் வேறு நோக்கங்களுக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிராத பட்சத்தில் அவற்றை குடியிருப்போரு க்கு ஒழுங்கமைத்துக் கொடுப்பதாகும். இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் ஒன்று, 27.10.1989க்குப் பின்னர் எத்தகைய ஒழுங்கமைப்புக் களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் தெரிவித்தது. லிங்கநகரைச் சேர்ந்த சில குடும்பங்கள் தமது பெயர்களை பதிவு செய்ததுடன் காணி உத்தரவுப் பத்திரங்களையும் பெற்றுக் கொண்டன.

1990ம் ஆண்டின் ஆரம்பங்களில் இந்தியப்படையானது திரும்பிச் செல்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் அன்றைய ஜனாதிபதி பிரேமதாசவுடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் திருகோணமலையை நோக்கி நகர்ந்தனர். லிங்கநகரைச் சேர்ந்த சில இளைஞர்கள் எத்தகைய எதிர்காலம் பற்றிய சிந்தனையும் அற்றவர்களாய் புலிகளுடன் தம்மை அடையாளம் காட்டிக்கொண்டதுடன் ஒருவகை அதிகாரத்தைக் கொண்டவர்களாகவும் செயல்பட்டு வந்தனர். பெருமளவு இலங்கைப் படைகள் நிலை கொண்டிருந்த ஒரு பல்லினத் தன்மை வாய்ந்த அந்த இடத்தில் இவர்களின் நடவடிக்கைகள் மிகவும் கோபத்துடன் அவதானிக்கப்பட்டு வந்தன. இலங்கைப் படைகள் தமக்கு சந்தர்ப்பம் வரும்வரை காத்திருந்தன. இந்தச் சந்தர்ப்பம் 1990 யூன் மாதத்தில் வந்தது. புலிகள் பொலிஸாரை கொலை செய்ததைத் தொடர்ந்து கிழக்கின் நகரங்களில் உருவான யுத்தம் இந்த வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தது. லிங்கநகரைச் சேர்ந்த மேற்கூறிய வகையைச் சேர்ந்தவர்களும் அல்லது இந்தியப்படையுடன் சேர்ந்து அங்கு நகர்ந்தவர்களும் எந்தவிதமான வேற்றுப்பிரிப்புமின்றி இலங்கைப் படையினால் கைது செய்யப்பட்டு பிளான்டன் பொயின்டிலும் வேறு இடங்களிலும் கொல்லப்பட்ட 870 பேருள் அடங்குவர் (அறிக்கை 10.11.12).

இன்னொரு தடவை அகதிகள் பெருமளவில் வெளியேறினார்கள். 1992இல் காணியுத்தரவுப் பத்திரம் பெற்ற 14 குடும்பங்கள் அங்கு வாழ்ந்து வந்தார்கள். இந்தக் காணிகள் தான் இன்று பிரச்சினைக்குரிய காணிகளாக உள்ளன. கிராமத்தின் பழைய பகுதி, அங்குள்ள பாடசாலை மற்றும் ஆலயத்துடன் பெருமளவு அகதிகள் திரும்பி வந்தபின் கிட்டத்தட்ட பழைய நிலையில் இயங்குகிறது.




## பிளான்டன் பொயின்ட் இராணுவ முகாமும் லிங்கநகரும்

இந்தக் கதையை கொஞ்சம் பின்னோக்கிய காலத்திலிருந்து தொடங்க வேண்டும். உவர் மலையினை அடுத்துள்ள பிளான்டன் பொயின்ற் ஆனது பிரித்தானிய கடற்படை அதிகாரிகளால் பாவிக்கப்பட்டு வந்தது. இது 1958இல் அவர்களால் கைவிடப்பட்டபின் நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்தது. இந்தப் பற்றைக் காடான பிரதேசத்தில் பின்னர் தமிழர்கள் குடியேறி வாழத் தொடங்கியிருந்தனர். 1975இல் ஜயசூரிய என்ற தொண்டர் படையைச் சேர்ந்த காணி உத்தியோகத்தரின் மூலம் அந்தப் பகுதி இராணுவத்தினரால் எடுக்கப்பட்டது. அவர் அங்கு குடியிருந்தவர்களை இரவோடிரவாக வெளியேற்றினார். குடியேற்றவாசிகளை இவ்வாறு நடத்தியது மிகவும் பாரபட்சமான முன்னொரு போதும் நடந்திராத ஒரு மோசமான நடவடிக்கையாகும். இந்தக் காலகட்டத்தில் தான் தெற்கில் பல தோட்டங்களை அரசு பொறுப்பேற்றதும் பல நிலப்பரப்புக்கள் சிங்களவர்கட்கு பகிர்ந்தளிக்கப்பட்டதும் நடந்தது.

அப்போது திஸ்ஸ தேவேந்திர என்பவர் அங்கு அரசாங்க அதிபராக இருந்தார். அவர் இந்த நடவடிக்கை தொடர்பாக மிகவும் அதிருப்தியுற்றவராக இருந்தாரென்றும் இந்த நடவடிக்கையுடன் உடன்படாமல் இருக்கவும், இராணுவத்தினருடன் பகைத்துக் கொள்ளாமல் இருக்கவும் வேண்டி அவர் அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறி இருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பழைய முகாமானது முனையின் ஓரத்திலுள்ள ஒரு சிறு பகுதியாகவே இருந்தது. ஆனால் புதிய முகாமோ மிகவும் பெருப்பிக்கப்பட்டு, பிரதான வீதியை நோக்கி கிழக்கு முகமாக பல பர்லாங்கு தூரத்தை உள்ளடக்கியதாக எல்லையிடப்பட்டது. உவர் மலையை அண்டிய பிரித்தானிய அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நிலங்கள் உட்பட்ட நிலங்கள் தனியாருக்கு சொந்தமான நிலங்களாகும். பிரித்தானிய கடற்படை அதிகாரிகள் 1958இல் தாம் போகும் போது அந்த நிலங்களை பழையவர்களுக்கே வழங்க அதன் உரிமையாளர்கள் பற்றிய விபரங்களைத் திரட்ட முயன்றனர். ஆயினும் உரிமையாளர்களைக் கண்டுபிடிக்க முடியாததாலும் நிலச் சொந்தக்காரர்கள் அன்றைய நிலத்தின் பெறுமதி மிகவும் குறைவாக இருந்ததால் அவற்றைத் திருப்பிப் பெறுவதில் அவ்வளவு அக்கறை காட்டாததாலும் அந் நிலங்களை அரச நிலங்களாக பிரித்தானிய கடற்படை அதிகாரிகள் விட்டுச் சென்றுவிட்டனர்.

1978இல் அல்லது அல்லது 1979இல் பிளான்டன் பொயின்டிலுள்ள இராணுவம் தமக்கு அருகாமையிலுள்ள லிங்கநகரை உள்ளடக்கியதாக முனையிலிருந்து ஆறு சங்கிலி (132 யார்) நிலப்பரப்பை அளந்து தருமாறு கோரிக்கை விடுத்தனர். இந்தப் பிரதேசத்தை அவர்கள் தகர்ப்பு வேலைகளுக்கான இடமாகப் பயன்படுத்த தமக்கு தேவை என்று தெரிவித்தனர். இதற்கான நிலமானது நகர்ப்பகுதி, கச்சேரி, கிண்ணியா, குச்சவெளி, தம்பலகாமம் ஆகிய பகுதிகளுக்குப் பொறுப்பான கச்சேரி நில அளவையாளரால் அளந்து பிரித்தொதுக்கப்பட்டது. இந்நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1.9 ஏக்கராகும். ஆயினும் இந்நிலப்பரப்பு ஒரு போதும் இராணுவத்தினரால் பாவிக்கப்படவேயில்லை. (வரைபடத்தைப் பார்க்கவும்.) இந்தக் காலத்தில் ரீ.டி.பீரிஸ் என்பவர் திருகோணமலையின் ஏனைய பிரதேசங்களான கந்தளாய், சேருவில, கோமரங்கடுவெல ஆகிய பிரதேசங்களின் கச்சேரி நிலஅளவையாளராக இருந்தார். 1982இல் மாவட்ட அபிவிருத்தி சபையின் தெரிவு செய்யப்பட்ட தலைவரால் ஒரு பெண்ணுக்கு காணி உறுதியொன்று வழங்குவது தொடர்பான விடயமொன்றில் ரூபா 500ஐ லஞ்சம் வாங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டார். அவரது தொழிற்காலம் முழுவதும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளன. 1983ம் ஆண்டு இனக்கலவரத்தை அடுத்து, இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக முன்வைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைகள் செயலிழந்து போயின.





பீரிஸினால் 1992இல் முன்வைக்கப்பட்ட வரைபடம்

வரும்...

# கெளிச்சல்

வ.அ. இராசரத்தினம்



நேத்து முழுக்க அடுப்பே மூட்டல்ல. 'மகரி' படக்குள்ளதான் என்ர மகன் நண்டு வித்தேன் என்று சொல்லி நாப்பது ரூபா கொண்டு வந்தான். கடையெல்லாம் பூட்டிற்றாங்க. என்ர மனுஷி பக்கத்து வீட்டில ஒரு கொத்து அரிசி கடன் வாங்கினா. சோத்துக்குக் கறியும் இல்ல. வளவுக்க நிக்கிற முருங்கையில கீரை பிச்சா. ஊர் படுற பஞ்சத்தில ஒரு முருங்கையிலயும் எல இல்ல. ஏதோ சமாளிச்சம். கழனித்தண்ணியில அவிச்ச முருங்கைக் கீரையோட சோத்தத் திண்டிற்றுப் படுத்தா நித்திரையா வருகுது? கொட்டுக் கொட்டென்று முழிச்சிக் கொண்டே யிருக்கன். இண்டையப்பாடு ஒருபடியா ஒப்பேறிற்று. நாளைக்கு என்ன செய்றது? ஒரே யோசன. பொறங்கடலுக்குத்தான் போக வேணும். அங்கு போறதெண்டாலும் குடாவத் தாண்டித்தானே போகவேணும். கடலில எறங்கவே நேவிக்காரன் விடுறான் இல்ல.

யோசிச்சுக் கொண்டே படுக்கன். எப்ப நித்திரையாப் போனனோ தெரியாது. ஆனாலும் தலக்கோழி கூவக்க வழக்கம் போல முழிச் சிற்றன். மூணாஞ்சாமத்தில முழிச்சுத்தான் ஒவ்வொரு நாளும் கடலுக்குப் போறது. முழிச்ச உடன, பெரியகுவாட்டி ஓடைக்க போய் தூண்டில் இரைக்கு றால் வடிப்பம். அத்தாங்கப் போட்டுத் தரையோட வழிச்சுப் பத்துப் பதினஞ்சு தரம் தூக்கினா இரைக்கு றால் பட்டிடும். பிறகு தலக்கோழி கூவக்க வள்ளத்தத் தள்ளிக்கொண்டு கடலுக்குப் போவம். எங்கட தோணி, ஆத்தக் கடந்து கடலில எறங்கினப் பொறகுதான் சுபஹு தொழுறத்துக்கு வாங்குச் சத்தம் கேக்கும்.

இப்பவும் அப்படித்தான் தலக்கோழி கூவக்க முழிச்சிற்றன். மூத்த ரெண்டு பயல்களும் எனக்குப் பக்கத்திலதான் படுத்திருக்காங்க. அவங்களைப்பார்த்தாக் ('கல்பெல்லாம்') எரியுது. அவங்க நல்லா நலவாச் சாப்பிட்டு நாலுமாசமிருக்கும். மூத்த மகன் அபூபக்கர் பள்ளிக்குப் போகாம பெரியகுவாட்டி ஓடைக்க நண்டுக் கூடு போடுறான்.

அந்தக் காலத்தில நாங்க நண்டைக் கையாலே கூடத் தொடமாட்டம். அது 'ஹறாம்' இல்லாட்டியும் 'மக்கூறு' தூண்டிலில வலயில, நண்டு பட்டாக்கூடக் கழட்டி விட்டிருவம். இப்ப என்ர மகன் நண்டுக் கூடு போட்டு நண்டு பிடிக்கிறான். முஸ்லிம்க தான் மார்க்கெட்டில நண்டு யாபாரம் பண்றாங்க.

நண்டைக் கொழும்புக்கேத்திற யாபாரிக காட்டில நல்ல மழையாம். ஆனா என்ர மகன் கொண்டு போன ரெண்டு நண்டுக்கும் நாப்பது ரூபாதான் கொடுத்தானாம். அந்தக் காசில தான் நேத்தய ஓசீவனம்! அல்லா என்ர குழந்தய இந்தச் சின்னவயசில பாடுபட வெச்சிற்றியே என்று மனசு துடிக்குது. நான் பாயில குந்திக் கொண்டு குறைச்சுருட்டப் பத்த வெக்கிறன். விடியச்சாமக் கூதலுக்கு சுருட்டுப் புகை 'றாகத்தாத்'தான் இருக்கு.

நான் முழிச்சிக் கொண்ட சிலமனைக்கேட்டு ஊட்டுக்குள்ள படுத்திருந்த றாபியாவும் முழிச்சிக் கொண்டு கதவைத்திறக்கிறா. வெளியில வந்தவ கேக்கிறா ''ஏன்; இந்தச் சாமத்தில எழும்பிற்றீங்க?''

நான் பதில் சொல்லல்ல. இதுக்கு என்னத்தைத் தான் சொல்றது? றாபியா மறுபடியும் கேக்கிறா ''என்னையும் எழுப்புறதுக்கென்ன?

நான் இதுக்கும் பதில் சொல்லல்ல. சுருட்டுப் புகையை இழுத்து மூக்காலயும் வாயாலயும் வெளிவிடுறன். றாபியா விறாந்தைத் தொங்கலில இருந்த ஒச்சாய்ப்புக் குசினியில அடுப்ப மூடித் தேயிலைக்குத் தண்ணி வைக்கிறா. தண்ணிய வைச்சிற்று வெளியில போய்க் கிணத்தடியில முகத்தைக் கழுவிற்று வாறா.

கேத்தல் தண்ணி கொதிச்சிற்றுது. கேத்தல் மூடியைத் தள்ளிக்கொண்டு கொதி தண்ணி வழிஞ்சு அடுப்பை நூக்குது. நான் பாத்துக் கொண்டு தான் இருக்கன். சுருட்டும் முடிஞ்சு போச்சு. இனி அதை உதட்டிலே கவ்விப் பிடிக் கேலா. சின்னி விரக்கிடை அளவுக்கும் இல்ல. நான் சுருட்ட வெளியிலே தூக்கி எறியுறன்.

அடுப்படிக்க வந்த றாபியா ஜொக்குக்க தேயிலையைப் போட்டுக் கொதி தண்ணிய ஊத்துறா. பொறகு, இளஞ்சிவப்பு நிறத் தேயிலைச் சாயத்தச் சுண்டுக் கோப்பையில ஊத்திவந்து என்னட்டத் தாறா.

''சீனி போடல்லியா?''

''பொழுது பட்ட பொறகுதான் அபூபக்கர் காசு கொண்டு வந்துதந்தான். அதில நாளைக்குக் கடன் அரிசி வாங்கிக் கொடுக்க இருபத்தைஞ்சு ரூபா போனா, பதினஞ்சு ரூபா மிச்சந்தான். ஆனாக்கடையெல்லாம் பூட்டினதால சீனி வாங்க முடியல்ல முந்த நாள் வாங்கின சீனி ஒரு சொட்டுக்காணும் கிடக்கு. கையில வைக்கிறன். நக்கித் தேயிலையைக்குடியுங்க.''

எனக்குப் பெருமூச்சுவருகுது. 'சுபானல்லா என்ன கக்கிசத்த எல்லாம் எங்களுக்கு உட்டிருக்கா.'' என்று படைச்சவன மௌனமாக் கேட்டுகொண்டே பீச்சாங்கையை நீட்டுறன். நீட்டிய உள்ளங்கையிலே றாபியா சின்னக் கரண்டியால, சீனியை வைக்கிறா. நான் சீனிய நக்கிக்கொடு தேயிலையைக் குடிக்கிறன். அக்கரைச் சேனைப் பள்ளியில சுபஹு தொழுகைக்கு அழைக்கிற வாங்குச் சத்தம் கேக்குது. றாபியா என்னிட்டக் கேக்கிறா.

''நீங்க கடலுக்குப் போகக்குள்ள சுபஹு தொழுகைக்குப் போக நேரம் இல்ல. இப்பதான் கடலுக்குப் போறகில்லியே. பள்ளிக்கெண்டான போய் அல்லாக் கிட்டத் 'துஆ'க் கேளுங்களன். அந்த வல்ல றகுமான் நம்ம கக்கிசத்த எல்லாம் போக்கி நமக்கு நல்ல 'பரக்கத்தத்' தருவான்.

நான் இதுக்கும் ஒண்ணும் சொல்லல்ல. பள்ளிப்பக்கம் தல வச்சிப் படுக்காத எத்தன 'ஹராமி'கள் இந் ஊரில 'பரக்கத்'தோட இல்லியா? என்று எண்ணிக்கொண்டே கொடியிலிருந்த சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டு விறாந்தைப் பத்தியிற் கட்டியிருந்த ஓடுபன்னாங்கை இழுத்து வழி எடுத்துக்கொண்டு வெளியில போறன்.

அந்த விடியக் காலயில கச்சான் காத்து உசாரத்தான் வீசுது. ஆனாச் சாகப்போற கச்சான். மதியந்திரும்பினா அது செத்து வாடை பேந்து விடும். சிலவேளை குன்னாவாடையாய்ப் பெலமாக வீசி, அந்தக் காத்தோட மழையும் வரும். இந்தக்காலத்தில கெளிச்சல் மீன் நல்லாப்படும்.

நான் தெருப்படலயத் திறந்து கொண்டு வெளியில போறன். பட்டம் புதைஞ்ச கடற்கரை மணலில நடந்து லோஞ்சி கட்ற ஜெற்றிக்குப் போறன். ஏந்த ஊட்டிலயும் ஆள் புளங்கிற அசுமாத்து இல்ல. நான் நடக்கிறன். கடற்கரையிலே தோணிகளும் பைபர் கிளாஸ் போட்டுகளும் இழுத்து வைக்கப்பட்டிருக்கு. குடாக்கடலில் ரெண்டு என்ஜின் போட்டுகள் நங்கூரம் போட்டு நிக்கு. அவையெல்லாம் வளத்த நாய் முகத்தைப் பாக்கிறாப் போல என்னப்பாக்குது. 'எங்களைத்தள்ளிக்கொண்டு கடலுக்குப் போங்க' என்று அவையெல்லாம் சொல்றாப் போல இருக்கு. இந்த கச்சான் இறுக்கத்தில நெய்மலத்தீவுப் பாரில செம்மீன் நிக்கும். சம்பூர்க்குடாவுக்குள கறுப்புக் கட்டியாச் சூரைமீன் படர்ந்து வரும். கெங்க மோத்து வாரத்தில முள்ளுவாள் படும். சின்னங்க மலைப் பாரில துள்வண்டும் சீலாமீனும் படும்.

நான் பெருமூச்சு விடுறன்! இந்தக் கடல் மாதா எங்களுக்கு எப்பவும் வஞ்சகம் செய்றதில்ல. தைமாதத்தில கெங்கை ஆத்துவாயில கொடு வாயும் வெண்ணெய்ச் சுறாவும் படும். மடையில முள்ளுவாள படும். கரையிலே டிஸ்கோ வலயில போனா நெத்தலி பிடிப்பம். காத்து இறுக்கம் போட்டாச் சூரையும் கெளிச்சலும். நெய் மலத்தீவுப்பாரில எந்தக் காலத்திலயும் செம்மீனும் பாரையும் பிடிபடும். ஆடி ஆவணியில கணவாய அத்தாங்கு சுத்தாங்காய் அள்ளுவம். இந்தக் கடல் தாயின் மடியில அல்லாஹுத்தாலா எங்களுக்காகப் படைச்சிக்கிற தெரவிசத்த மனுஷன் பிடிக்கவிடுறான் இல்ல. வள்ளத்தக் கடலில இறக்கினா, அதக் கண்ணாடியில பாத்திட்டு திருக்கிணாமலையிலிருந்து நேவிக்காரன் வெடி வைச்சிக்கொண்டே வருவான். போங்க போங்க எண்டு கடலில நிக்கிறவங்களைக் கலைப்பான். அதுக்கும் மேல நிண்டாச் சுடுவான். அவனயார் கேக்கிறது? அதுக்குப் பயத்தில இப்ப எவருமே கடலுக்குப் போறல்ல.

போன வருஷத்துக்கு முந்தின வருசம். தைமாசத்திலே நாட்டில சமாதானம் வந்திற்று என்று ஊரெல்லாங்கத. நாங்க எல்லோரும், சோனவன், தமிழன், சிங்களவன் எல்லோருமே சந்தோசப்பட்டம். அந்தச் சந்தோஷத்தில இந்த ஊர் வேதக்காரச் சனம் எல்லாம் கொழும்புக்கு வந்த தங்கட பாப்பாண்டவரப் பாக்க அள்ளுப்பட்டுப் போச்சுதுகள். போய்வந்த சனம் எல்லாம் புளுகிச்சு. ''பாப்பாண்டவரைப் பார்க்கச் சகல வசதியையும் ஆமிக்காரனே செய்து தந்தான். 'வெடு சுடு' எண்டில்லாம எல்லாரோடயும் அன்பாப் பழகினான் எவ்வளவு சந்தோஷமாயிருந்துது''

இந்தச் சமாதானம் நெரந்தரமா நெலைக்கும் என்றுதான் எல்லாரும் நம்பினம். ஆனா மூணு மாசத்தில எல்லாமே போச்சு. மறுபடியும் கொழம்பிற்று.

சித்திரை மாதத்தில ஒரு இரவு. அன்றைக்குப் பெய்யாமழையும் பெருமழையும். சித்திரையிலயும் மழை பெய்றதா? ஆனா அன்று மின்னலோடயும் முழக்கத் தோடயும் பெருமழை. திடீரென ஒரு முழக்கம் கேட்டுது. எங்கேயோ இடி விழுந்திற்று என்று நினைச்சம். ஆனா விடிஞ்சப் பொறகுதான் கேள்விப் படுறம். 'திருக்கிணாமலைத் துறைமுகத்தில ரெண்டு சண்டைக் கப்பலப் புலிகள் வெடிவைச்சித் தாட்டுப்போட்டுதாம்!

அதோட சண்டை பிறகும் வந்திற்று. சண்டையெண்டா எவ்வளவு கக்கிசம்!

இப்படித்தான் தொண்ணூறாம் ஆண்டிலயும். இந்தியன் ஆமி மூட்டைக் கட்டிற்றுப் போயிற்று. பொடியன்கள் ஊருக்குள்ளே திரியிறாங்க. ஆமிக்காம்புக்குப் பக்கத்திலே சென்றி கட்டுனாங்க. திடீரென்று ஒரு இரவு இரண்டு பக்கதில இருந்தும் வெடிச்சத்தம் கேக்குது.

பொடியன்களைத் துரத்துறதுக்காகக் கடலில கண்போட்டில இருந்து செல்லடிக்கிறாங். நேவிக்காரன் ஷெல் அடிச்சதில அக்கரைச் சேனையிலயும் வேடங்கந்திலயும் பலருக்குக் காயம். ஆறு முஸ்லீம் ஆக்கள் செத்திற்றாங்க. கடற்கரையிலிருந்த நாங்க எல்லோரும் ஷெல்லடிக்குப்பயந்து ஊருக்கு ஓடுறம். பெரிய பாலம் பள்ளிவாசலில ஆகாயக் கப்பல் குண்டு போட்டதில ஒம்பது பேர் மவுத்தாயிற்றாங்க. அந்த ஜனாசாக்களையெல்லாம் அடக்கம் பண்ண நானும் போனன்! அந்தக் கோரத்த இப்ப நெனைச்சாலும் குல நடுங்குது. பொறகு பொறகு ஆமிக்காரன்ர கை ஓங்கிற்று. நாங்க எல்லாம் பழயபடி எங்க வீட்டுக்குத் திரும்பி வந்திற்றம்.

கடற்கரையோரமா நடந்து நான் ஜெற்றியடிக்கு வந்திற்றன். பலாா்பற்றி விடியுது. நெலம் நல்லாத் தெளிஞ்சிற்று.

நான் வடக்க பாக்கிறன். பெரியங்க மலைத்தீவு வெளிச்ச வீட்டில இன்னமும் முணுமுணுக் கென்று பச்சையும் சிவப்புமா லைற் எரியுது. தீவுக்குப்பின்னால, துறைமுகத்துக்கு வெளியில வேப்பங்குடாவுக்குள்ள நிக்கிற 'கொட்டக்கப்பல்' தெரியுது. அந்தக்கப்பல் இன்றைக்குப் 'பிறிமா'ப்பாலத்துக்குப் போய்க் கோதுமக் கொட்டய இறக்கும். கொட்டக் கப்பலுக்குப் பக்கத்தில இன்னொரு சரக்குக் கப்பலும் நிக்குது. துறைமுகத்துக்குள்ள எத்தன கப்பல் நிக்குதோ? இங்க நின்று பார்த்தா

→

ஒண்ணும் தெரியாது. துறைமுகத்துக்குள்ள கிழக்குப் பக்கமாக நேவிக்கப்பல்களும், பீரங்கிப் படகுகளும் அணி அணியா நிக்கும். அப்படி நிண்ட கப்பல்களில ரெண்டைத்தான் கடலால நீந்தி வந்து குண்டு வைச்சி ஒடைச் சானுகளாம். அந்தப்பயத்தில கொட்டியாரக் குடாவில எந்தத் தோணியையும் இறங்க விடுறான் இல்ல. அதுக்குக் கடல் வலயத்தடை என்று அழகான பெயர்.

ஜப்பான் காரன் திருக்கிணாமலயில குண்டு போட்ட உலகச்சண்டையிலயும் கடல் வலயத்தடை போடல்லியாம் என்று சின்னப்பா சொன்னார். அப்ப நான் பொறக்கல்லியாம். அந்தச் சண்டைக்க திருக்கிணாமலைத் துறைமுகம் முழுக்கச் சண்டைக்கப்பல் நெறைஞ்சிருந்ததாம். சிங்கப்பூர் பிடிபட்ட பொறகு திருக்கிணாமலைத் துறைமுகந்தான் வெள்ளைக்காரனுக்குத் தஞ்சம் கொடுத்ததாம். அந்தக் கெடுபிடியிலயும் மீன் வள்ளங்கள் போக வெள்ளைக்காரன் தடை போடல்லியாம். சின்னப்பாதான் சொன்னார்.

கடலுக்குப் போகப்படாது என்று தட போட்டதுக்குப் . பொறகு கொஞ்சநாள் நிவாரணம் தந்தாங்க. எங்க வூட்டில நாங்க ஐஞ்சு பேர். ஒருமாசம் முன்னூத்திச் சொச்ச ரூபாய்க்கு ரேசன் அரிசியும், சீனியும் பருப்பும் கிடைச்சிது. அது எந்த மூலைக்கு. ஆனாக் கொஞ்ச நாளில அந்த நிவாரணத்தையும் நிப்பாட்டிற்றாங்க. இப்ப அந்தப் பிச்சையும் இல்லாம அலக்கழியிறம். எம் பீற்றச் சொல்லிப்பாத்திற்றம். அம்மாவுக்கு எங்க மீன்பிடிச் சங்கம் தந்தியடிச்சுது. ஊர்வலமா ஏ.ஜி.ஏட்டப் போய்ப் பிட்டிசம் கொடுத்தம். எதுக்கும் ஒண்ணுமே நடக்கல்ல. இப்ப மீன்பிடிக்கிறசனம் எல்லாம் பட்டினிகிடக்கு!

ஜெற்றியிலிருந்த கடையெல்லாத்தையும் திறக்கிறாங்க. ஏழரை மணிக்குத் திருக்கிணா மலைக்குப் போற லாஞ்சுக்கும் சனம் வரத் தொடங்கிற்று. வந்த சனம் ஐடின் காட்டைக் காட்டி, நெரையில நிண்டு பேர் பதியுது. கட்டியிருக்கிற லாஞ்சுக்குள்ள ஆமிக்காரன் ஏறிச் செக் பண்ணின பிறகுதான் சனத்தை லோஞ்சில் ஏற விடுவான். அதுவரைக்கும் வந்த சனங்கள் ஏறு வெய்யிலில தேத்தண்ணிக்கடை ஒச்சாப்பில ஒதுங்க வேணும். சொணங்கச் சொணங்கத் தேத்தண்ணிக் கடைக்காரனுக்கு நல்ல யாபாரம். கடைகளில அலுமாரிக்க வணிஸ், இடியப்பம், புட்டு, கெழங்கு ரொட்டி, பயத்துருண்டை, பராட்டா எல்லாம் இருக்கு. பாத்தா நாவூறுது. ஆனா எதையும் வாங்க என்னட்டக் காசில்ல.

கடலுக்குப் போய் வந்து வாடியில மீனக் குடுத்திற்று மடி நிறையக் காசோட வீட்ட போகக்க மூணுபிள்ளைகளுக்கும் கிழங்கு ரொட்டியும் பயத்துருண்டையும் வாங்கிட்டுத் தான் போவன். என்ர சின்னமகள் கெழங்கு ரொட்டி தின்னமாட்டாள். உறைக்கும் என்று சொல்லுவாள். அது அந்தக் காலம்.

இப்பவும் இந்தக் கொட்டியாரக் குடாக்குள்ளயும் கோணேசர் மலையடியிலயுந்தான் தடை போட்டிருக்காம். வடக்கே நிலாவெளி, குச்ச வெளிப் பகுதியில புறங்கடலில மீன்பிடிக்கத் தடையில்லியாம். துறைமுகத்துக்க நிக்கிற கப்பலக் காப்பாத்த வேணுமாம். கொட்டியாரக் குடாவில நின்று பார்த்தாத் திருக்கிணாமலைத் துறைமுகம் நேரதான் இருக்கு.

ஏறு வெய்யில் நெத்தியப் பொசுக்குது. எத்தன நாளைக்கு இப்படிக் கஸ்டப்படுறது? நாளைக்கு வள்ளத்தத்தள்ளிற்று நிலாவெளிப்பக்கம் போக எண்டுதான் இருக்கன். ஆனா அங்க போற துக்கும் குடாவுக்குள்ளால தானே போக வேணும். நேவிக்காரன் கண்டாச்சுடுவான்.

இந்தா; இப்பவும் நேவிக்காரன்ர போட் குடாவுக்குள்ள ஓடித்திரியுது. நெய்மலைத் தீவருகால சம்பூரைப் பாத்துப் போகுது. நாளைக்கும் போகும்.

போனால் என்ன? மிஞ்சிப் போனாச் சுடுவான். இப்படிச் சோறு கஞ்சியில்லாம நாளாந்தம் கொஞ்சம் கொஞ்சமாச் சாகிறதப்பாக்க ஒரேயடியாச் சாகிறதும் நல்லதுதான். ஆனா என்ர புள்ள குட்டி?

சுபானல்லாஹ்! என்ர குஞ்சுகள நீதான் காப்பாத்த வேணும். அதுகளுக்காகத்தான் நான் நாளைக்கு வள்ளத்தத் தள்ளிக் கொண்டு போகப் போறன்.

எல்லாத்துக்கும் யாறப்பில் ஆலமின்! நீதான் இருக்கா ●

# தபன் ஸின் ஹாவும் அவரது ஆக்கமும்

**கே.எஸ். சிவகுமாரன்**

குறிப்பிடத்தக்க நல்ல தமிழ்ச் சிறுகதையாசிரியர்களின் கதைகளிற் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து 'பெண்' என்ற தலைப்பிலே நடிகையும், ஒளிப்பதிவாளரும், நெறியாளருமான சுஹாஸினி மணிரத்தினம் எவ்வாறு, வரவேற்கத்தக்க, கலைத்துவம் பெருமளவு மிளிரும் தொலைத் திரைப்படங்களை அளித்தாரோ, அவ்வாறே சிங்களத் திரைநாடக எழுத்தாளரும், நெறியாளரும் இந்த ஆண்டு சிறந்த ஆங்கில நாவலை எழுதியமைக்கான கிரேஷன் பரிசைப் பெற்றவருமான திஸ்ஸ அபேசேகர

*(இது, இலங்கையிற் பிறந்து கனடாவில் வாழும் மைக்கல் ஒண்டாட்ஜி பெற்ற பூக்கர் பரிசின் ஒரு பகுதியாக வருடா வருடம் வழங்கப்படுவது. மைக்கல் ஒண்டாட்ஜி எழுதிய தீ இங்கிலிஷ் பேஷன்ட் என்ற நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட அதே தலைப்புள்ள படமே இந்த ஆண்டு ஒஸ்கார் பரிசைப்பெற்றது.)*

சிங்களச் சிறுகதைகள் சிலவற்றைத் தேர்ந்து தொலைத் திரைப்படங்களை அளித்திருந்தார்.

இந்தியாவிலும் ஒருவர் இவ்வாறு இலக்கியங்களை செலூலொயிட் வடிவில் தந்துள்ளார். அவர் பெயர் தபன் ஸின்ஹா. இந்த நூற்றாண்டின் சிறந்த வங்காள எழுத்தாளர்கள் பெண்களை மையமாக வைத்து எழுதிய ஆறு சிறுகதைகளைத் தழுவி இந்நூற்றாண்டின் புதல்விகள் (Daughters of this Centuary) என்ற பெயரில் சில குறும் படங்களை எடுத்தார். அவற்றிலே மூன்று படங்கள் திருவனந்தபுரம் திரைப்பட விழாவிலே கடந்த ஜனவரியில் காட்டப்பட்டன. தபன் ஸின்ஹாவை கௌரவிக்கும் முகமாக, இப்படங்கள் காட்டப்பட்டன. இவை ஒவ்வொன்றும் 30 நிமிடங்கள் ஓடின.

ஒரு படத்தின் பெயர் கதாம்பினி. ரவிந்திரநாத் தாகூர் 1904ஆம் ஆண்டு எழுதிய கதை ஜிலிட்டோ ஒ மிரிட்டோ (Jilito o Mirotio) உயிர் வாழ்வோரும் மரணித்தோரும் என்பது இதன் அர்த்தம்.

கதாம்பினி ஓர் இளம் விதவை. அவளுக்கிருந்த உடைமைகள் அனைத்தையும் தனது மைத்துனர் சாரதாஷங்கரின் ஒரே மகனுக்கு அவள் தாரை வார்த்துக் கொடுத்து விடுகிறாள். அந்தப்பிள்ளைக்கும் அந்த விதவைத்தாய்க்கும் இடையில் பாசம் ஏற்படுகிறது. ஒரு நாள் இரவு அவளுக்கு நெஞ்சில் வலி ஏற்பட்டு மயங்கி வீழ்ந்து விடுகிறாள். சாரதாஷங்கர் அவள் இறந்து விட்டாள் என்று பிரகடனம் செய்து விடுகிறான். அவளின் ஈமக்கிரியைகளுக்காக நான்கு பிராமணர்களையும் அழைத்து விடுகிறான். ஆனால் அவளை எரிக்கப்போகும் சமயம் அவள் பிரக்ஞை பெற்று எழுகிறாள். ஆனால் அப்பிராமணர்கள் அவளைத் தகனம் செய்து விட்டதாகக் கூறிவிடுகிறார்கள்.

கதாம்பினிக்கு தான் உயிருடன் இருக்கிறேனா, மரணித்துவிட்டேனா என்று சந்தேகம். தனது சினேகிதியின் வீட்டுக்குச் செல்கிறாள். சினேகிதிக்குச் சந்தேகம் எழுகிறது. தனது கணவனை விட்டு கதாம்பினியின் வீட்டாரை விசாரிக்கச் சொல்கிறாள் சினேகிதி. அவன் வீடு திரும்பி அவள் இறந்து விட்டாள் என்ற செய்தியைக் கொண்டு வரும் முன்னேயே கதாம்பினி தனது வீட்டுக்கு சென்றுவிடுகிறாள். அவள் அங்கு சென்றதும், அவள் வீட்டிலுள்ளவர்கள் பீதியில் பரிதவித்து நிற்கின்றனர். அவள் ஒரு பேய் என்று கூறுகின்றனர். கதாம்பினி ஆற்றாமையினால தனது உயிரைத் தானே பறித்து மாண்டு விடுகிறாள். அவ்வாறு செய்ததனால், அவள் உண்மையிலேயே முன்னர் சாகவில்லையென்பதை நிரூபிக்கிறாள்.

அடுத்தபடத்தின் பெயர் **Abhar liabhaser gwanga** என்ற கதையை 1918இல் சரத்சந்திர சட்டர்ஜி எழுதியிருந்தார். அபாலி என்ற பெண் ஒரு ஹரிஜன். ஒரு நாள் அவளும் அவள் மகன் கன்சலியும், ஜமீன்தாரினியின் மரண ஊர்வலம் ஒன்றை காண நேருகின்றது. ஜமீன்தாரினி அதிர்ஷ்டம் பெற்றவர் என்றும், தங்கரதம் ஒன்று அவளை மேலுலகத்துக்கு எடுத்துச் செல்லும் என்றும், தனது மகனிடம் அபாலி கூறுகிறாள். கன்சாலிக்கு இதனை நம்ப முடியவில்லை. தகன மைதானத்திலிருந்து வீடு திரும்பிய அபபிக்கு கடும் காய்ச்சல் வருகிறது. கன்சாலி இதனைத் தெரிவிக்க தனது தந்தையிடம் ஓடுகிறான். அதற்குள் அபாலி இறந்து விடுகிறாள். தகனம் செய்ய விறகு தருமாறு தகப்பன் சார்பில் கன்சாலி ஜமீன்தாரிடம் வேண்டுகிறான். அதற்கு பதிலளித்த ஜமீன்தார் தகனம் செய்வதற்குப் பதிலாக சடலத்தை அடக்கம் செய்யுமாறு கூறுகிறான்.

தனது தாயின் உடல் அடக்கம் செய்யப்படும் முன்னர் ஒரு தடியில் நெருப்புக்கொளுத்தித் தாயின் வாயில் கன்சாலி பிடிக்க எழும் புகைச் சுருளைக் கண்டு தங்க ரதத்தில் தன் தாய் விண்ணுலகம் செல்வதாக கன்சாலி கனவு காண்கிறான்.

மூன்றாவது கதை எழுதப்பட்டது1976ல். எழுதியவர் **Prapilla Roy**. கதையின் பெயர் **Sat Shana**. இதன் திரைவடிவத்தின் பெயர் **Champhia**.

சம்பியா, ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த நடுத்தர வயது மனுஷி. வறியவள். கல்யாணம் செய்யாமல் தனித்து அந்த சூழலில் அவளால் வாழ முடியவில்லை. கணவன் ஒருவனைத் தேடுகிறாள். அவளுடைய முதற் கணவன் ஓர் இளைஞன். அடிமைத் தொழிலாளி. இறந்து விடுகிறான். இரண்டாவது கணவன், தனது உழைப்பில் இருக்கக்கூடாது என்றும் தன் சொந்த காலில் நிற்க வேண்டும் என்று பணித்து விடுகிறான். இப்படியான பல கணவன்களுடன் அவளால் ஒன்றி வாழ முடியவில்லை. ஏழாவது கணவன் நட்வார் கூட நிபந்தனைகளை விதிக்கிறான். புதிய சேலையும், குங்குமமும் வாங்க, நட்வார் செல்ல, இவள் வேலைத் தேடிச் செல்கிறாள். வேலை கிடைக்கவில்லை. திரும்பி வந்த நட்வார் அவளுக்கு வேலை கிடைத்ததா என்று கேட்கிறான். அவள் இல்லையென்றதும் சேலையையும், குங்குமத்தையும் பறித்து விடுகிறான். சம்பியா தன் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது என்று விழிக்கிறாள்.

வங்காளப் பெண்களின் நிலை இப்படங்களில் சித்தரிக்கப்படுகின்றன. இந்த மூன்று படங்களிலும் சப்னா ஆஸ்மி, ஜயா பச்சான், மதூரி டிக்ஸித், பல்லவி ஜோஷி, தீபா ஸஹாய், சுல்பா தேஷ்பான்டே, மம்தா சங்கர், தேவஸ்ரீ றோய் (இவர் தமிழ்ப் படம் ஒன்றிலும் நடித்திருக்கிறார்) போன்ற மும்பாய், வங்காள நடிகைகள் நடிக்கின்றனர்.

தபன் ஸின்ஹா ஒரு வங்காளத் திரைப்பட நெறியாளர். குறிப்பிடத்தகுந்தவர்.

இவரைப்பற்றிய சில குறிப்புகள்:

சிறுவர்களுக்கான மூன்று படங்கள் உட்பட 38 படங்களை நெறிப்படுத்தியிருக்கிறார். பல பரிசுகள் பெற்றவை. 1956ல் இவருடைய 'கபூலிவாலா' தங்க விருது பெற்றது. பேர்லின் திரைப்பட விழாவிலே சிறந்த இசையமைப்புக்குரிய பரிசு இப்படத்திற்கு வழங்கப்பட்டது. இசையமைப்பாளர் பிரபல சித்தார் வாத்திய விற்பன்னர் ரவி ஷங்கர்.

இவருடைய படங்களில் ஹன்ஸூலி பாங்கர் இதிகத்தா நிர்ஜன் சைகட்டே, ஜத்துகிரிஹா, ஆரோஹி, லவ் ஹாகப்பட், க்ஷுடித்தோ பஷ்ஹான், அதிதி போன்றவை விமர்சகர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன.

1950ல் இங்கிலாந்து பைன்ஷட் ஸ்டுடியோவில் பயிற்சிபெற்று, 1952 முதல் திரைப்படங்களை நெறிப்படுத்தத்தொடங்கினார்.

தபன் ஸின்ஹாவின் படங்களைப் பார்க்கும் பொழுது நேர்த்தித்திறன் பளிச்சிடுகிறது.





# மட்டக்களப்பு பெண்கள்:

# இலக்கை நோக்கி...

வடிவேல் இன்பமோகன்

கிழக்கிலங்கையில் கடந்த பத்து ஆண்டுகளாக பெண்ணியம் சார் கருத்துக்கள் வளர்ந்து வலுப்பெற்று வருகின்றன. சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், பாதிப்புற்ற பெண்கள் சங்கம், உழைக்கும் மகளிர் சங்கம், சமூக நல்வாழ் வமைப்பு, உழைக்கும் மகளிர் அபி விருத்தி மன்றம், இளம் கிறிஸ்தவ மகளிர் மன்றம் எனப்பல பெண்கள் அமைப்புக்கள் பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற் பட்டு வருகின்றன. இப் பெண்கள் அமைப்புகள் 1997இற்கு உரிய உலக பெண்கள் தின நிகழ்ச்சிகளை கலாசாலையில் நடத்தி முடித்தன.
கலாசாலையின் சுவர்களை பெண் ணியம் பேசும் பலவிதமான சுவ ரொட்டிகள் அலங்கரித்தன. இவை சர்வதேச ரீதியில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைப் புலப் படுத்தியதுடன், மக்களைக் குறித்த கருத்தாக்கத்திற்குள் கொண்டு வரவும் வழிவகுத்தன.
இங்கு பெண்களை மையப்படுத்தி பல விதமான நிகழ்வுகள் இடம் பெற்றன.

### கருத்துரையும் கலை நிகழ்ச்சிகளும்

அம்மன்கிளி முருகதாஸ், யுமுனா இப்ராஹிம், சுல்பிகா இஸ்மாயில், கிரேஸ் நகுலா தங்கராசா என்போ ரின் கருத்துரைகள் இடம் பெற்றன. இவை சமூகத்தில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், பெண்கள் கூட்டாக இயங்க வேண்டியதன வசியம், ஆண் முதன்மை நோக்கும் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான இடையூறுகள், பெண்கள் தங்களை வலுப்படுத்த வேண்டியதன் அவசி யம் என்னும் மையப் பொருளைக் கொண்டவையாக அமைந் திருந்தன.
அடுத்தகட்டமாக கவிதா நிகழ்வு வில்லிசை, பேச்சு, நடனம், நாடகம் என்பன ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெற்றன.
எஸ். அகிலேஸ்வரி, சைமன் வாணி என்போரின் தனிக்கவிதையுடன் வெ. தவராசாவினால் சூரியாவிற் காக ஒழுங்கமைக்கப்பட்டிருந்த கவிதாநிகழ்வும் கவியரங்கை அணி செய்தன. இங்கு படிக்கப்பட்ட கவிதைகளின் மையப்பொருள்:
1 சமூகத்தில் பெண்களுக்கு உள்ள நிலைமையைப் புலப்படுத்தல்.
2. அதற்கு எதிராகப் பெண்களை அணிதிரட்டல். என்னும் இரு அடிப் படைகளைக் கொண்டதாகவிருந் தது. அகிலேஸ்வரி தனது கவித்தை யின் மூலம்

*''எந்தப் பறவை பெண் விடுதலை*
*பற்றி புத்தகம் வெளியிட்டது.*
*எந்தப் புல்*
*பாலியல் வல்லுறவால்*
*கோட்டுக்குப்போனது''*

என்று மனித சமூகத்திற்கே சொந் தமான இவ்வர்க்கப்பாகுபாட்டை கேள்விக்குட்படுத்தினார்.
சூரியாவின் கவிதா நிகழ்வு, மட் டக்களப்பு சமூக அமைப்பைக் களமாகக்கொண்டு இங்கு பெண் கள் எவ்விதம் வாழ வற்புறுத்தப் படுகின்றார்கள். இதனால் பெண்கள் எதிர்நோக்கும் இன்னல்கள், இவற்றிலிருந்து தவிர்த்து எவ்விதம் முன்னோக்கி செல்லலாம் என்பன வற்றை புலப்படுத்தியது.

*''மூடியவாய் மாமிக்கு பிடிக்கும்...*
*மடத்தனமாய் மயங்குவது*
*மாப்பிள்ளைக்குப் பிடிக்கும்...''*

என சமூகம் பெண்ணை எவ்விதம் வாழ வற்புறுத்துகின்றது என்பதை சுட்டிக்காட்டி இவற்றில் மயங்கி இருந்தால்

*''...பொழுது விடியாது நமக்காய்''*

எனவிழிப்புணர்வையேற்படுத்தி

*''மூதாதையர் சுமந்து வந்த*
*பரம்பரைத் துன்பத்தை*
*நம் வருங்காலம் பெறாதிருக்க*
*முதுகெலும்பை*
*விண்நோக்கி உயர்த்துவோம்''*

என புதியதொரு ஒளியை நோக்கி பெண்களை அணிதிரள அழைத் தனர்.
கலை நிகழ்ச்சிகளில் சிறப்பு நிகழ்ச் சியாக அமைந்தது சூரியா உறுப்பி னர்களைக்கொண்டு அலோசியஸ் அளிக்கை செய்த 'உறுதி மனம்' என்ற நாடகமாகும்.
அலோசியஸ், ஜெய்சங்கரின் 'நிராகரிக்க முடியாத படி...' என்ற நாடகக் களப்பயிற்சி மூலம் மேற் கிளம்பியவராகும். இதனால்



இவருக்குக் கிடைத்த நாடக அனுப வத்தின் அறுவடையாகவும் இவரது நாடகச் செயற்பாட்டின் ஆரம்பப் படியாகவும் இந்நாடகத்தை கொள்ளலாம்!
வடகிழக்கில் வாழும் தமிழ் மக்க ளின் வாழ்வில் யுத்தம் ஏற்படுத்திய பேரிழப்புக்களின் தவிர்க்க முடியாத விளைவுகளிலொன்று விதவை களின் பெருக்கமாகும். இதனால் விதவைகளின் சமூகத்தேவைகள் பற்றியும், அதற்கான தீர்வுகள் பற்றியும் சிந்திக்க வேண்டியது அவசியமானது. இப்பின்னணியில் அலோசியஸ் வறுமைக் கோட்டிற் குக் கீழ் வாழும் மீனவக் குடும்பத் தினை மையமாகக்கொண்டு ஒரு விதவை சமூகத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு முரண்களை இங்கு சித்திரிக்க முயல்கிறார்.
பெண்கள் தனித்து நின்று தமது குடும்பச் சுமையை முன்னெடுக்க முடியுமா? விதவைகளின் சமூக அந்தஸ்து என்ன? அவள் சமூகத்தில் சுதந்திரமாக நடமாட முடியுமா? அவளுக்குப் பாதுகாப்புத் தேவையா? விதவைகள் மறுமணம் செய்து கொள்வதிலுள்ள பொருத் தம்/ பொருத்தமின்மைகள் எனப் பல வினாக்களை எழுப்பி அதற்கான தீர்வையும் சுட்டி நின்றார்.
நாடகம் யதார்த்த பாணியிலானதாக அமைந்ததால் குறித்த நாடகச் சூழலை மேடையில் யதார்த்தமாகக் கொண்டு வரவேண்டும் என்பதில் முழுக்கவனம் எடுத்து இருந்தார். இதற்கு ஏற்ற விதத்தில் உரையாடல், வசனங்கள், நடிப்புத்திறன், ஒப் பனை, உடையலங்காரம், ஒலி, ஒளி அமைப்பு, பாத்திரவார்ப்பு என்னும் நாடகத்தின் பல ரூபத்தையும் பயன்படுத்தியிருந்தார்.

### விவரணப் படக்காட்சி

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் இதுவரை பெண்களின் அபிவிருத்தி தொடர்பாக மேற் கொண்ட செயற்பாடுகளின் தொகு ப்பாக இவ்விவரணப்படக்காட்சி அமைந்திருந்தது. இது சூரியாவின் பரந்துபட்ட செயற்பாட்டை புலப்ப டுத்தியதுடன் பெண்களின் ஆளுமை விருத்தியையும் அடை யாளப்படுத்தியது.

### 'பெண்' காலாண்டு சஞ்சிகை வெளியீடு

இலங்கையில் பெண்கள் பற்றிய விடயங்களை வெளிப்படுத்தும் சஞ்சிகைகளாக நிவேதினி, பெண் ணின் குரல், நங்கை, விடியல் போன்றன வெளிவந்து கொண்டு இருக்கின்றன அத்தொடரில் சூரியா வின் வெளியீட்டுப் பகுதியால் இப்'பெண்' என்னும் சஞ்சிகையின் முதலாம் இதழ் இந்நிழ்ச்சியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.
சஞ்சிகையில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயற் பாடுகள். யுத்தச் சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப் பிய நாடுகளில் உள்ள பெண்கள் எதிர்நோக்கும் முரண்பாடுகள், பெண்களின் சுகாதாரப் பாதிப் பிற்கான காரணங்கள், கருச்சிதைவு, உடன்கட்டையேறுதல், கிருஷாந்தி குமாரசாமியின் கொலைக்கான கண்டனங்கள் என்பவற்றுடன் சிவரமணி, மறிலின் கிறைசிலின் என்போரின் கவிதைகள் என்பன வும் 1995இல் சீனாவில் இடம் பெற்ற 4 வது பெண்கள் தின வைப வத்தில் கலந்து கொண்ட அருந்ததி சபாநாதன், பவின் சைலா, சித்திர லேகா மௌனகுரு ஆகியோரின் அனுபவப் பகிர்வுகளும் இதில் இடம் பெற்றன.
இச்சஞ்சிகை உலகின் பல பாகங் களிலும் பரந்து வாழும் பெண்களின் விடயங்கள், பெண்கள் அமைப் புக்கள் பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அறிந்து கொள்ளுதல், தமது பிரதேச பெண்களின் திறமைகள்/ பிரச்சி னைகள் போன்றவற்றை வெளிப் படுத்துதல் என்னும் பல நோக்கங் களைத் தாங்கி வெளிவருகின்றது.
இந்நிகழ்வுகளை நோக்கும் போது கிழக்கிலங்கையில் பெண்கள் அமைப்புகளின் செயற்பாடு, அவை பெண்களின் மேம்பாட்டில் கொண் டுள்ள ஆர்வம் என்பவற்றை விளங் கிக்கொள்வதுடன், இவற்றின் எதிர் காலப் வெறுமானங்களையும் அள விட முடிந்தது. இந்நிலையில் குறித்த இலக்கை நோக்கிய பயணத்தின் ஒரு கட்டமே இந்நிகழ்வுகள் எனலாம்.

# மனமுண்டானால்...

பேச்சுவார்த்தைக்கு அவசியம் என்பது பலராலும் உணரப் படுகிறது. அரசாங்கமும் கதிர்கா மரும் அதை மறுத்தாலும் இது பொதுவான கோரிக்கையாக உள்ளது. புலிகள் கூட இதை வெளிப்படையாகவே தெரிவித் திருந்தார்கள். இந்த நிலையில் சமரச முயற்சியில் பிரிட்டன் இறங்கி யிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்பதில் யாருக்கும் சந்தேகமிருக்க முடியாது.
ஆனால், எந்த மூன்றாந் தரப்பின் மத்தியஸ்தத்துடனும் எத்தகைய பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் இலங்கையின் இனப்பிரச்சினைக் கான தீர்வு என்பது தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம், அவர்களின் தேசிய சுயநிர்ணயம் என்பன அங்கீகரிக்கப்படாதவரை அவை வெற்றிபெறப் போவதில்லை என் பதையாரும் மறந்து விடக்கூடாது.
இந்த அடிப்படையிலமையாத வேறு எந்த விதமான உடன்பாடுகளும், மாற்றங்களும் தற்காலிகமான அமைதியை மட்டுமே வழங்க முடியும். ஏற்கெனவே இந்தியா எடுத்த முயற்சி படுதோல்வி அடைந்ததற்கு, அதன் சொந்த நலன்களை அடிப்படையாயக் கொண்டு இயங்கியது மட்டுமல்ல இவற்றை கவனத்தில் எடுக்காததும் ஒரு காரணமாகும்.
நாளுக்கு நாள் அதிகரித்து வரும் யுத்தம் காரணமாக நெருக்கடிக ளுக்கு மத்தியில் தவித்துக்கொண் டிருக்கும் மக்களுக்கு உடனடியாக ஒரு அமைதியும் சமாதானமுமான நிலை தேவைப்படுகிறது; அவர்க ளுக்கு தமது சொந்த மண்ணில் அச்சமின்றி வாழும் நிலை அவசிய மாக இருக்கிறது என்பதெல்லாம் உண்மைதான். ஆயினும், நிரந்தர சமாதானத்தை ஈட்டக்கூடிய அடிப் படைகளில் உடன்பாடு காணாமல், சொல்லப்ப்டும் அமைதியைத் தரக் கூடிய எந்த நடவடிக்கைகளும் நீண்டகால நோக்கில் பயன்தரப் போவதில்லை. தற்காலிக மாற்றங் கள் மக்களின் நிம்மதியை மேலும் அதிகமாக குலைக்கவே பயன்படும் என்பது வரலாற்று அனுபவமாக உள்ளது.
இரு பிரதான கட்சிகளிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதில் வெற்றிபெற்றது போல. நிரந்தர சமாதானத்தை தமிழ் மக்கள் அனுப விப்பதற்கேற்ற முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபடவேண்டும்; பிரித் தானிய தேர்தலை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட ஒரு வெறும் அரசியல் சாகசமாக இது அமையாமல், இத் தார்மீகக் கடப் பாட்டுடன் அது இயங்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.
இலங்கையின் அரசியல் வரலாற் றினைப் புரிந்து கொண்டு அதற் கேற்ற வித்தில் இப்பிரச்சினைத் தீர்க்க உண்மையாகவே பிரிட்டன் முயல்வதாக இருந்தால், அந்த முயற்சி வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் நிச்சயமாக இருக்கவே செய்கின்றன என்பதை இவ்விட யத்தில் குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமானதாகும்!

# படையினர் துண்டுப்பிரசுரம்!

கடந்த ஏப்ரல் 2ந் திகதி கொம்மாந் துறையிலுள்ள படை முகாமில் வைத்து பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரம் ஒன்று விநியோகிக்கப் பட்டது. ''அன்புள்ள பிரதேச மக்களே'' என்று தலைப்பிடப் பட்டுள்ள அதன் இறுதியில் ''பாதுகாப்புப் படையினர்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த பங்குனி மாதம் ஆறாம் திகதி வவுணதீவு படைமுகாமைத் தாக்கு வதற்கு வந்த எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளில் நூற்றுக்கணக்கா னோர் கொல்லப்பட்டதையும் காயமடைந்ததையும் நீங்கள் அறிவீர்கள். அதன் பிறகு வலையிறவுப் பாலத்தை உடைத்த தன் மூலம் பொது மக்களைத் துன்புறுத்துவதில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகளின் விளைபொருட்களை விற்க முடியாமல் செய்தமை, படுவான் கரை மக்களின் வைத்திய, கல்வி, வசதிகளை மூடியமை, விடுதலை என்று சொல்லிக் கொண்டு வரிசேர்ப்பதன் மூலம் தலைவர்களின் குடும்பங்கள் வசதி யாக வாழ்கின்றமை, பிள்ளைகளின் கல்வியை சீர்குலைப்பதன் மூலம் அவர்களை அங்கத்தவர்களாக்குதல் என்றெல்லாம் குறிப்பிப்பட்டுள்ள அப்பிரசுரத்தின் இறுதிப் பந்தியில், நவீன ஆயுத தளபாடங்களையும், இலட்சக்கணக்கான வீரர்களையும் கொண்டுள்ள படையினரை வெல்ல முடியாதென்றும், பொது மக்கள் எல்லோரும் சேர்ந்து எல்.ரீ.ரீ.ஈ. யினரை எதிர்த்து நிற்குமாறு வேண்டுகோளும் விடுக்கப் பட்டுள்ளது.
கஷ்டப்படுவதெல்லாம் பொது மக்களாகிய நீங்களே ஆனால் படையினராகிய எங்களின் தேவைகளையிட்டு எந்தத் தடை யுமில்லையென்றும் அப்பிரசுரம் கூறுகின்றது. அது தமிழில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. இது இவ்வாறிருக்க வவுணதீவு முகாம் நிர்மூலமாக்கப்பட்ட பின் திருத்தப்பட்டுள்ள வலையிறவுப் பாலம் இதுவரையிலும் பொது மக்களுக்காகப் படையினரால் திறந்து விடப்படவில்லையென்பது குறிப்பிடக்கூடியது.

# மக்களும் மருத்துவ சேவையும்: பூனைக்கு விளையாட்டு....

இன்றைக்கு இலங்கையில் எத் தொழிற்சங்க நடவடிக்கையினை எதிர்கொள்வது கடினம்என ஆளும் கட்சியினரைக் கேட்டால் அநேகமாக மருத்துவத் துறை சார்ந்த தொழிற்சங்கங்களைத் தான் கூறுவார்கள். குறிப்பாக அரச மருத்துவ, அதிகாரிகள் சங்கத்தின் தொழிற் சங்க நடவடிக்கையைக்கூறுவார்கள். எனது அவதானிப்புக்குட்பட்ட சம்பவங்களையும், நண்பர்களது அனுபவங்களையும் உள்வாங்கிய பின் இப்பத்தியை எழுதுகிறேன். தனிமனிதர்களால் ஏற்படுத்தப்படுகிற பிரச்சினைகளாக இவற்றை நான் கருதவில்லை. இவை மருத்துவத் துறையை ஆட்சி செய்யும் பிழையான மனோபாவத்தின் வெளிப்பாடுகளாகும்.

மருத்துவ, சுகாதார சேவைகளை செவ்வனே செய்வதற்கு வளப்பற்றாக்குறைகளுக்கு அப்பால் இந்தத் துறைகளில் உள்ளவர்களின் அலட்சிய, அதிகார, மனோபாவங்களும் தடையாக உள்ளன.

நீங்கள் மருத்துவ மனையில் வார்ட் (Ward) ஒன்றில் நோயாளியாக தங்கியிருக்கிறீர்கள். காலையில் வைத்தியர் வருகிறார். உங்கள் செவியை பிடித்துத் தூக்குகிறார். முதுகில் இரண்டு தட்டுக்களைத் தட்டுகிறார். மருத்துவத்தாதியருக்கு ஏதோ கூறுகிறார். ஒற்றைகளில் ஏதோ எழுதுகிறார். பிறகு போய் விடுகிறார். நீங்கள் பிறகும் அப்படியே படுத்திருக்கிறீர்கள்.

இன்னும் ஒரு காட்சி: நோயாளியுடன் மருத்துவர் உரையாடுகிறார்.

''உமக்கு எத்தனை பிள்ளைகள்...?''

நோயாளி பதில் சொல்கிறார்.

''மூத்த பிள்ளைக்கு எத்தனை வயது?''

நோயாளி அதற்கும் பதில் சொல்கிறார்.

''நீர் உம்முடைய மூத்த பிள்ளையின்ரை சாமத்திய வீட்டுக்கு இருக்க மாட்டீர்'' என்கிறார்.

நோயாளி விறைத்து போகிறார்!

இன்னும் ஓர் சம்பவம். பெண்மணி ஒருத்தி தனக்கு தலைவலி என வைத்தியர் ஒருவரிடம் சென்றிருக்கிறாள். வைத்தியர் நோயாளியை அவதானித்த பின் கேட்கிறார்.

''கலியாணம் முடிஞ்சுதோ?''

நோயாளி ஆம்! என்கிறார்.

''பிறகு என்னத்துக்கு ஒட்டுப் பொட்டு, குங்குமப் பொட்டு வைக்கப்படாதோ'' என்கிறார்.

பொட்டுக்கும் தலைவலிக்குமான சம்பந்தம் பற்றி மருத்துவத்துறை நிபுணர்களிடம் ஆராயும்படி இவ்விடத்தில் நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இச்சம்பவங்கள் மருத்துவர்களை இழிவுபடுத்தும் நோக்குடன் குறிப்பிடப்படவில்லை என்பதை நினைவு கூருங்கள்.

உண்மையிலும் மக்கள், வைத்தியர் தங்களை அறிந்து கொண்டு வைத்தியம் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். அவரைத் தெய்வமாகக் கருதுகிறார்கள். அவர் அன்பான உறவை தருவதுடன் சிறந்த சிகிச்சையையும் தருவார் என எதிர்பார்க்கிறார்கள்.

மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை பெரும்பாலான நோயாளிகள் அப்பாவிகள். மருத்துவம் பற்றிய அறிவு அதிகம் அற்றவர்கள். இன்ன நோய்க்கு இன்ன வைத்தியரிடம் தான் செல்ல வேண்டும் என்கின்ற தெளிந்த அறிவு அற்றவர்கள். சில நோய்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மருத்துவத் துறைசார்ந்த நிபுணர்கள் ஒன்றாக இணைந்து ஒரே நேரத்திலோ முன்பின்னாகவோ சிகிச்சையளிக்க வேண்டியிருக்கிறது. மருத்துவர்களுக்கிடையே மேற் குறித்தவாறு முரண்பாடுகள் தோன்றும் போது நோயாளி என்ன செய்ய முடியும்?

வைத்தியசாலை ஒன்றில் மருத்துவர்களுக்கிடையே மட்டும் அன்றி ஏனைய, உதவி மருத்துவர்கள் உப மருத்துவ ஊழியர்கள் தொழில் நுட்பவியலாளர்கள், தாதியர், என்போருக்கிடையிலான உறவுகளில் பிரச்சினைகள் தோன்றும் போது நோயாளிகள்தான் பலிக்கடாக்கள் ஆக்கப்படுகின்றனர்.

மருத்துவர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் பிரச்சினைகள் தோன்றும் பட்சத்தில் தொழில்நுட்பவியலாளர்களை வெறுப்பூட்டுவதற்காக பல முறை நோயாளர்கள் தொழில்நுட்ப கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். பல முறை நோயாளிகளிடமிருந்து மாதிரிகள் பெறப்படுகின்றன. பதிலாக தொழில்நுட்பவியாளர்கள் சோதனைப் பெறுபேறுகளை வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறார்கள். இத்தகைய மோதல்கள் நோயாளிக்குத் தெரியாமலே அவரில் மேற்கொள்ளப் படுகின்ற சித்திரவதைகளாகும்.

நமது நாட்டில் உள்ள, வைத்தியர் பற்றாக்குறை என்பது வைத்தியர்கள் கொள்ளை அடிப்பதற்கு ஏதுவான சூழ்நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. சிறப்பு மருத்துவ நிபுணர் ஒருவரை சந்தித்து உசாத்துணை பெறுவதற்கு நூறுரூபாவில் இருந்து நூற்றி எண்பது ரூபாய்வரை செலுத்த வேண்டியுள்ளது. அவருடனான சந்திப்பு மூன்று அல்லது நான்கு நிமிடங்களுக்கு மேல் நீடிக்காது. முடிவில் சில பரிசோதனை வேண்டுதல் படிவங்களுடனும் (Examination Request) நோய் அல்லது வலி நிவாரண மாத்திரைகளுடனும் வெளிவந்து, பரிசோதனை செய்ய சோதனைச் சாலைகளை நோக்கி நடக்க வேண்டும். சோதனைப்பெறுபேறுகளைக் காட்ட மறுமுறையும் அதே சிறப்பு நிபுணரைச் சந்திக்க பணம் கட்டவேண்டியிருக்கும்.

சில மாதங்களின் முன்பு கிழக்கு மாகாணத்தின் மிகப்பின்தங்கிய ஓர் பகுதியில் அகதி முகாமில் வாழும் பாட்டியும், பெற்றோர் அற்ற பேரனும் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவ நிபுணரிடம் பணம் செலுத்தி உசாத்துணை பெற்ற பின்னரே அரசாங்க மருத்து மனையில் சிகிச்சை பெற்றனர். அவர்கள் செலுத்திய பணம் அந்த அகதிகளின் தகுதிக்கு மிஞ்சி செலவு என்பதை அந்த மருத்துவ நிபுணர் யோசிக்கவேயில்லை.

மருத்துவர்கள் உடனான சந்திப்பில் நோயாளிகளை திருப்திப்படுத்துவதற்கென பரிசோதனைகளைச் செய்யுமாறும் மருந்துகளை உட்கொள்ளுமாறும் பணிக்கும் நிலைமைகளும் உள்ளன.

மக்களுக்கும் மருத்துவரைச் சந்தித்தபின் மாத்திரைகள் சிலவற்றையாவது பெற்றுக்கொண்டு வராவிடில் திருப்தியும் இருக்காது.

மருந்துகள் பற்றி அநேகமானவர்களுக்கு, அவற்றின் நிறம் மஞ்சள், சிவப்பு, பச்சை, வெள்ளை என்ற அளவுக்கு மேல் எதுவும் தெரிவதில்லை.

தான் என்னவகையான மருந்துகளை உட்கொள்கிறேன்? அவற்றை உட்கொள்ளும் முறைகள் என்னென்ன? அவற்றின் சாதகமான, பாதகமான விளைவுகள் என்ன? என்பது பற்றி ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ முக்கியமானதாகும். நோயாளிகள் பிள்ளைகளாக இருந்தால் அவர்களுக்கு பொறுப்பானவர்கள் அவ் அறிவைப் பெற்றிருப்பது அவசியம்.

**மருத்துவம் பற்றிய அறிவு மக்களிடம் ஏற்படுவது மருத்துவர்களினால், மக்கள் மீது ஏற்படுத்தப்படுகிற அதிகார உறவை பாதிக்கும் என நினைக்கிறார்களோ தெரியவில்லை. மருத்துவர் ஒரு மாந்திரிகனாகவும், நோயாளி அவரது கமண்டலத்தின் சக்திவாய்ந்த ஒரு துளி நீரை பருகுவதற்காக காத்திருக்கும் விளக்கங்கள் ஏதுவும் வேண்டப்படாத சபிக்கப்பட்ட பிறவி என்பது போலவுமே இன்றைய எங்கள் மருத்துவத்துறை உள்ளது.**

நோயாளியின் அறிவு நிலை உளவியல் பாங்கு என்பவை மருத்துவ அறிவை அவனுக்கு தருவதில் சிக்கல்களை உண்டுபண்ணுகின்ற போதும், நோயாளி அவனது நோய் தொடர்பாக அறிவூட்டப்படவேண்டியவன் என்பதை எவ்வாறு மறுக்க முடியும்?

தாங்கள் விநியோகிக்கும் ஒவ்வொரு மருந்து வகைகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைக்கும் மருத்துவர்களும் மருந்தாளர்களும் (Pharmasist) உள்ளனர். சிலவேளை ''உனக்கேன் உந்த விளக்கமெல்லாம், மஞ்சள் குளிசை ஒண்டு ; மூண்டு நேரம்'' என்று கூறும் மருந்தாளர்களும் உள்ளனர். வேலைப்பழுவும் நோயாளியின் அறிவு நிலையும் நடைமுறைச் சிக்கலான காரணங்களாக உள்ள போதும், அவரது கடமை நோயாளியை அறிவூட்டுவதும் ஆகும் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. கர்ப்பிணித்தாய் ஒருத்தியை எக்ஸ் கதிர் படம் பிடிக்கும் தொழில்நுட்பவியலாளர் ஒருவர் தனது சொந்தத் தவறுகளின் காரணமாக பலமுறை கதிர் வீச்சுக்கு உட்படுத்துவாராயின் அவர் தனது கடமை தொடர்பான ஒழுக்காற்றை (Ethics) இழந்து விடுகிறார். குறைந்த பட்சம் அது பற்றின குற்ற உணர்வு கூட அற்றிருப்பது தான் துயரம்.

அணுசக்தி அதிகார சபையின் சட்ட திட்டங்கள் வரையறைகள் ஒரு புறம் இருக்க எங்கள் நாட்டில் எக்ஸ் கதிர் பரிசோதனை அமோகமாக நடக்கிறது.

மக்கள் அழகாகக் கூறுகிறார்கள் ''படம் பிடிச்சுப் பாத்தன்'' என. ''படம் பிடிச்சுப் பாக்காட்டி எங்கடை சனங்களுக்குப் பொச்சம் தீராது'' என என் நண்பர் கூறுகிறார். நோவோ வலியோ இன்றி தம்மை ஊடுருவிச் செல்கிற எக்ஸ் கதிர்கள் தம் உடலில் ஏற்படுத்தக் கூடிய இரசாயன மாற்றங்கள் பற்றியும் அம்மாற்றங்கள் உடலில் தீயவிளைவுகளை ஏற்படுத்தும் நிகழ்தகவைக் கொண்டவை என்பது பற்றியும் எதுவுமே அறியாது திருப்திப்பட்டுச் செல்லும் மக்களைப்பற்றி சிந்திப்பது யார்? என அத்துறை சார்ந்த சமூக உணர்வுள்ள மருத்துவர் ஒருவர் கேட்கிறார்.

வைத்தியசாலை நோயாளிபற்றி சிந்திக்கும் போது நாங்கள் தவிர்க்க முடியாமல் மருத்துவ தாதியரின் (Nurses) சேவைகளைப்பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. தாதிச் சேவையின் மகத்துவத்தை எந்த அளவுக்கும் குறைத்து மதிப்பிட முடியாது. நோயாளி நோயுடன் நடத்தும் போராட்டத்தில் நோயாளிக்கு தைரியமும் ஆதரவும் அன்பும் தருகிற மகத்தான பணி அதுவாகும். ஆனால் ''உங்களுக்கு மூத்திரம் எடுக்கவோ நாங்கள் வேலைக்கு வந்தது'' என கர்ண கடூரமாக பேசுகிற தாதியரையும் நாம் காண்கிறோம்.

''நான் ஒண்டும் புளோரன்ஸ் நைட்டிங்கேல் இல்லை'' என மருத்துவத் தாதி ஒருவர் என் நண்பர் ஒருவருடன் உரையாடுகையில் கூறியதை இங்கு நினைவு கூரலாம். வேலைப்பளு சொந்த மனிதக் கவலைகள் இவற்றுக்கிடையில் மனிதர்களிடம் நூறு வீதமான இலட்சிய உணர்வை எதிர்பார்க்க முடியாது என்றாலும், **வைத்தியத் துறையில் உள்ள எல்லாப்பிரிவினரிடமும் நோயாளி தங்களின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கி நிற்பவன் என்னும் மனோபாவமே மூன்றாம் உலக நாடுகளில் அரச மருத்துவ மனைகளில் மேலோங்கியுள்ளது.**

ஆங்கில மருத்துவத்தில் நோயுயிர், உயிர், முறிகள் அல்லது நுண்ணுயிர் கொல்லிகள் (Antibiotic) எனப்படும் மருந்துகளின் பயன்பாடு முக்கியமானதாகும்.

பென்சிலின், றெற்றா சைக்கிளின், சல்பனமைட், குளோரம் பெனிக்கல், அமோக்சிசிலின், அம்பிசிலின், எரித்திரோ மைசின், ஸ்ரெப்ரோமைசின் போன்றவை, இவற்றுள் சிலவாகும்.

இவற்றின் பயன்பாட்டில் நிகழும் அசண்டையீனம் குறித்தும் இங்கு குறிப்பிடவேண்டும். உண்மையிலும் மிகச் சிறிய நோய்களை எமது உடலில் காணப்படும் நோய் எதிர்ப்பு சக்தியினாலேயே குணப்படுத்த முடியும். நோய்த்தாக்கம் அதிகமாகும் பொழுது நோயாளியை தகுந்த ஆய்வுகூட பரிசோதனைக்குட்படுத்தி அவரைப் பீடித்துள்ள நுண்ணுயிரைத் தீர்மானித்த பின்னர் அதற்குரிய நுண்ணுயிர் கொல்லியை பரிந்துரை செய்வதே சிறந்த முறையாகும். ஆனால் அநேமான மருத்துவர்கள் சிறிய நோய்க்கும் பரந்த வீச்சுள்ள நுண்ணுயிர் கொல்லிகளை பரிந்துரை செய்கின்றனர். உடனடியாக அது நோயாளிக்கு நிவாரணம் அளிக்கின்ற போதிலும் காலப் போக்கில் உடலில் உள்ள பல்வேறு நுண்ணுயிர் கிருமிகளும் அம்மருந்துக்கு இசைவாக்கம் அடைந்து விடுகின்றன. மறுபுறத்தில் உடலுக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிர் கிருமிகளை அவை அழித்து மனித உடலில் நிலவுகிற நுண்ணுயிர்ச் சமநிலையை குலைத்து விடுகின்றன.

ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு றெற்றா சைக்கிளின் வழங்கப்படக் கூடாது என மருத்துவம் கூறுகிறது. ஆனால் அவ்வாறு குழந்தைகளுக்கும் றெற்றா சைக்கிளின் வழங்கும் மருத்துவர்களும் உள்ளனர். இத்தகைய தவறுகள் பற்றிய கேள்வி கேட்கும் மருந்தாளர்களை ''நாங்கள் எழுதித் தருகிறோம். நீங்கள் எண்ணிக் கொடுங்கள்'' என்னும் மனப்பாங்கில் அணுகும் மருத்துவர்களும் உள்ளனர்.

மருந்துகளின் இருப்பு குறைவினால் அல்லது பற்றாக்குறைவினால் கால அளவு முடிந்த மருந்துகளை விநியோகிக்கும் பணியும் மருத்துவ, மனைகளில் நடக்கிறது. மருத்துவ மனை ஒன்றில் சாய் சாலையில் (Clinic) நோயாளிகளுக்கு இரத்த அழுத்தம் தொடர்பான நோய்க்கு வழங்கப்படும் டில்டியாசம் (Diltiazm) எனப்படும் மருந்து அதற்குரிய கால அளவு முடிந்த பின்னர் வழங்கப்பட்டதனால் எந்த விளைவையும் தரவில்லையென்பது குறித்த அந்நோயாளியின் இரத்த அழுத்தத்தை ஒரு மாதத்தின் பின்னர் பரிசோதித்த போது தெரிய வந்தது. ஆனால் தொடர்ந்தும் அந்நோயாளிகளுக்கு அம்மருந்து வழங்கப்பட்டது. நோயாளியை இவ்வாறு ஏமாற்றுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? பாவனைக்காலம் முடிந்த மருந்துகளை எதற்காக நோயாளிக்கு வழங்க வேண்டும்?

**சாய் சாலை நோயாளி அநேகமாக ஒவ்வொரு நாளும் மருந்துகளை உட்கொள்ளுபவர் ஆவர். பயன் தராத மருந்துகள் அவருக்கு உண்டாக்கும் பக்க விளைவுகள் கணிசமானவை.**

தனியார் மருந்தகம் ஒன்றின் மருந்தாளர் ''என்னப்பா குழந்தைகளுக்கு கூட பெரியவர்களுக்கு கொடுக்கிற அளவையல்லவோ எழுதுறாங்கள்'' எனக்கவலைப்பட்டார்.

பின்தங்கிய பகுதியொன்றில் மருத்துவ சிகிச்சை பெற்றுக் குணமாகாமல், தலைநகருக்கு தன் குழந்தையைக்கொண்டு வந்த தாய் ஒருத்தி குழந்தைகள் மருத்துவரிடம் தன் குழந்தைக்கு வழங்கப்பட்ட மருந்துகளையும், அதன் அளவுகளையும் கூறியபொழுது அவர் மலைத்துப்போனார். ''அம்மா உன் குழந்தைக்கு இனி அதன் சீவிய காலத்துக்கே மருந்து கொடுக்கத் தேவையில்லை'' என அவர் கூறினார்.

தங்களது எல்லா விதமான சலுகைகளுக்காகவும், போராடுகிற மருத்துவர்களும், ஏனைய மருத்துவத் துறை சார்ந்த தொழில்நுட்பவியலாளர்களும், தாதிமார்களும் தங்களது தொழில் சார் ஒழுக்காறுகளை சரியாக கடைப் பிடிக்கிறார்களா எனக்கேட்டால் பதில் இல்லை என்பதாகும். இலங்கையின் சனாதிபதியே 'மனம் நொந்து' இப்படிக் கூறுகிறார்: 'சாதாரண மக்களின் உயிரை கையில் வைத்துக்கொண்டு இவர்கள் விளையாடுகிறார்கள்'' (அம்மணி நீங்கள் மட்டும் என்னவாம்? அப்பாவி மக்களின் உயிரோடு அவர்களும் தங்கள் பங்குக்கு விளையாடுகிறார்கள். அவ்வளவு தான்.

*-வைத்தி*





## பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும்

கே.எஸ்.சிவகுமாரன்

பத்தி எழுத்துகளும், பல் திரட்டுக்களும் அடங்கிய முப்பது கட்டுரைகளைத் தொகுத்து திறனாய்வுப் பார்வைகள் எனும் தலைப்பில் கே.எஸ். சிவகுமாரன் நூலொன்றினை வெளியிட்டுள்ளார். இந்நூலிற்கான அணிந்துரையைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதியுள்ளார்.

'கே.எஸ். சிவகுமாரன் நாற்பது வருட காலமாக ஈழத்துக் கலை இலக்கியப் பரப்பில் தனக்கேயுரிய திறன்களுடன் பன்முகப் பரிமாணங்களில் வெளிப்பட்டு வருபவர்.

தமிழ்ப் பத்திரிகைகளிலும், ஆங்கிலப் பத்திரிகைகளிலும், சிறு சஞ்சிகைகளிலும் எழுதி வருபவர். அத்தோடு வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றிலும் செயற்பட்டுள்ளவர். இவர் சிறுகதை ஆசிரியராகவும் பரிணமித்துள்ளார்.


தமிழ்ப் பத்திரிகை வரலாறு ஒரு வரலாற்றியல் நோக்கு நிலையில் இன்னும் வரன் முறையாக எழுதப் படவில்லை. எமது பத்திரிகை எழுத்து முறைமை குறித்த கண்ணோட்டங்கள், ஆய்வுகள் கூட இன்னும் செய்யப்படவில்லை. இந்நிலையில் பத்திரிகைகளில் கே.எஸ். தான் எழுதிய பல் வேறுபட்ட பத்தி எழுத்துருக்களை நூலாக்கியது நல்ல முயற்சி எனலாம்.

ஒருவர் கட்டுரையாளராக இலகுவில் பரிணமித்துவிட முடியும். ஆனால் பத்திரிகை வழி எழுத்து - பத்தி எழுத்து மூலம் குறிப்பிட்ட விடயங்களை, சிந்தனைகளைப் பதிவு செய்வது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. இதற்கு நுண்ணிய திறனும் பயற்சியும் ஆழ்ந்த ஈடுபாடும் தேவை. அப்படிப்பட்ட எழுத்துக்கள் என்றும் பேசப்படுபவையாகவே அமையும்.

பேரா. சிவத்தம்பி தமது அணிந்துரையில் ''சிவகுமாரன் அவர்களது தமிழ் எழுத்துக்களுக்கு ஒரு புலமைத் தேவையுள்ளது. ஆங்கிலத்தில் ஆழமான பரிச்சயமில்லாத எழுத்தாளர்களுக்கும், ஆற்றல் கொண்ட வாசகர்களுக்கும் இவரது எழுத்துக்கள் பெரிதும் உதவுகின்றன. குறிப்பாக மாணவர் மட்டத்தில் (ஏ.எல் முதல் பட்டதாரி வகுப்புவரை) சிவகுமாரன் வாசிக்கப்படுவதற்கான காரணம் இதுவேயாகும். இன்றைய கல்வி முறையின் அமைப்பிலே சிவகுமாரன் போன்றவர்கள் முக்கியமான ஒரு இடத்தை பெறுகின்றனர்'' என்கிறார்.

இந்நூலில் இடம்பெற்ற கட்டுரைகள் யாவும் ஆழமான விமர்சன நோக்குடயவை அல்ல. அதனை மேற்கொள்ள்வதையும் தனது பணியாக கே.எஸ். புரிந்து கொள்ளவில்லை. ஆனால் தமிழில் பல்வேறு நூல்கள் எழுத்தாளர்கள் கட்டுரைகள் என்ப வற்றை வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வரும் பணியை நாம் குறைத்து மதிப்பிடவும் முடியாது. பலர் ஏனோ இதனைச் செய்வதில்லை. கே.எஸ். இந்த எழுத்து மூலம் வாசகர்களை சீரிய பக்கம் கவனம் கொள்ள வைக்கிறார் எனலாம்.

தமிழில் இதுபோன்ற எழுத்துக்கள் நூலுருப் பெற்று வெளிவருவது நல்ல முயற்சி. இது எமது பத்திரிகை வரலாற்றில் ஏனைய பல்வேறு துறைசார் நிலைப்பட்ட எழுத்துக்கள், ஆசிரியர்கள் பற்றிய விபரங்களும் தொகுக்கப்பட வேண்டிய தேவையை வலியுறுத்தி நிற்கிறது எனலாம். -மாலின்



## ''தெரிந்த விடைகளுக்கான கேள்விகள்''

(கட்டுரைத் தொகுப்பு)

எம்.எம்.எம்.நூறுல் ஹக்,

வெளியீடு: மருதம் கலை இலக்கிய வட்டம், சாய்ந்தமருது

வீரகேசரி நாளிதழில் வெளியான உண்மைக்குப் புறம்பான விடயங்களைக் கொண்டு இன்னொரு சமூகத்தை குறைகாணுகிற ஒரு கட்டுரைக்கு பதில் கட்டுரையாக வெளிவந்தவைகளின் தொகுப்பு நூலே 'தெரிந்த விடைகளுக்கான கேள்விகள்'!


பத்திரிகை நறுக்குகளை (Cuttings) 'ரோனியோ' பிரதி பண்ணி மிக ஆரோக்கியமான பணியை நிறைவேற்றியுள்ளார் நூறுல் ஹக்.

''இதனை ஓர் அச்சுப்பதிப்பாக வெளிக் கொணர்வதில் நமது படித்த பணக் காரர்கள் கூட அக்கறை கொள்ளவில்லை என்பது எனக்குள் நீண்ட குறையே...'' என்ற இந்த நூலாசிரியரின் ஆதங்கம் அவர்சார் சமூகத்தவரால் நிவர்த்திக் கப்பட வேண்டியது அவசியம்.

''முஸ்லிம்களைப் பொறுத்தவரை 'மொழி' ஒரு பிரச்சினையல்ல. மொழித் திணிப்பு அவர்களிடம் வெற்றிபெறும் வாய்ப்பு இல்லை....'' என்ற தலைப்புடன் ஆரம்பமாகும் இக்கட்டுரைத் தொடர் குறித்த கட்டுரைக்கான தகுந்த மறுப்புக்களை முன்வைப்பதோடு, 'தமிழ் - முஸ்லிம் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி ''தமிழ் - முஸ்லிம் ஒருமைப்பாட்டுக்காக பழையதை மறந்து ஒன்றிணைவோம்......'' என அறைகூவலும் விடுக்கிறது.

காலப்பொருத்தமும், தேவையும் கருதிய இவ்வெளியீடு அனைத்துத் தரப்பினராலும் படிக்கப்பட வேண்டியதாகும். எந்தக் கட்டுரைக்கு மறுப்பாக எழுதப்பட்டதோ, அக்கட்டுரையும் இதில் சேர்க்கப்பட்டிருந்தால் இதன் தாக்கம் இன்னும் வலுவுற்றிருக்கும் என்பது தாழ்மையான கருத்து.

இதுவும், இதுபோன்ற நூலாசிரியரின் ஏனைய கட்டுரைகளும் அச்சுருப்பெற வேண்டியதும், பரவலாக வாசிக்கப்பட வேண்டியதும் சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்க்கத் துணை போகும். சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்வார்களென எதிர்பார்க்கலாம். -நில்ஷா




## 'ஃபீனிக்ஸ்'

(கவிதைகளுக்கான இதழ்)

ஆசிரியர்:வி.மைக்கல்கொலின்

திருமலையிலிருந்து தாகம்' கலை, இலக்கிய அரசியல் இதழைத் தந்த 'தாகம்' வி.மைக்கல் கொலின் மட்டக்களப்பிலிருந்து 'ஃபீனிக்ஸ்' கவிதா இதழைக் கொணர்ந்துள்ளார். இன்னும் பரந்த தேடல்களுக்கும் கவிதை பற்றிய விசாலிப்புக்களுக் குள்ளும் நுழைய வேண்டிய தேவையிலுள்ளது இவ்விதழ். குழுநிலைப்பட்டுப் போகாமலும் இதுதான் கவிதையென்கிற, மற்றெல்லாவற்றையும் புறக்கணித்துப் போகிற அவலமான இலக்கிய அடையாளப்படுத்தல்களில் இருந்து ஒவ்வொரு கவிதா இதழும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமும் உள்ளது.

'ஃபீனிக்ஸ்' கவிதை தொடர்பான கட்டுரைகள், விவாதங்கள், மற்றும் பிறமொழிக் கவிதைகளைக் கூடத் தரலாம். இது முதல் இதழ். எனவே தேடுவார்கள், தருவார்கள் என எதிர்பார்க்கலாம். -நில்ஷா



## வாழ வா தோழா

கவிதைத் தொகுப்பு

ம.சண்முகநாதன்

வெளியீடு:பாஸ்ப் பிரிண்ட் சேர்விஸ் லிமிடெட், தெவட்டகஹவத்த வீதி, இரத்மலானை.

மலையகத்தமிழரின் வாழ்வுக் களத்திலிருந்து தீரமாய் ஒலிக்கும் குன்றத்துக் குமுறலாக வெளி வந்துள்ளது இந்நூல். அடிமைத் தளையறுத்து வாழ வா.என தோழர்களை அழைக்கிறார் பண்டாரவளை அன்புச் செல்வன் எனும் ம.சண்முக நாதன்.

''சந்தனக் கரைசலை
சாக்கடை நீரிலும்
தேக்கின் வலிமையைத்
தெருவோரப் புல்லிலும்
தேடியது எங்கள்
தவறுதான், தவறுதான்
நீதியை நாங்களே
சேதியாய் ஆக்குவோம்...''

இவ்வாறு உணர்ச்சி மிகு கவிதைகளைக் கொண்டுள்ளது. இந்நூலை மலையக மக்களின் விழிப்புணர்வுத் தடமாகக் கொள்ளலாம்.

கேகாலை மலர்




## பெண்

காலாண்டிதழ்

வெளியீடு;

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,


27மு, லேடி மணிங் ட்ரைவ், மட்டக்களப்பு.

விலை 30/=

இலங்கையின் பெண்ணிய/பெண்கள் அமைப்புக்களில் ஒன்றான சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் வெளியீடாக 'பெண்' மலர்ந்துள்ளது.

கவனத்தை ஈர்க்காத அட்டையுடன் இவ்விதழ் வெளிவந்திருப்பினும் நல்ல பல கட்டுரைகள் அக்குறையை நிவர்த்திக்கின்றன. சி. ஜெயசங்கரின் மறிலின் கிறைசிலின் 'கொக்கட்டிச் சோலைக்கான கோவை'க் கவிதைகள் மிக நன்றாக உள்ளன. நடந்து முடிந்த பீஜிங் பெண்கள் மாநாடு பற்றிய கட்டுரைகளுக்கு அதிக பக்கம் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது.

நிவேதினி, பெண்ணின் குரல் நங்கை என இலங்கையின் பெண்களுக்கான சஞ்சிகைத் தொடரில் 'பெண்'ணின் வரவும் முக்கியமானதெனக் கொண்டு நம்பிக்கை களுடன் அதன் தொடர் வரவை எதிர்பார்க்கலாம். -நில்ஷா





## ''அகதியின் குரல்''

தொடர்புகளுக்கு,

Mr. Nazir Ataf,
Post Box - 415,
9001 Tromso
Norway.

நோர்வே சுமைகள் வெளியீட்டகமும், பிரான்ஸ் தமிழ் அகதிகள் இலக்கிய வட்டமும் கனடா ஈழ அகதிகள் உரிமைக் கழகமும் கூட்டாக இணைந்து 'அகதியின் குரல்' எனும் வெளியீட்டை கொணர்ந்துள்ளன. அகதிகள் தொடர்பான தகவல்கள், செய்திகள், கவிதை என பல விடயங்கள் இச்சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன.

இலங்கை, இந்திய ரூபாய் 10/=க்கு கிடைக்குமெனக் குறிப்பிட்டிருப்பினும் கிடைக்குமிடங்கள் பற்றிய தகவல்கள் குறிப்பிடப்படவில்லை. -நில்ஷா




## 'தேசபக்தன்'


தமிழீழ மக்களின் புரட்சிகர அரசியல் இதழ்

தொடர்புகளுக்கு,

A.Shoba Doss,
67, Parkwoodvillege dr,
# 308, Donmills
Ontario,
M3A 2X4
Canada.

தீவிர அரசியல் விமர்சக இதழாக வெளிவந்து கொண்டிருக்கும் ''தமிழீழ மக்களின் புரட்சிகர சனநாயக அரசியல் இதழான தேசபக்தனின் 96ம் ஆண்டு டிசம்பர் இதழ் வெளிவந்துள்ளது. 'விடுதலைப் புலிகள் தலைமைக்கு பகிரங்க மடல், உலக அழகிப்போட்டி, தமிழீழத்தில் மட்டுமா சகோதர யுத்தம், ஓர் இனவெறியனின் மரணம் போன்ற தீவிர அரசியல் விமர்சனக் கட்டுரைகளுடன் இன்னும் பல கட்டுரைகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

புலம்பெயர்ந்த ஈழமக்கள் சிலரின் அரசியல் அதி ஈடுபாட்டுக்கு இவ்விதழ் ஒரு சான்றாகத் திகழ்கின்றதெனலாம். -நில்ஷா



## 'இலங்கையின் இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்'

தொகுதி - 3

முல்லைத்தீவு முஸ்லிம்கள்

ஆசிரியர்: எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்

வெளியீடு:

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு

15, ரோகினி வீதி, வெள்ளவத்தை,

கொழும்பு - 6.

விலை150/=

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் சார்பில் ஆக்கபூர்வமான குரலெழுப்பி வரும் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினது வெளியீட்டுத் தொடரில் ஒன்றாக வந்துள்ளது மேற்குறித்த புத்தகம்.

பத்து பிரதான தலைப்புகளில் இந்நூலில் முல்லைத்தீவு முஸ்லிம்கள் பற்றிய ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு முஸ்லிம்களின் தொடர்பான ஆய்வில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுவரும் கலாநிதி ஹஸ்புல்லாஹ்வின் இம் முயற்சி வரலாற்றுத் தேவையாகும்.




## நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள்

முருகபூபதி

இலங்கையில் விற்பனை உரிமை

'சுஜாதா' பதிப்பகம்

இல.288, பிரதான வீதி


மாத்தளை

விலை: இந்திய ரூபா30.00

இன்று அமரராகிவிட்ட தமிழ் படைப்பாளிகளான கே.டானியல், மு.தளையசிங்கம், என்.எஸ்.எம். இராமையா, க.கைலாசபதி, எம். எம்.பி.மொகிதீன், க.நவசோதி, கவிஞர் ஈழவாணன், நெல்லை.க. பேரன், காவலூர் ஜெகநாதன் ஆகியவர்களைப் பற்றியும் சிங்களவரான கே.ஜி.அமரதாச மற்றும் சோவியத் எழுத்தாளர் வித்தாலி பூர்னிக்காவைப் பற்றியும் அவர்களுடனான தனது நட்பு பற்றியும் அவுஸ்திரேலியாவில் வதியும் ஈழத்தவரான எல்.முருகபூபதி எழுதிய 12 கட்டுரைகள் இதிலுள்ளன.

இது காலவரை இவ்வாறு வந்த எழுத்துக்களிலிருந்து அல்லது மல்லிகையின் அட்டைப்படக் கட்டுரையிலிருந்து வேறுபட்டு இக்கட்டுரைகளில் குறித்த எழுத்தாளர்களின் மறு பக்கங்களையும் ஒரளவு எழுதியமைதான் இதன் சிறப்பு. க.கைலாசபதியால் மஹாகவி, மு.தளையசிங்கம், எஸ். பொ போன்றோர் இருட்டடிப்புச் செய்யப்பட்டமையையும் மு.தளையசிங்கத்தின் 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி' என்ற தொடர் கட்டுரையையும், நெல்லை க.பேரனின் படைப்புக்கள நடைசித்திரங்களாக இருக்கின்ற குற்றச்சாட்டையும் அவரவர்களைப் பற்றிய கட்டுரையில் எழுதியதை உதாரணமாகத் தரலாம். நிச்சயமாக முருகபூபதி பெருமதிப்பு வைத்திருக்கிற மல்லிகை டொமினிக் ஜீவாவுக்கு இவை சந்தோசத்தைத் தரப்போவதில்லை.

-நட்சத்திரன் செவ்விந்தியன்




## யாரொடு நோவோம்?

மட்டக்களப்பு மர்மக் கொலைகள் தொடர்பாக மார்ச் 20 - ஏப். 02 (இல.118)வது சரிநிகரில் வந்த கட்டுரையில் சில தவறுகள் உள்ளன. இது தொடர்பாக மேற்படி சம்பவங்களில் பாதிக்கப்பட்டவன் என்ற வகையிலும் எனது விளக்கத்தை தங்களது பத்திரிகையில் இயலுமானவரை விரைவாக பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
கடந்த மார்ச் 07 அன்று அதிகாலை 5.50 மணியளவில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட கோமஸ் அன்ரனி ராஜ் (27) என்பவர் எனது இரண்டாவது மகனாவார். இவர் வழமை போல் அன்று காலை 5.40மணியளவில் வீட்டிலிருந்து தனது வியாபார நிலையத்திற்கு (சொந்தமானதல்ல) செல்லும் போது 5.50 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார். உங்கள் பத்திரிகையில் வந்தது போன்று பணமோ அல்லது கைச்சங்கிலி, மணிக்கூடு, மாலை என்பவற்றையோ அவர் அப்போது அணிந்திருக்கவில்லை. அவற்றினை அணிவதிலும் அவர் விருப்பமுடையவர் அல்ல. பிரசுரித்த செய்தி எங்களால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உங்கள் பத்திரிகைக்கு கொடுக்கப்பட்டதல்ல. மேலும் இவர் வழமையாக பைசிக்களில் போவது போலவே அன்றும் சென்றார். அவரது பைசிக்கள், பிரதான வீதியில் இவர் சுடப்பட்ட இடத்தில் இருந்து சுமார் சில மீற்றர் தூரத்தில் இருந்தது. மேலும் பெற்றோர் ஆகிய நாம் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் யார் என்பதை இன்றும் அறிய முடியாமலே உள்ளோம். மேலும் இதற்கு என்ன காரணம் என்பதையும் அறிய முடியாதுள்ளோம்.
எனது மகன் எந்த இயக்க சம்பந்தமான பிரச்சினைகளும் இல்லாதவர். இவ்வாறு ஏதும் அறியாத அப்பாவிகளின் கொலைக்கான காரணம் தெரியவருவது நல்லது. ஆனால் யார் இதை செய்வது?

*சி. தவராசா*
*மட்டக்களப்பு*

## மணலுக்குள் தலையைப் புதைப்போம்!

ராதிகா குமாரசாமி ராகவனுக்கு எழுதிய பதிலில் (சரிநிகர் 118) தனது கட்டுரைக்கான எதிர்வினைகள் ஆண்களிடமிருந்தே வந்துள்ளது பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்.
1. அரசியல் தொடர்பாகத் தமிழ்ப் பெண்கள் எழுதுவது குறைவு.
2. வலிய மாற்றுக் கருத்துடைய பெண்கள் ஒரு வேளை பேனைக்குப் பதிலாக வேறு கருவியைக் கையிலேந்தி இருக்கக்கூடும். ஆண்மை, பெண்மை என்பன பற்றி ராதிகா கூறும் கருத்துக்களும் ஆணாதிக்கச் சமுதாய விழுமியங்களினின்றே எழுவன போலத் தெரிகின்றன.
இவை போக, வங்கதேச (பங்களாதேஷ்) விடுதலைப்போரில் எத்தனையோ பெண்கள் ஆயுதமேந்தினார்கள். பாஸிஸத்துக்கெதிராக அல்பானியப் பெண்கள் பர்தாவைக் கழற்றாமலே போரில் ஈடுபட்டார்கள். பலஸ்தீன விடுதலைப் போர் பற்றி நான் விவரிக்க அவசியமில்லை.
பெண்கள் ஆயுமேந்த வேண்டுமா, வேண்டாமா என்ற விதமாகப் பிரச்சினையை அணுகுவதை விட, எவருமே ஆயுதம் ஏந்த வேண்டுமா என்ற விதமாகப் பிரச்சினையை அணுகுவது முழுமையானது. அமைதியையே உலகின் ஏகப் பெரும்பாலான மக்கள் விரும்பினாலும் அவர்கள் அமைதியாக வாழ அனுமதிக்கப்படுவதில்லை என்பதே உண்மை. உலகில் எங்குமே ஒடுக்குமுறையாளர்கள் தமது ஆயுதங்களைத் தாமாகவே கீழே வைத்ததில்லை. காந்தி சாத்வீகத்தின் மூலம் போராடி வெல்லலாம் என்று கருதினார். ஆயினும் ஹிட்லருக்கு எதிரான போரில் அவரால் அதைப் போதிக்க முடிந்ததா? பலமான எதிரிக்கு எதிராக பலவீனங்களின் வலிய ஆயுதம் அகிம்சை என்பது அவரது எண்ணம். அவரே கோழையின் அகிம்சையை விட வன்முறையை உயர்வாகக் கொண்டாரென அறிகிறேன்.
இன்று ராஜினி திராணகம ஒரு சமாதான தேவதையாக நமக்குக் காட்டப்படுகிறார். ஆயினும் அவர் கூட ஒரு காலத்தில் விடுதலைப் புலிகட்கு ஆதரவாக இருந்தவர் என்ற உண்மையை நமது பிரசாரகர்கள் கூட மறந்து விடுகின்றனர். ராஜினி விடுதலைப் புலி ஆதரவாளராக இருந்த காலத்தில் அவர்கள் காந்தியவாதிகளாக இருக்கவில்லை. ராஜினியின் மனமாற்றத்தின் காரணங்களையோ நியாயத்தையோ நான் கேள்விக்கு உட்படுத்த முயலவில்லை. ஆயினும் கொடூரமான ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுத மேந்தும் உரிமையைப் பெண்கள் சிறுவர் போன்றோருக்கு மறுக்க நமக்கு என்ன உரிமை உண்டு?
ராகவனின் கருத்துக்களில் உள்ள ஆணாதிக்கப் பண்புகள் எனக்கு உடன்பாடானவையல்ல. ஆயினும் அவரது வாதங்களின் நியாயமான பக்கம் ஒன்று முக்கியமானது. அது ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடும் உரிமை பற்றியது.
இனத்துவப் பெருமையும் சுய அடையாளமும் ஒன்றல்ல; தேசிய சுயநிர்ணய உரிமையும் தேசியவாதமும் ஒன்றல்ல. இனவாதம், தேசியவாதம், மதவாதம் என்பன அடிப்படையிற் பிற்போக்கானவை தாம். ஆயினும் இனம், தேசியம், மதம், சாதி, மொழி, பிரதேசம் என்ற எந்த அடிப்படையிலும் மக்கள் ஒடுக்கப்பட்டால், அவர்கள் அதற்கெதிராக கிளர்ந்து போராடும் உரிமையை மறுத்து நாம் 21ம் நூற்றாண்டில் மனிதத்துவ மேம்பாடு பற்றிப் பேசுவதை விடத் தலையை மணலுக்குள் புதைத்துக் கொள்வது யதார்த்தமானது.

*சிவசேகரம்*
*லண்டன்*

## ஒரு திருத்தம், ஒரு விவரம்!

'பண்டிட் குயின்' சம்பந்தமான ஆழ்வார்க்குட்டியின் குறிப்புக்கள் தொடர்பாக: பூலான்தேவியின் வரலாற்றை சிறையிலிருந்து எழுத உதவியவர் மாலா ஸென். பிரிட்டன் அலைவரிசை நான்கு தொலைக்காட்சி ஆசியப் பொறுப்பாளர் பரூக் தோண்டியின் முன்னைய மனைவியும் இன்றைய சினேகிதியும் ஆனவர். இது தொடர்பான விரிவான விவரங்கள் லண்டன் நாழிகை சஞ்சிகையில் வெளியான என்னுடைய 'பண்டிட் குயின்: பாலியல் மற்றும் சாதிய வன்முறையின் அழகியல்' கட்டுரையில் வெளியாகியுள்ளது. மிருணாள் ஸென் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது பிழையான விபரம்என்றே கருதுகிறேன். மாலா ஸென்னின் புத்தகத்தின் அடிப்படையில் தான் சேகர்கபூரின் திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது.
இன்னொரு விபரம்: முன்பொரு சரிநிகர் இதழில் கமலா பாஸின் நிக்காஹ்த் ஸைத்கான் போன்றோர் எழுதிய அற்புதமான புத்தகமான Some Questions On Feminism and its Relevance to South Asia 'தமிழில் இதுவரை மொழியாக்கப்படவில்லை. மொழியாக்கப்படவேண்டிய புத்தகம் என விமர்சனம் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.
குறிப்பிட்ட அப்புத்தகம் பெண்ணிலைவாதம்: சில கேள்விகள் எனும் தலைப்பில் 1989, மார்ச் மாதம் தமிழாக்கி எமது 'வெளிச்சம் வெளியீடு' அதைக் கொண்டு வந்தது. இரண்டே மாதங்களில் விற்றுத் தீர்ந்தது. அதன் பிரதி ஒன்றும் என்னிடம் உள்ளது. அப்புத்தகம் தேவைப்படுமானால், எனக்கு எழுதினால், நான் போட்டோ பிரதி செய்து அனுப்பி வைப்பேன்.
எனது முகவரி:
YAMUNA RAJENDEDRAN
19- Hempstead Rd, Walthamston, London E17 3RL.
தொலைபேசி: 0181 521 8990

*யமுனா ராஜேந்திரன்*
*லண்டன்*

## மூச்சுத் திணறும் விமர்சனம்!

சரிநிகர் இதழ் 113ல், மஜீதின் ''ஏறுவெயில்'' கவிதைத் தொகுதி பற்றி சேரமான் கணைக்கால் இரும்பொறையின் விமர்சனத்தை வாசித்து மூச்சுத்திணறிப்போனேன். மஜீதின் கவிதைகள் பற்றிய விமர்சனமா...? அன்றில் சோலைக்கிளியின் கவிதைகள் பற்றிய விமர்சனமா? என்பதை ஊகித்தறிய நீண்ட நேரமெடுத்தது.
உண்மையில் மஜீதின் கவிதைகளில் கவித்துவ ஒட்டம் இல்லாவிட்டாலும் சோலைக்கிளியி கவிதைகளோடுதானா? ஏனை கவிஞர்களின் கவிதைகளை ப்பிட்டு விமர்சிக்கும் கட்டாய கடமை சேரமானுக்கு அடிக்க ஏற்படுகிறது. இலக்கியம் ய நக்கும் சொந்தமானதல்ல. விம னங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப் புகளுக்கு படல் வேண்டும்.
மஜீதுக்கு சோலைக்கிளியின் கவிதைகளின் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம். அதற்காக சோலைக்கிளியின் கவிதைகளை ''பிரதி பண்ணி''யிருக்கிறது என்பதை இரும்பொறை தவிர்த்திருக்கலாம். மண்வாசனை அப்பிய வசனங்களைக் கவிதையில் செதுக்கும் திறன் சோலைக்கிளிக்கு மட்டுமே முடியும். அல்லது பிறர் பாவிக்க முடியாது என்றிருந்தால் ''ஹைக் கூ'' கவிதைகளை யப்பானியர்களும், ''தலித்'' கவிதைகளை ''தலித்'' இனமக்களுமே எழுத முடியும்... பாட முடியும். என்றல்லவா... போய்விடும்.

*மருதமுனை எம். விஜிலி.*

## பானை உடைச்சவர் பறையாமல் போறார்!

ஜெயபாலன் சமூக யதார்த்தம் அறியாத ஒரு மூடக்குழந்தை அல்ல, அல்லது திலகராசா கூறுவது போல் தெளிவில்லாத அறவெழுத்து வலிமையில்லாத ஒரு அர்த்தமற்றவரும் அல்ல.
''தெய்வ நிந்தனை'' பற்றியது தான் திலகராசாவின் வாதம் என்றால், அவர் ஒரு நாத்திகராக இருந்து விட்டுப்போகட்டும். ஆனால் அவருக்கு கிடைத்ததொரு நல்ல உதாரணம் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்னும் உயிர்வாழ்கிறார் என்பதுதான் வேடிக்கை.
''தெய்வம் நின்று கொன்ற'' காமினி திசநாயக்கா, ஆர்.பிரேமதாச, ரஞ்சன் விஜயரட்ன, லலித் அத்துலத்முதலி எல்லோரையும் எந்த வகையில் இணைப்பதாம்.
''தெய்வம் நின்று கொல்லும்'' எனும் சொற்களினால் தான் மக்களின் ஆய்வுச் சிந்தனை தடைப்பட்டு விடும் என்றால் அப்படி ஒரு சிந்தனை தேவைதானா?
மூ.பொ. அவர்களின் மறுதலிப்பு தர்க்க ரீதியாகவும் விளங்கும் படியாகவும் இருந்தது. ஆனால் இவ்வளவு கேள்விக்குள்ளான சோலைக்கிளியின் உருவகங்களும் குறியீடுகளும் ஒரு தெளிவான விமர்சனத்தை உள்ளடக்கியிருக்கும் இவ்வேளையில் இது பற்றி சோலைக்கிளியும் சரிநிகரில் இரண்டொரு வார்த்தை தன்புறத்தில் இருந்தும் எழுதினால் என்ன? ''பானை உடைச்சவர் பறையாமல் போறார்'' என்றில்லாமல் இனியாவது எழுதுவாரா சோலைக்கிளி?
அறிஞனாம் முனாப்போனா அவருடைய விரலைப் பார்த்த சுலோகம் சொல்லி தனது மேதாவித்தனத்துக்கு தம்பட்டமடித்தது தான் எரிச்சலாக இருந்தது.
ஆழ்வார்க்குட்டிக்கு வேறு ஒன்றும் கிடைக்கவில்லையா? களம் கொடுத்தால் சேத்து விதைப்பு விதைத்து விடுவார் போலிருக்கிறது. சயனைட் கதையெல்லாம் பழையது. ஏதாவது உருப்படியாய் எழுதினால் பிரயோசமாய் இருக்குமே.
''மெல்லத் தமிழினி'' எங்கே அடிக்கடி தொலைந்து போகிறது?

*இளைய அப்துல்லாஹ்,*
*அக்குறணை*

## நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை!

சரிநிகர் ஏப்ரல் இதழில் விவேகி எழுதிய 'பட்டணமும் சூழலும் லஞ்சப் புலிகளின் குகை' கட்டுரை வாசித்தேன். மிக துல்லியமாக பட்டணமும் சூழலிலும் இடம் பெறும் தில்லுமுல்லுகளை விபரித்திருந்தார். துலைவானின் திருகுதாளங்கள் பிரதேச செயலாளரிற்கு தெரியாமலில்லை. பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக வேலும் மயிலும் அவர்களிற்கு முறைப்பாடு செய்துள்ளனர். இதைவிடவும் ''கிளார்க்'' கப்பல் பயணிகளிடம் சுளை சுளையாக (பணம்) கறந்த விடயம் புனர்வாழ்வு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இந்த விடயத்திலும் கூட எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாக அறியப்படவில்லை. தங்களுடைய இதழில் இடம் பெற்ற கண்டன பிரதியை போட்டோ பிரதி செய்து விளம்பர பலகையில் போட்டதோடு சரி.

*சீர்துக்கி*
*திருமலை*

## துலைவானும் சுளைமானும்!

சரிநிகர் (ஏப்ரல் 03-25, 1997) இதழில் ''திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் லஞ்சப் புலிகளின் குகை'' என்ற தலைப்பில் விவேகியால் குறிப்பிடப்பட்ட சகல விடயங்களும் நூற்றுக்கு நூறு உண்மை என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்.
அதில் குறிப்பிடப்பட்டுள்ள ''துலைவான்'' சம்பந்தமாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும். ''சுளையாக சம்திங் வாங்குவதில் இவர் ''மான்'', அதிலும் கவரிமான். குறிப்பிட்ட சம்திங் தொகையில் ஒரு பத்துரூபா குறைவிழுந்தாலும் உயிரையே விட்டுவிடுவார். (உயிரை வாங்கி விடுவார்) எனவே ''துலைவானை'', ''சுளைமான்'' என்றும் அழைக்கலாம்.

*அ. நக்கீரன்*
*திருமலை*

Registered as a news paper in Srilanka

# இவர்களுக்கு இல்லை!

யாழ் குடாநாட்டில் மீளக்குடியேறிய வலிகாமம், தீவுப்பகுதி, யாழ்ப்பாணம் பகுதி மக்களுக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வன்னிக்கு போன குடும்பங்கள், இப்படி இல்லாதவர்களுக்கும் இந்த முத்திரைகள் வழங்கப்பட்டு நிவாரணமும் எடுத்திருப்பது தெரியவந்துள்ளது. இதனால் பல லட்சம் ரூபா நட்டம் என கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை மீளக்குடியேறியவர்களுக்கு தற்போது 5 ஆயிரம் ரூபா பணம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்படுகிறது.

ஆனால் மயிலிட்டி, காங்கேசன் துறை, மாவிட்டபுரம், வெற்றிலைக்கேணி, தெல்லிப்பழை, அளவெட்டி, வளவாய், விளான், பலாலி, வசாவிளான், ஒட்டகப்புலம், போன்ற பகுதி மக்கள் இன்னமும் தமது இருப்பிடங்களுக்கு செல்ல அனுமதி அளிக்கப்படவில்லை. அத்துடன் இவர்களுக்கு இந்த 5 ஆயிரம் ரூபாவும் இல்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, வசாவிளான், மயிலிட்டி, பலாலி, வளவாய், தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், விளான், அளவெட்டி போன்ற பகுதிகளுக்கு மக்கள் இன்னமும் போக அனுமதிக்கப்பட வில்லை.

பொன்னாலைப்பாலத்தின் ஊடாக காரைநகர் போக முடியாத நிலை. இப்பகுதிகளில் வீடுகள் பலருக்கு இல்லை. இளவாலைக்குப் போகும் பஸ்ஸில் பயணம் செய்தால், அல்லது கப்பலுக்கு காங்கேசன்துறைக்குப் போனால் அப்பகுதி வீடுகள் இருக்கும் நிலை பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

வலிகாமத்தின் சில பகுதிகளில் அதாவது சித்தன்கேணி, சங்கானை, மூளாய், நவாலி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் அடிக்கடி மோதல்கள் நடைபெறுகின்றன. தென்மராட்சியில் மீசாலை, நுணாவில், மந்துவில், வரணி போன்ற இடங்களிலும் மோதல்கள் நடைபெறுகின்றன.

# திலகர் வன்னியில்?

தியாகி அன்னைபூபதியின் 9வது நினைவு தினத்தையொட்டி வன்னியில் பரவலாகக் கூட்டங்களும் விழாக்களும் நடைபெற்றுள்ளதாகவும், இக்கூட்டங்களில் புலிகளின் முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியதாகவும் அங்கிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டங்களிலும், விழாக்களின் போதும் புலிகள் சார்பாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் போது, சமீபகாலமாக அடிபட்டு வரும் பேச்சுவார்த்தைகள் குறித்தும் தகவல்கள் தெரிவிக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. குறிப்பாக அண்மையில் லண்டனிலிருந்து கொழும்பு வந்து சந்திரிகா- ரணில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திய ஃபொக்ஸின் முயற்சிகளை அடுத்து புலிகளுடன் இரகசியப் பேச்சுக்கள் நடைபெறுவதாக வந்துள்ள தகவல்களில் எந்த உண்மையும் இல்லையென்பது தெரிவிக்கப் பட்டுள்ளது. புலிகள் இலங்கை அரசாங்கத்துடனோ, பிரித்தானிய அரசாங்கத்துடனோ உத்தியோக முறையிலும் சரி, உத்தியோகபூர்வ மற்ற முறையிலும் சரி எந்தப் பேச்சுக்களிலும் ஈடுபடவில்லையென்று விரிவாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்தால், அந்தப் பேச்சுவார்த்தையின் போது, சுயநிர்ணய உரிமையிலும், தாயகக் கோட்பாட்டிலும் தாம் உறுதியாக நிற்போம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பத்திரிகைகளும் சில அரசியல் வாதிகளும் ஊதிப் பெருப்பித்துள்ளது போல் அப்படி எந்த விதமான முன்னேற்றங்களும் நடந்து விடவில்லை என்பதே புலிகளின் கருத்தாக வெளிப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை திலகர் பாரிசிலிருந்து வன்னிக்கு வந்தது உண்மையென்றும், ஆனால் அவர் திரும்பிப் போய் ஃபொக்ஸ் உடன் பேசினார் என்பது உண்மையல்ல என்றும், திலகர் இன்னமும் வன்னியிலே இருப்பதாகவும் இன்னொரு உறுதியான தகவல் ஒன்று தெரிவிக்கிறது. தவிரவும், பாலசிங்கம் அவர்கள் லண்டன் போயிருப்பதும் சரியான தகவல் அல்ல என்றும் அத்தகவல் மேலும் தெரிவிக்கிறது. இதேவேளைபுலிகளின் முன்னாள் பிரமுகரான கரிகாலன் அவர்கள் இயக்கத்தினுள் பின்னணிக்குத் தள்ளப்பட்டுள்ளதாக இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

# வந்து பார்த்தால் தான் தெரியும்!

யாழ்ப்பாணத்தில் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளதாக அரசு பிரச்சாரம் செய்கிறது. ஆனால் தொலைபேசி அழைப்புக்காக மக்கள் படும் பாடுகள் மிகவும் பரிதாபகரமானது. தூர இடங்களில் இருந்து அதாவது வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் போன்ற பகுதிகளில் இருந்து முதல் நாளே நகர் வந்து உறவினர்களுடன் தங்கியும் தொலைபேசி அழைப்பு கிடைக்காமல் ஏமாற்றத்துடனே வீடு செல்கின்றனர்.

யாழ் பிரதான தபாலகத்திலும், சில தனியார் தொலைபேசி நிலையங்களிலும் இதற்காக மக்கள் தவம் கிடக்கின்றனர். முதல்நாள் பதிவு பண்ணினால் மறுநாள் கிடைக்கும். ஆனால் யாழ் தபாற் கந்தோரை விட தனியார் நிலையங்களுக்கே விசேட சலுகை. பிரதம தபாற் கந்தோருக்கு 25 அழைப்புக்களே தரப்படுவதாக தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தனியார் தொலைபேசி நிலையங்களுக்கு 45 அழைப்புக்கு மேல் கிடைக்கிறது.

அதுவும் ஒரு தனியார் தொலைபேசி நிலையத்தை தொலைத்தொடர்பு திணைக்கள பரிசோதகர் ஒருவர் பங்காக நடத்துவதால் அதற்கு விசேட சலுகை இருக்கிறது. எப்படியும் தொலைபேசி அழைப்பு கிடைக்கும் என்பதால் மக்கள் அங்கு அதிகமாகச் செல்கின்றனர்.

வெளிநாடுகளுடன் தொலைபேசியில் பேசுவதற்கு வேம்படிச்சந்தியில் 'ரெலிகொம்' அலுவலகம் ஒன்று இதற்காக விசேடமாக திறக்கப்பட்டுள்ளது. இங்கு மக்கள் வெள்ளம். அருகில் கடைகள் இல்லை. மலசல கூடம் இல்லை. கொளுத்தும் வெய்யில். அருகில் இராணுவ காவலரண். கண்டபடி திரிய முடியாது.

இங்கு பில் போடுவதற்குரிய உழியர்கள் அவர்கள் லீவு என்றால் எல்லாமே பிரச்சினை. அத்துடன் இங்கு பயன்படுத்தப்படும் தொலைபேசிக்குரிய 'மின்கலம்' அடிக்கடி பழுதாகிவிடுகிறது. திருத்துவதற்கு கொழும்பில் இருந்து தொழில்நுட்ப ஊழியர்கள் வர வேண்டும்.

5011, 5012 ஆகிய இலக்கங்களில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. இதனை மேலும் அதிகரித்தால் நல்ல வருமானம் கிடைக்குமல்லவா?


பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பாராளுமன்றத்தில் எல்லாமே சரி என்று கூறினார். நேரில் வந்து பார்த்தால்தான் நிலைமை தெரியும்!

# மாகாண சபை அதிகாரிகளின் மெத்தனம்!

தமிழ் மொழி அமுலாக்கம் என்பது தேசியவுணர்வின் சின்னமாகி விட்டது. பரந்து பட்ட தமிழ் மக்களின் சமூக இருப்பே மொழியின் வடிவில் அதன் அமுலாக்கத்தில் வடிவம் தாங்கி வரும் ஒரு தன்மை தெளிவாக புலப்படும் காலம் இது.

எல்லோரது மனங்களும் தமிழ் மொழியின் அமுலாக்கத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபை முன்னோடியாக விளங்க வேண்டும் அதன் நோக்கத்திற்காக பாடுபட வேண்டும் என்று விரும்புகின்ற போதும் வடக்கு கிழக்கு மாகாணசபை அதிகாரிகளுக்கு அது முக்கியமாகப்படவில்லை போல தோன்றுகிறது.

சபையின் பிரதம செயலாளரே இதற்கு மாறாக இயங்கும் போது ஏனைய அதிகாரிகளிடம் எவ்வாறான சேவையை எதிர்பார்க்க முடியும்? கடிதங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்ட முடியும் என சட்டம் இருந்தபோதும்: இவர்கள் அதைக் கணக்கெடுப்பதாக தெரியவில்லை உதாரணமாக வடக்கு கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சுக்கு பிரதம செயலாளரினால் வரையப்பட்ட கடிதம் ஒன்று இங்கே தரப்பட்டுள்ளது.



ලේකම්,
සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂකාර්යාලය, [illegible]
ත්‍රිකුණාමලය.

සෞඛ්‍ය වෛද්‍ය නිලධාරියි, [illegible]

උක්ත කරුණ පිළිබඳව ඔබ අමාත [illegible]
(රෙජිස්ට්‍රාර්) ගේ 1996.12. [illegible]
කරවනු කැමැත්තෙමි.

ඉහත කී විශ්ව විද්‍යාලයේ [illegible]
[illegible] මහත්මියට නිදහ[illegible]
[illegible] ඇති බවත්, එම සේවය
ගොස් ඇත.

සේවා අවශ්‍යතාවයට යටත්ව ඇ[illegible]
දෛනික [illegible] අවශ්‍ය වීමෙ[illegible]
[illegible] නිදහස්

පී. ත්‍රිමූර්ති,
[illegible]

පිටපත් :- [illegible] 01. [illegible]
[illegible] 02. [illegible]

[illegible]

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிங்கள பகுதி நீங்கலாக தமிழ் மொழி அமுலாக்கம் சட்ட அமுலாக இருக்கும் போது ஒரு தமிழ் உயர் அதிகாரி சட்டத்திற்கு மாறாக ஏன் தொழிற்பட வேண்டும்?

அரசாங்கம் தப்பித்தவறி ஏதாவது நல்ல திட்டங்களை தீட்டினாலும் அமுல் படுத்தும் கடமையை அரச அதிகார வர்க்கம் எடுத்துக் கொள்கிறது. காலம் காலமாக தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய எத்தனையோ நலன்களை தமது தமிழ் எதிர்மன வுணர்வு காரணமாக கிடைக்காமல் செய்த சிங்கள அதிகார வர்க்கம் இன்று படு தீவிரமாக தொழிற்படும் வேளையில் அதற்கு உதவி புரியும் எமது உயர் அதிகாரிகளை தட்டிக் கேட்பது யார்?

மாகாணசபை அதிகாரியின் போக்குக்கு இன்னொரு உதாரணம் யாழ் மாநகர சபையில் சந்தை மேற்பார்வையாளராக சேவை செய்த ஜேசுதாஸன் என்பவர், இறந்து 24 வருடங்கள் ஆகியும் அதற்குரிய சேவை, பணிக் கொடைகள் வழங்கவில்லை.

இது தொடர்பாக அவரின் விதவை மனைவி "யாழ் மாநகர சபையில் சந்தை மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய எனது கணவர் 1972 ஆண்டு இறந்து விட்டார். அவர் இறந்து இப்போது 24 வருடங்களாகி விட்டன. ஆனால் இன்னும் கணவரின் பென்ஷன் வழங்கப்படவே இல்லை. இது தொடர்பாக யாழ் மாநகர ஆணையாளர் 1994 ஆண்டில் விபரங்களைத் திரட்டி வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பித்த போதிலும் மாகாணசபை நடவடிக்கை எடுக்கவில்லை" என்று தெரிவிக்கின்றார்.

எவ்வளவு வேதனை? ஒரு விதவை மனைவியின் அவலங்களுக்கு யார் விளக்கம் கூற முடியும்? மேலும் உதாரணம்:

வடக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்தி நூலகம் பற்றியது. பல்வேறு மாவட்டங்களில் உருக்குலைக்கப்பட்டு கல்வியை தொடரவும்: வாழ்வின் எச்ச சொச்சங்களின் படிப்பில் ஒரு இடத்தில் நின்று இயங்கும் முகமாக திருகோணமலை பட்டினத்தில் ஒழுங்கு சேரும் மாணவர்களின் படிப்புக்கு பங்களிப்பு செய்த ஒரு நூலகம். அது கூட்டுறவுக் கல்லூரி கட்டிடத்தில் இயங்கிய அமரர் பற்குணம் அவர்கள் உருவாக்கிய நூலகமாகும். இதன் இன்றைய தாற்பரியம் என்ன? பல இலட்சங்கள், மக்களின் பணத்தில் முதலிட்டு பல தற்கால நூல்கள் பெறப்பட்டு சகலரும் பயன்படுத்தும் ஒரு நிலையமாக மாறி விட்டமைக்கு யார் பொறுப்பு?

அதுசரி மாகாண சபை அதிகாரிகளுக்கு மாகாண சபையின் அதிகாரங்களை பயன்படுத்தி மக்களுக்கு சேவைசெய்வதில் அக்கறை இருக்க வேண்டும் என்று யார் சொன்னது?

# கனடாவில் கோஷ்டி மோதல்!

கனடாவில் ரொரொண்டோவில் வல்வெட் டித் துறையைச் சேர்ந்த ஒரு தமிழ் கோஷ்டிக்கும், ஏ.கே. கண்ணன் தலைமையிலான இன்னொரு தமிழ் கோஷ்டிக்குமிடையே போதைவஸ்து, ஆட்கடத்தல், கடத்தல், கொள்ளை போன்ற பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகக் கோஷ்டி மோதல் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் வன்முறைச் சம்பவங்களின் எதிரொலியாகப் பொது மக்களின் கண்டனங்கள் எழுந்துள்ளன. கனேடியப் பொலிஸார் நடவடிக்கையில் ஈடுபட்டு இக் கோஷ்டியினரை மடக்குவதில் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது. அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் பெயர்கள் பின் வருமாறு,

1. இரத்தினவேல் பிரகலாதன் (வயது 27) வல்வெட்டித்துறைக் கோஷ்டி.
2. சரவணன் யோகராஜா (வயது 19) ஏ.கே கண்ணன் கோஷ்டி.
3. சுரேஷ்குமார் நடராஜன் (வயது 20) ஏ.கே. கண்ணன் கோஷ்டி.
4. கோவிந்தராஸ் தில்லையம்பலம் (வயது 20) ஏ.கே. கண்ணன் கோஷ்டி.
5. அகிலேஸ்வரன் தில்லையம்பலம் (வயது 20)
6. சிவகரன் அரியரத்தினம் (வயது 22) ஏ.கே. கண்ணன் கோஷ்டி.
7. ஜயசீலன் துரைசிங்கம் (வயது 31) வல்வெல்டித்துறைக் கோஷ்டி.
8. அன்ரன் மனோராஜா முத்துராஜா (வயது 25).
9. மறினோ மகிழராஜன் (வயது 36) வல்வெல்டித்துறைக் கோஷ்டி.
10. ஜெயகாந்தன் கந்தசாமி (வயது 26) ஏ.கே. கண்ணன் கோஷ்டி.

# காதல் கடிதங்களைக் கேட்கிறாராம்!

மொரட்டுவ சொய்சாபுர வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகளுக்கு அழையா விருந்தாளியாக வந்து போகும் கல்கிஸ்சைப் பொலிசின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவரெனக் கூறப்படும் ரத்னாயக்க என்பவர் அடிக்கடி அங்குள்ள தமிழ் மக்களின் வீடுகளுக்குச் சென்று அவ் வீடுகளை அவர்கள் எவ்வாறு வாங்கினர்? எனவும் இவ்வளவு பணம் கொடுத்து யார்? எனவும் அவ்வாறு பணம் அனுப்பியதற்கான ஆதாரங்களைக் காட்டுமாறும் அடிக்கடி பொலிசுக்கு வருமாறும் வீட்டார்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறார். அவ் வீடுகளிலுள்ள ஆண்கள் தொழிலுக்குச் சென்றுள்ள பகல் வேளையிலேயே அங்கு வரும் அவர், வீட்டில் தனியாக இருக்கும் பெண்களிடம் இவ்வாறு கேள்விகள் கேட்டு தொல்லை கொடுப்பது அதிகரித்து வருகிறது. வெளிநாடு போகவே இங்கு வந்திருப்பதாகக் கூறும் பெண்களிடம் அவர்களது கணவன்மாரோ அல்லது காதலரோ எழுதிய கடிதங்களைத் தன்னிடம் காட்டச் சொல்லியும் தொல்லை கொடுப்பதும் ரத்நாயக்க என்ற இப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவருக்குக் கைவந்த கலையாகவுள்ளது

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன். 18/2. அலோ சாலை. கொழும்பு-03. அச்சுப் பதிவு : நவமக அச்சகம். 224. காலி வீதி. இரத்மலானை. 1997.04.22